கல்கி

பி.வி.ஆர் எழுதும்

மணக்கோலம்

மூன்றாவது பரிசு நாவல்

அடுத்த இதழில்
ஆரம்பமாகிறது







அவனுக்கு ஒவ்வொரு நாளும் இன்க்ரிமின்* கொடுங்கள்

தீவிரமான பசியைத் தூண்டவும், படிப்படியாக எடையை அதிகரிக்கவும்

இன்க்ரிமின்* செரி பழத்தின் மணம் நிறைந்தது! - லைசின் என்ற இன்றியமையாத பொருள் அடங்கியது. இந்தப் பொருள் உடல் நலத்திற்கு உகந்த பசியைத் தூண்டி, உணவின் முழுப்பயனையும் சிறந்த முறையில் பெற உடலுக்கு உதவுகிறது. இன்க்ரிமின்* சாப்பிட்டு வந்தால் உங்கள் குழந்தை வயிறாரச் சாப்பிடுவான். அவனுடைய எடையும் படிப்படியாக அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் அவனுக்கு இன்க்ரிமின்* கொடுங்கள்- அவன் மனமாரச் சாப்பிடுவதையும் வளர்ச்சியடைவதையும் கண்டு மகிழுங்கள்!

இன்க்ரிமின்* வளரும் குழந்தைகளுக்கெனவே உண்டாக்கப்பட்ட ஒரு லெடர்லி தயாரிப்பு.



இன்க்ரிமின்*... வளர்ச்சிக்கு மிகவும் சிறந்தது

நாள் ஒன்றுக்கு:
இன்க்ரிமின்* ட்ராப்ஸ் 10-20 துளிகள்.
இன்க்ரிமின்* சிரப்: ஒரு தேக்கரண்டி.

* ரிஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்

Lederle லெடர்லி* டிவிஷன் - ஸயனமிட் இந்தியா லிமிடெட் CYANAMID

நினைவுத் திரையில்....

ஆறு நிமிஷ நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்களை அழித்த அணுசக்தியைக் காட்டிலும் ஆறு நாட்களில் லட்சக்கணக்கானவர்களை அளவற்ற ஆபத்திலிருந்து காப்பாற்றிய ஆத்ம சக்தி எத்தனையோ மடங்கு மேலானதென்பதில் சந்தேகம் என்ன?



இன்றைய உலகில் ஆத்ம சக்தி அனுஷ்டான அசாத்தியமானது என்று கருதியவர்கள் பாரத நாட்டில் நிகழ்ந்துள்ள சம்பவங்களைக் கண்டு பிரமித்துப் போயிருக்கிறார்கள்.

உண்ணாவிரதத்தின் மூலம் மகாத்மா காந்தி பெற்றுள்ள வெற்றி அணுகுண்டைக் காட்டிலும் மகத்தான சக்தி ஒன்று இருக்கிறது என்பதை நிரூபிக்கிறது என்று பிரபல பிரிட்டிஷ் பத்திரிகை கூறுகிறது.

மகாத்மா 'காந்தியின் தவம்' வீண் போகவில்லை. டில்லியில் வகுப்பு வெறித் தீ அணைந்திருக்கிறது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தாங்கள் சகோதரர்கள் என்பதை உணர்ந்துகொண்டது மட்டுமல்ல; அந்த உண்மையைத் தெருத் தெருவாகச் சென்று கோஷித்தும் வருகிறார்கள்.

"தவம் பலித்தது" (தலையங்கம்)


கல்கி, ஜனவரி 25, 1948.

கல்கி

பொருளடக்கம்

பராபவ, பங்குனி 26 :: ஏப்ரல் 9

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



சர்க்கார்
கொள்முதல்தான்
தலைசிறந்த வழி
புதிய வழி
பழைய ஆட்சியின் ஆவி!
எனக்கா இத்தனை
பெரிய கால்சட்டை?
ஐயோ வேண்டாம்!
இன்றைய
இந்தியா
பெரியதிட்டம்
PK

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



மலர் 26 ❋ இதழ் 36

பொறுமைக்கு எல்லை உண்டு

காங்கிரஸின் பெரும்பான்மை பலம் குறைக்கப்பட்டுள்ளதால் இனியேனும் அது பகுத்தறிவுக்கும் விவேகத்துக்கும் பொருந்திய வழியைப் பின்பற்ற வேண்டும் என்று அறிஞர்கள் பலரும் கூறி வருகிறார்கள். ஆயினும் இவர்களது விருப்பம் நிறைவேறும் என்பதற்கு அழுத்தமான அறிகுறி ஏதும் காணப்படவில்லை. பாரத மக்கள் அளவுக்கு மீறிய பொறுமை யுடையவர்கள் என்பதைக் காங்கிரஸ் புரிந்து கொண்டு விட்டது. எனவே, தான் எதுவும் செய்யலாம் என்று ஆணவத்துடன் கருதுகிறது. சின்னாபின்னமாகி விட்ட காங்கிரஸ் கட்சி, தனது சிதைவோடு சேர்த்துப் பாரத தேசத்தையும் சின்னாபின்னமாக்க முயலுவதாகவே தோன்றுகிறது. தான் பலம் குன்றியுள்ள நிலையிலும் தேசத்தின் பலத்தைத் தன்னால் குறைக்க முடியும் என்று தீர்மானமாக அக்கட்சி நம்பியிருக்கிறது. இல்லாவிடில், புதிய சர்க்கார் அமைக்கப்பட்ட உடனேயே திட்டத்தின் பெருமளவு அம்சங்களை வெட்டி எறியவும், அதற்கேற்ப வரிகளைக் குறைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

மாறாக, நாம் கேள்விப்படுவதென்ன? 1967—68 என்கிற நிதி ஆண்டில் எப்படியேனும் 3100 கோடி ரூபாய் திரட்டியே ஆகவேண்டும் என்கிற உத்தேசம் இன்னமும் மொரார்ஜி தேசாயைக் கட்டுப்படுத்தி வருகிறதாம். அதாவது 1966—67 ஆண்டைவிட எழுநூறு கோடி ரூபாய் அதிகமாக அவர் திரட்டியாக வேண்டும். தேசத்தினால் இந்தப் பளுவை ஒரு காலும் தாங்க முடியாது. பணவீக்கம், வரி விதிப்பு, கடன்கள் யாவுமே எல்லை மீறி விட்டன. மக்கள் அன்றாட உபயோகத்துக்கான அத்தியாவசியப் பண்டங்கள் தவிர மற்றப் பொருட்களை வாங்குவதைத் தவிர்க்கத் தொடங்கும் தரித்திர நிலைமை ஏற்பட்டு விட்டதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். மக்களின் வாங்கும் சக்தி உயர்ந்திருப்பதாக நினைத்து, அதைக் குறைத்துச் சர்க்கார் கஜானாவுக்குத் திருப்பி விடலாம் என்று எண்ணுவதற்கு இனி இடமில்லை. சர்க்காரின் செலவுகளை வெகு கணிசமாகக் குறைப்பதும், எல்லா மட்டங்களிலும் வரிச் சுமையை இலேசாக்குவதும்தான் இன்று பொருளாதாரத்தை உயிர்ப்பிக்க ஒரே வழியாகும்.

"ஆனால் காங்கிரஸ்காரர்களோ, இன்னமும் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப மாறத் தயாராக இல்லை. வரிகளைக் குறைப்பது சோஷலிஸத்துக்கு விரோதமானது என்றும் எனவே அது ஒரு பாபம் என்றும் எண்ணுகிறார்கள். பொருளாதாரத்துக்கு என்ன நேர்ந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல், தனியார்தொழில் துறையின் மீதுள்ள வரிகளை ஸ்ரீ தேசாய் உயர்த்தினால் பல காங்கிரஸ்காரர்களின் இதயங்கள் துள்ளி மகிழும்."— இவ்வாறு 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' இன்றைய காங்கிரஸின் மனப்போக்கை அழகாகவும் அழுத்தமாகவும் எடுத்துக் காட்டியுள்ளது.

இடதுசாரிகளைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற காங்கிரஸின் கொள்கை மாறாமலிருக்கும் வரை தேசத்துக்குக் கதிமோட்சம் கிடைக்காது. இடதுசாரிக் கருத்தினரைக் காங்கிரஸ் செல்லப் பிள்ளைகளாகவே தட்டிக் கொடுத்து வளர்த்து விட்டது. சிறிய அளவினரே இவர்களைப் பின்பற்றினாலுங்கூட, அரசாங்கத்தை மிரட்டுவதிலும் அச்சுறுத்துவதிலும் இவர்களுக்குப் பெரும் சக்தி இருப்பதால் சமுதாய விரோதமான நாச காரியங்களைச் சர்க்காரின் மூலம் நன்கு சாதிக்க முடிகிறது. இவர்களைக் காங்கிரஸார் எவ்வளவுக்குத் திருப்திப் படுத்தி, அடிபணிகிறார்களோ அவ்வளவுக்கு இவர்கள் அரசாங்கத்தைக் கண்டனம் செய்வதும் உயர்கிறது. மேன்மேலும் இவர்களைச் சமாதானப்

படுத்த அரசாங்கம் விழைகிறது. இடதுசாரியுடன் இழைவதற்காகக் காங்கிரஸ் சர்க்கார் படும்பாடு பரிதாபமானது. புதிய மந்திரி சபை இந்த அவலமான முயற்சியைக் கைவிட்டு, இடதுசாரி — வலதுசாரி என்ற பேதங்களைப் பாராமல் தேச நலனுக்கு உகந்த காரியங்களையே செய்ய முற்படாவிடில் அடுத்த ஐந்தாண்டுகளுக்கும் நாடு தத்தளிக்க வேண்டியதுதான். இந்த நல்லுணர்ச்சி அரசாங்கத்துக்கு உண்டாகுமா? தேசத்தின் பொருளாதாரம் நாசத்தின் விளிம்புக்கு வந்துவிட்ட இன்றைய நிலையிலும் நாலாம் திட்டத்தின் நகலை விடாமல் பிடித்துக் கொண்டு, இன்னமும் ஆயிரமாயிரம் கோடி ரூபாய் திரட்ட முனைந்துள்ள ஸ்ரீ அசோக மேத்தா போன்றவர்கள் விவேகத்தின் பாதையைக் காண வாய்ப்பு உண்டா?

அடுத்த ஐந்தாண்டுகளுக்குமேல் இந்தப் போக்கை நாடு நிச்சயமாகப் பொறுத்துக் கொண்டிராது. மக்களின் சகிப்புத் தன்மைதான் இத்தனை காலமாகக் காங்கிரஸை ஆட்சியில் இருத்தி வந்திருக்கிறது. ரூபாய் இன்று அதன் பழைய மதிப்பில் பாதியாகி விட்டது என்று ஸ்ரீ சந்தானம் கூறுகிறார். மேலும் அதிகமாகவே அது மதிப்பிழந்து விட்டது என்று சொல்பவர்களும் உண்டு. இவ்வாறாகத் தமது வருமானத்தில் பாதியை — அல்லது பாதிக்கு மேற்பட்ட பங்கை — அரசாங்கம் விழுங்கிய பின்னரும் மக்கள் அமைதியாகத்தான் இருந்திருக்கிறார்கள். பெரும் அந்நியக் கடன்களைத் தீர்க்கத் தொடங்கும் போது இதுவரை இந்தியக் குடிமகனுக்கு ஏற்பட்டுள்ள பளுவைவிட அதிகமாகவே அவன் தாங்க வேண்டியிருக்கும். இருந்த போதிலும், அவன் எதற்கும் அமைதியாக இருப்பான் என்று நம்பித்தான் பாதுகாப்பு மந்திரி புதிதாகக் கோடாநு கோடி ரூபாய்களைத் தமது இலாகாவுக்கு எதிர்பார்க்கிறார். சர்க்காரின் சர்வாதிபத்தியத்தை விஸ்தரிக்கவே ஏற்பட்டுள்ள ஒவ்வோர் இலாகா மந்திரியும் உற்பத்திக்கு உதவாத வேலைகளில் ஈடுபட்டுள்ளோரின் பட்டாளத்தைப் பெருக்குவதும், அவர்களுக்கு இடமளிக்கப் புதுப்புதிதாகப் பிரம்மாண்டக் கட்டடங்களை எழுப்புவதும் இந்திய மக்களின் அமைதிப் பண்பைப் பயன்படுத்திக் கொண்டு தான். 'பெரிய கம்பெனிகளுக்கு வரி போடுகிறோம்', 'கொழுத்த பணக்காரர்களுக்கு வரி போடுகிறோம்' என்று சொல்லிக் கொண்டே ஆட்சியாளர்கள் எல்லா வரிகளின் சுமையையும் மறைமுகமாகப் பொது மக்கள் அனைவரின் மீதும் சுமத்தி வந்த போதிலும் நாம் அமைதியாகவே இருந்து வந்திருக்கிறோம். ஆயினும் இந்த வரிகளை மேலும் உயர்த்தினால், இதன் விளைவாக விலைவாசிகள் மேலும் ஏறினால் அப்போதும் மக்கள் காங்கிரஸாட்சியைச் சகித்துக் கொண்டிருப்பார்களா என்பதே கேள்வி.

இம்முறை காங்கிரஸுக்கு மக்கள் சபையில் எப்படியோ பெரும்பான்மை கிடைத்து விட்டது. நிதி ஒதுக்கீடு, உணவுதானியப் பரிவர்த்தனை என்ற இரு முக்கியமான கடிவாளங்களை மத்திய சர்க்கார் கையில் வைத்துக் கொண்டிருப்பதால் காங்கிரஸாட்சி மீண்டும் முன் போலவே ராஜ்ய சர்க்கார்களைக் கட்டுப்படுத்தக்கூடும். தனக்குச் சாதகமாகவே இருக்கக்கூடிய ஒருவரை ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்க முயன்று அதிலும் காங்கிரஸ் வெற்றிபெறக்கூடும். ஆயினும் மக்களின் சகிப்புத்தன்மை எல்லை கடந்தால் அடுத்த பட்டா நிச்சயமாகக் காங்கிரஸுக்குக் கிடைக்காது என்று நம்பலாம்.

எச்சரிக்கிறோம்!

புதிய தமிழக அரசாங்கம் நெல்லைக் கொள்முதலில் இறங்கியிருக்கிறது. இப்படிக் கொள்முதல் செய்வதால் உடனடியாக இரண்டு தீங்குகள் விளையும் என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். கொள்முதல் செய்யப்படும் நெல்லை நல்லபடி சேமித்து, பாதுகாத்துப் பிற்காலத்தில் மக்களுக்கு வழங்கப் போதிய வசதி சர்க்காருக்கு உள்ளதா என்பதே முதல் கேள்வி. சர்க்கார் சேமிப்புக் கிடங்குகளிலிருந்து ரேஷன் கடைகளுக்கு வரும் அரிசி மட்கியும், புழுத்தும், நாற்றம் பிடித்ததாகவுமே இருப்பதைக் கண்டிருக்கிறோம். இதற்குக் காரணம், ஒரு தனி மனிதன் தனது வீட்டில் சேமித்து வைத்து, அடிக்கடி வெய்யிலில் உலர்த்தி, சேதப்படாமல் பாதுகாப்பது போல் அரசாங்கத்தினால் செய்ய முடியாமலிருப்பதுதான்.

எல்லா ரக நெல்லும், அதாவது நன்றாகக் காய்ந்தது — பாதி காய்ந்தது என்றிருக்கும் பல வகையான நெல்லையும் ஒன்றாகச் சேமித்து, குத்தி, வழங்கினால் அந்த அரிசி எப்படி இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

பெரிய சர்க்கார் கிடங்குகளில் எலிகள் புகுந்து நிகழ்த்தும் சேதாரம் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறோம். மற்ற வகை சேதாரம் பற்றிச் சொல்லத் தேவையில்லை. இதை இப்பத்திரிகையில் பல்லாண்டுகளாக பல முறை எழுதியுள்ளோம்.

இந்த இனங்களில் நஷ்டம் ஏற்படும் தீங்கு ஒருபுறம் இருக்கட்டும். இன்னொரு தீங்கைப் பார்ப்போம். இப்படிக் கெடுபிடி செய்து, கொள்முதல் செய்வதால் எந்த விவசாயிக்கு உணவுஉற்பத்தி செய்வதில் ஊக்கம் பிறக்கும்?

நெல் சாகுபடி செய்பவர்கள் கன்ட்ரோல் விலையில் சர்க்காருக்கு விற்றுப் போதிய லாபம் சம்பாதிக்க முடியாமல் போனால், அதன்பின் அவர்கள் நெல்சாகுபடியைத் தொடர்ந்து செய்வார்களா? அதிக வருவாய் தரத்தக்க கரும்பு போன்ற பயிர்களை விளைவிக்கதான் மனம் போகும். ஏன், 'சர்க்கார் அதிகாரிகள் கொள்முதல் செய்ய முன்வராத பயிர் எது உண்டோ, அதை விளைவிப்போம் — அதனால் நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை' என்றும் சில சாகுபடியாளர்கள் கருதக்கூடும்.

அரசாங்கம் ஒரேயடியாகப் புரட்சிகரமாக இருந்து விட்டால் நம் மக்களின் நிதானப் பண்பாட்டுக்கு அது பிடிக்காதோ என்று எண்ணித்தான் பழைய அரசாங்கம் வகுத்த பாதையிலேயே செல்ல இன்றைய ஆட்சியினர் முற்படுகிறார்கள் போலும். ஆனால் பழைய அரசாங்கம் கடைப்பிடித்த தவறான வழி முறைகளையே, புது அரசாங்கம் கடைப்பிடித்து வந்தால் மக்களின் நலனை நிறைவேற்றுவது அசாத்தியம்.

அல்லது தமிழ்நாட்டுச் சர்க்கார் கொள் முதலில் தீவிரம் காட்டவில்லை என்று மத்திய அரசாங்கம் குற்றம்சாட்டக்கூடாதே என்ற ஆர்வத்தில் இப்போது இப்படித் தீவிரக் கொள்முதலில் இறங்கி இருக்கலாம்.

உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவதற் கான சூழ்நிலையை அரசாங்கம் உண்டாக்க வேண்டும். பண்ணையாட்களின் பேராதரவு, நிலவுடைமையாளர்களின் நல்லெண்ணம் ஆகிய இரண்டையும் பெற்ற தி. மு. க. அரசாங்கம் இருதரப்பினரையும் சௌஜன் யத்தை வளர்த்து, உற்பத்தி பெருகவும், தன்னிறைவு பெறவும் வழி காண முடியும்.

தி. மு. க. அரசாங்கம் வெற்றிபெற வேண் டும், நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் நாட்டில் எல்லாத் தரப்பு மக்களிடை யேயும் உள்ளது. இந்த அரிய மூலதனத்தைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

கட்டுப்பாடு செய்யும் நிர்வாக இயந் திரத்தை முடுக்கி விட்டால் அதிகாரிகள் ஆங் காங்கு அதிக்கிரமம் செய்ய வாய்ப்பு ஏற் படவே செய்யும். இதனால் மக்களுக்குக் கசப்பும், ஆட்சியாளர்களுக்குத் தர்மசங்கட மும் ஏற்படும். நயமாகவும் நாசூக்காகவும் செய்ய வேண்டிய காரியங்களில் அளவுக்கு மீறிய கண்டிப்பும், பலவந்தமும் காட்டினால் நோக்கமே பாழாகிவிடும்.

சமீபத்திய கொள்முதல் பற்றிக் கண்ட னங்கள் எழுந்தபின் முதன்மந்திரியும் உணவு மந்திரியும் வெளியிட்டுள்ள விளக்கங்களில் விவேகத்தின் தொடக்கத்தைக் காண்கிறோம். கண்ட்ரோல் என்பது 'ஓர் அவசியமான தீங்காகிவிட்டது' என்றும் இதனால்தான் பலவிதக் கட்டுப்பாடுகளை ஏற்க வேண்டி யிருந்ததென்றும் அவர்கள் கூறியுள்ளனர். கைவசம் நிறையத் தானிய இருப்பு உள்ள வர்கள் தாங்களாகவே முன்வந்து அதனை அரசாங்கத்துக்கு வழங்கவும் அவகாசம் அளித்திருக்கின்றனர். முதலிலேயே இப்படிச் செய்திருந்தால் தி.மு.க. அரசு எவ்வளவோ நல்ல பெயர் வாங்கியிருக்கும். நடந்தது நடந்து விட்டது. இப்போதும், இனிமேலும் அது உணவு உற்பத்திக்கு உதவும் நடவடிக் கைகளையே எடுக்க வேண்டும்.

ஒரு விஷயம் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மற்றப் பண்டங்களைப் போல உணவுப் பண்டங்களை நீண்ட காலம் பதுக்க இயற்கை இடம் தராது. கடும் கோடையில் பனிக்கட்டியைப் பதுக்கி வைக்க முடியுமா? சில பண்டங்கள் கடைக்கு வந்து தான் தீர வேண்டும். இதை மறந்துவிட்டு நெல்லும் அரிசியும் வைத்திருப்பவர்களைத் திருடர்களைப் போல் நடத்தக்கூடாது.


ஹாய்யாகப்
பருகுவீர்
ஆனந்தமான
ஒரு
பானம்!
GOLD SPOT
கோல்ட்
ஸ்பாட்

ராஜாஜியின் கருத்துக்கள்

நெருக்கடியான நிலைமைகளில் ஸ்ரீமதி இந்திராகாந்தி கட்சிகளுக்கு அப்பாற்பட்ட தேசத் தலைவராகப் பரிணமிக்கக்கூடும் என்ற நம்பிக்கையை இனி கைவிட வேண்டியது தான். மக்கள் சபையின் சபாநாயகர், உதவி சபாநாயகர் ஆகியவர்களின் தேர்தலில் அவர் நடந்து கொண்ட விதம் அவரிடம் வைத்த நம்பிக்கையைப் பொய்ப்பித்து விட்டது. அவரால் காங்கிரஸ் சிறையிலிருந்து விடுபட்டு வெளிவர முடியவில்லை.

மக்கள் சபையின் உதவி சபாநாயகர் தேர்தலில் பிரதமர் நடந்து கொண்டவிதம் பரிதாபத்துக்குரியது. நியமன நாளன்று நடுப்பகலுக்குச் சிறிது நேரத்துக்குப் பிற்பாடு எதிர்க்கட்சியினர் அனைவரும் தாங்கள் ஏகமனதாக விரும்பும் அபேட்சகரின் பெயரைத் தெரிவித்த பின்னரும், அவர் முதலில் சொன்னதற்கு மாறாக, அந்த அபேட்சகரையே காங்கிரஸும் ஏற்குமாறு செய்ய மறுத்து விட்டார். இது ஏன் என்று அநுமானிக்க இயலவில்லை. எதிர்க்கட்சியினரின் ஏகோபித்த முடிவை ஏற்பதாகப் பிரதமர் தந்திருந்த வாக்குறுதியை அவர் முறித்தது குறித்து எதிர்க்கட்சிகள் பெரிதும் வருத்தமும் ஏமாற்றமும் அடைந்திருப்பது நியாயமே.

இதே போல், சர்க்காரின் தவறான காரியங்களில் சக்தி வாய்ந்த விதத்தில் குறுக்கிட்டு உண்மையான அந்தஸ்து வகிக்கக் கூடிய விதத்தில் ராஷ்டிரபதி ஸ்தானம் உருவாக வேண்டும் என்று நம்பி வருபவர்களுக்கும் ஏமாற்றம் தரும் விதத்திலேயே அப்பதவிக்கு நியமனம் ஏற்படக்கூடும் எனத் தோன்றுகிறது.

ஃஃஃ

தி. மு. க. மந்திரிசபைக்கு ஆதரவாகத் தாம் ராஜ்யம் முழுவதிலும் பிரசாரம் செய்யப் போவதாகப் பெரியார் ராமசாமி நாயக்கர் அவர்கள் அறிவித்திருக்கிறார். இது தி. மு. க. மந்திரிசபையின் நல்ல பெயருக்கே கெடுதல் உண்டாக்கக்கூடிய ஓர் அபாயமான அறிவிப்பு. எல்லா மக்களுடைய அரவணைப்பையும் ஆதரவையும் பெற வேண்டிய இளசான செடிக்குத் தாமறியாமலே திரு பெரியார் தீங்கு விளைவித்து விடமாட்டார் என்று நம்புகிறேன். இதுவரை ஆட்சி ஸ்தானத்திலிருப்பவர்கள் யாராயிருப்பினும் சரி, அவர்களிடம் குறிப்பிட்ட அளவுக்குப் பிராமணத் துவேஷம் இருந்துவிட்டால் போதும், அவர்களைத் திரு பெரியார் ஆதரித்து வந்திருக்கிறார். துவேஷம் படைத்தவர்களை ஆதரிக்கிறார் என்று சொல்வது கடுமையாகத் தோன்றலாம். ஆனால் இவ்விஷயத்தில் திரு பெரியாரின் உணர்ச்சிகளைக் குறிப்பிட 'துவேஷம்' என்பதைவிட மிருதுவான வார்த்தை போதாது.

ஃஃஃ

கோயமுத்தூர் திரு வி. பி. சுப்பையா அவர்கள் காந்திய இயக்கத்தின் தமிழகத் தளபதிகளில் முக்கியமான ஒருவர். ஜஸ்டிஸ் கட்சியின் கோட்டையாக இருந்த கோவையைக் காந்தியக் காங்கிரஸின் பலம் வாய்ந்த முகாமாக மாற்றியவர் அவர். ஆரம்பத்திலிருந்தே அவர் என் கூட்டாளிகளில் முன் வரிசையில் இருந்தவர். அவரிடம் எவ்விஷயத்திலும் நம்பகமாகச் சார்ந்திருக்கலாம். பாறைபோல் உறுதி வாய்ந்தவர். மக்களிடம் மிகுந்த சக்தி பெற்றவர். எங்கள் எதிர்ப்பாளருக்கெல்லாம் அவரைக் கண்டாலே திகில்.

சில ஆண்டுகளுக்குமுன் அவர் அரசியல் சச்சரவுகளிலிருந்து ஓய்வுபெற்று வியாபாரத்தில் ஈடுபட்டார். என்றும் திரும்பி வாராதபடி இன்று மறைந்து விட்டார். ஆனாலும் சமீபத்துத் தேர்தல்கள் ஏற்படுத்திய மகத்தான மாறுதல்களைப் பார்க்கும் பாக்கியம் அவருக்கு இருந்தது. அவரது குடும்பத்துக்கு என் இதயபூர்வமான அநுதாபங்கள். விசுவாசமுள்ள கூட்டாளியாக இருந்ததோடு, நண்பராகவும் வழிகாட்டியாகவும் இருந்தவர் மறைந்து போனார்.



காமகோடியின் கருணை மொழி

ஒரு மாடு கண்ணாடியில் தன்னைப் பார்த்து விட்டு இன்னொரு மாடு இருப்பதாக நினைத்து அதை முட்டப் போகிறது. ஒரு மனிதன் தன் பிரதிபிம்பத்தைப் பார்க்கிறான். இன்னொரு மனிதன் இருக்கிறான் என்று அவன் நினைக்கிறானா? அதுவும் தானும் ஒரே பொருள் என்பது அவனுக்குத் தெரிந்து சாந்தமாக இருக்கிறான். இப்படித்தான், கண்ணாடிக்குள் தெரியும் பிம்பம் போல், எல்லாமாய் அல்லதுமாய் எங்கும் நிறைந்திருக்கிற பொருள் ஒன்று; அதுவே பரமாத்ம ஸ்வரூபம் என்று ஞானிகள் கண்டார்கள். இரண்டாவது வஸ்து ஒன்று இருந்தால் அதனிடம் ஆசை வரும். ஆசை வருவதனால் கோபம்வருகிறது. கோபம் வருவதனால் பாவங்களைச் செய்கிறோம். அதனால் ஜன்மம் உண்டாகிறது. எல்லாம் ஒன்று என்ற ஞானம் நமக்கு வந்துவிட்டால், அப்போது வேறு பொருள் இல்லை. எனவே ஆசை இல்லை, கோபம் இல்லை, அதனால் பாவங்கள் — காரியங்கள் இல்லை, ஜனனம் இல்லை.

தஸ்தாவேஜி எரிப்பு

தி. மு. க.வின் ஆட்சிதான் தமிழ் நாட்டில் ஏற்படும் என்று தெரிந்ததும் பழைய முதன் மந்திரி சில தஸ்தாவேஜிகளை எரிக்க உத்தரவிட்டது பற்றி வலுவான கண்டனங்கள் எழுந்துள்ளன. குறிப்பிட்ட தஸ்தாவேஜிகள் இன்றைய மந்திரிகளின் பார்வைக்கு வந்தால் அந்த தஸ்தாவேஜிகளுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பற்றி மந்திரிகளுக்குக் கெட்ட அபிப்பிராயம் உண்டாகி, அவர்களைப் பழிவாங்க முற்படுவார்கள் என்பதாலேயே அவற்றைக் கொளுத்த உத்தரவிட்டதாக ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் கூறியிருக்கிறார்.

ஆட்சியதிகாரத்தை நிச்சயமாக இழந்து விடப் போகிறோம் என்ற நிலையிலும் அவர் அரசாங்கச் சிப்பந்திகளின் மீது உத்தரவு பிறப்பித்தது பொருந்துமா என்பது சட்ட நிபுணர்கள் கவனிக்க வேண்டிய விஷயம். இது ஒருபுறமிருக்க இச்சம்பவத்தால் ராஜாஜி வலியுறுத்தி வரும் மூன்று விஷயங்கள் மேலும் உறுதியாகியுள்ளன.

தேர்தலுக்கு ஆறு மாதம் முன்பே கட்சிச் சார்புள்ள மந்திரி சபை ராஜிநாமா கொடுத்து விட வேண்டும் என்று அவர் வெகு காலமாகக் கூறிவருகிறார். இவ்வாறு மந்திரி சபை அதிகாரத்தைத் துறந்து விட்டால் அதன் பின் தேர்தல் முடிவு வெளியாகும் போது எந்த மந்திரியும் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க இம்மியும் இடமேயிராது.

'புது மந்திரி சபை அதிகாரிகளைப் பழி வாங்கக்கூடும்' என்று ஸ்ரீ பக்தவத்சலம் கூறியிருப்பதற்கும் முன்பே மருந்து கண்டு பிடித்து விட்டார் ராஜாஜி. சர்க்காரின் காரியங்களும் பொறுப்பும் வேறு. நிருவாகத்திலிருக்கும் அரசியல் கட்சி வேறு. போலீஸ் அதிகாரிகளை அரசியல் கட்சி விஷயங்களில் நுழையச் செய்வது தவறு. இந்தத் தவறான துஷ்பிரயோகத்தினால்தான் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் பயப்பட வேண்டிய காரணம் ஏற்பட்டது. போலீஸ் உத்தியோகஸ்தர்களை, ரகசிய போலீஸ் உட்பட, கட்சியின் முன்னேற்றத்துக்கோ தற்காப்புக்கோ பயன்படுத்தலாகாது.

அடுத்தபடியாக, சர்க்காரின் தலைமைப் பீடத்தில் உள்ளவர்கள் செய்யக் கூடிய தீங்குகளையும் சாமானிய மக்கள் தைரியமாக எடுத்துக் கூறிப் பரிகாரம் காண உதவியாக 'ஆம்பட்ஸ்மன்' என்பது போன்ற ஓர் உயர் அந்தஸ்து பெற்ற விசாரணை நிறுவனத்தை அமைக்க வேண்டும் என்பது ராஜாஜி அழுத்தமாகக் கூறி வருகிற விஷயம். ஸ்காண்டிநேவியா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் உள்ளது போல் இப்படிப்பட்ட ஒரு ஸ்தாபனம் இந்தியாவிலும் ஏற்பட்டால், அதிகாரிகளை மந்திரிகள் பழிவாங்கும் வாய்ப்பே வெகுவாகக் குறைந்துவிடும்.

ஆக, தஸ்தாவேஜி எரிப்புச் சம்பவம் ராஜாஜி விரும்பும் மூன்று சீர்திருத்தங்களின் அவசியத்தை ஆணித்தரமாக நிரூபித்து விட்டது.

எது எப்படியாயினும் நிருவாகத்தைச் சேர்ந்த ''பைல்''கள் நாட்டு நிருவாகச் சொத்தாகும். அதை ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் சொல்லும் காரணத்தைக் கொண்டு எரித்து விடுவது பெருங்குற்றமாகும். எந்த முதன் மந்திரிக்கும் இத்தகைய தஸ்தாவேஜி எரித்தல் உத்தரவு செய்வதற்கு உரிமை இல்லை. ஆங்கில ஆட்சி காலத்தில் ''பைல்''கள் எரிக்கப்பட்டன என்பதற்கு யாதொரு சான்றுமில்லை. சில ''பைல்''களை வேறு இடத்தில் வைத்தார்களே ஒழிய கட்டுப் போகவிடவில்லை என்பதுதான் நமக்குத் தெரிந்த அளவுக்கு நடந்த விஷயம்.





பெண்மைக்குப் பெருமை!

நாடகத்துக்குத் தலைமை தாங்கிய நீதிபதிக்கு ஒரே பரவசம். நாடகம் முடிந்த பிறகும் உட்கார்ந்திருந்த அவர், நிர்வாகியைப் பார்த்து, "கதாநாயகியாக நடித்த பெண்ணைக் கொஞ்சம் கூப்பிடும்! நாலு வார்த்தை மனதாரப் பாராட்டணும்! யார் வீட்டுப் பெண் அவள்?" என்று உற்சாகமாகக் கேட்டார்.

நிர்வாகி திடுக்கிட்டார். தயங்கினார். பிறகு மரியாதையுடன், "கதாநாயகியாக நடித்தது பெண் இல்லை சார்! பையன்" என்றார்.

இப்போது திடுக்கிடும் முறை நீதிபதிக்கு வந்தது. "என்ன! அந்த வேடம் போட்டுக் கொண்டது பெண் இல்லையா? என் கண்கள்தான் ஏமாந்தன என்றால் என் காதுகள்கூடவா என்னை ஏமாற்றிவிட்டன? அந்தப் பையன் குரலில்கூடப் பெண்மை பொங்கி வழிந்ததே! ஊஹூம், நான் நம்பத் தயாரில்லை! நீங்கள் தமாஷ் பண்ணுகிறீர்கள்?" என்றார் நீதிபதி.

டோபாவைக் கழற்றிவிட்டு மேக்கப்பைப் பாதி அழித்துவிட்டிருந்த அந்த இளைஞனைக் கொண்டு வந்து நிறுத்திய பிறகுதான் அவருக்குத் தன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள முடிந்தது. அதையும் அரைமனத்தோடுதான் செய்தார். அப்புறம் முழுமனத்தோடு அந்த இளைஞனின் அற்புதமான வேடப் பொருத்தத்துக்காகப் பாராட்டினார்.

அந்த நீதிபதி காலஞ்சென்ற ஜஸ்டிஸ் ஏ. எஸ். பி. ஐயர். அன்று அவர் முன் நின்ற பெண்வேடதாரி பி. என். குமார்.

அந்த நாளையத் தொழில் நாடக நடிகர் கே. எஸ். அனந்தநாராயண ஐயரைப் பற்றிக் கதை கதையாகச் சொல்லுவார்கள். அனந்தநாராயண ஐயர் கதாநாயகியாக மேடையில் தோன்றி விட்டால், நாடகம் பார்க்க வந்திருக்கும் பெண்மணிகளிடமிருந்து பொறாமைப் பெருமூச்சும் ஆனந்தப் பெருமூச்சும் சேர்ந்தாற்போல் எழுமாம்! அத்தனை பிரமாதமாக இருக்குமாம் வேடப் பொருத்தமும் நடிப்பும்.

இன்று அமெச்சூர் நாடக மேடையில் அடிக்கடி பெண் வேடங்களில் தோன்றும் இளைஞர் குமார், விவேகானந்தா கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர். பெசண்ட் ஹைஸ்கூலில் படித்த போதே கலாக்ஷேத்ராவில் பரதநாட்டியமும் பயின்றார். விவேகானந்தா கல்லூரியில் நாடக ஆர்வம் வளர்ந்தது.

கல்லூரிகளுக்கான நாடகப் போட்டி சென்னை மாநிலக் கல்லூரியில் நடந்து கொண்டிருந்தது. விவேகானந்தா கல்லூரிக் குழுவினர் 'வேடதாரி' என்னும் நாடகத்தை நடித்தனர். அதில் குமாருக்கு 'மீனு' என்ற பெயருள்ள கதாநாயகி பாத்திரம்.

நாடகம் தொடங்கியது. அரங்கத்தில் மாணவ ரசிகர் கூட்டம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. மேடையில் மீனு தோன்றி

றான். அவ்வளவுதான்! அவன் அழகில் மாணவர்கள் சொக்கிப் போய்விட்டார்கள். அந்தச் சொக்கலின் விளைவாக ஒரே பாராட்டு, ஆரவாரம்! காகித அம்புகள் அன்பின் அறிகுறியாக மேடையை நோக்கி நூற்றுக்கணக்கில் பறந்தன.

இந்த ஆரவாரத்தில் மற்ற நடிகர்களின் சம்பாஷணை எப்படி எடுபடும்? மீனுவின் தந்தையாக நடித்த வி. ஆர். சீனிவாசன், சமயோசிதமாக, 'இந்தாம்மா மீனு! நீ உள்ளே போய் இரு! இவர்களுடன் பேசி விட்டு உன்னைக் கூப்பிடுகிறேன்'' என்று நிலைமையைச் சமாளிக்கப் பார்த்தார்.

''டேய், மீனு! இருக்கட்டும்!'' என்ற ஆக்ஞைக் குரல் ரசிகமணிகளிடமிருந்து எழுந்தது. மீனு என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தாள்.

''மீனு!..... உன் அப்பா நான் சொல்றேன்! போ, உள்ளே!'' என்று தகப்பனார் வேடம் போட்டவர் கர்ஜித்தார். நாடகம் மேற்கொண்டு நடந்து பரிசு பெற வேண்டுமே என்ற கவலை அவருக்கு.

மீனு உள்ளே போய் விட்டாள். முன்பு அன்பினால் எழும்பிய காகித அம்புகள் இப்போது ஆத்திரத்தின் வேகத்துடன் அப்பாக்காரரையே தாக்கின!

குமாரின் மோகன வேடப் பொருத்தத்துக்கு இந்த ஓர் உதாரணம் போதாதோ?

கல்லூரி நாட்களிலேயே அவசியத்தை முன்னிட்டுப் பெண் வேடம் தாங்க ஆரம்பித்த குமார், கல்லூரியை விட்டு வெளியே வந்த பிறகு, நகரத்திலுள்ள பல அமெச்சூர் நாடகக் குழுக்களில் கதாநாயகியாகத் தோன்ற ஆரம்பித்தார்.

அமரர் கல்கியின் 'சிவகாமியின் சபத'த்தை நாடகமாக்கி மேடையேற்ற ஏற்பாடு செய்த டாக்டர் ராமமூர்த்தி குமாரையே சிவகாமியாகத் தேர்ந்தெடுத்தார். குமாரின் நடனப் பயிற்சி இந்தப் பாத்திரத்துக்கு வெகுவாக உதவி செய்தது. குமார் சிவகாமியாகத் தோன்றி ரசிகர்கள் மனத்தில் நல்லதோர் இடம் பிடித்துக் கொண்டார்.

''எனக்கு இந்த அமெச்சூர் நாடகத் துறையில், அநுபவம் நிறைந்த பல பழைய, புதிய டைரக்டர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. நான் ஏற்கும் பாத்திரங்களின் தன்மையை நன்கு புரிந்து கொள்ள அவர்கள் உதவுகிறார்கள். நான் நன்றாக நடிக்கிறேன் என்றால் அதற்கு அவர்களும் பொறுப்பு'' என்று அடக்கத்துடன் சொல்லும் இந்த இளைஞருக்கு ஆண் பாத்திரமும் நன்றாகப் பொருந்துகிறது. சகுந்தலைக்கு ஈடான பல கதாநாயகிகள் பாகத்தில் மேடையில் தோன்றும் இவர், காளிதாசனின் சம்ஸ்கிருத சாகுந்தலத்தில் துஷ்யந்தனாகவே தோன்றி உஜ்ஜயினி வரை போய்ப் பரிசைத் தட்டிக் கொண்டு வந்திருக்கிறார். சம்ஸ்கிருதப் பேராசிரியர் டாக்டர் ராகவனின் முயற்சி இது! சமீப காலமாகப் பெண் வேடம் போட இடையூறாக இவர் குரல் உடைந்து 'மக்கர்' செய்கிறது.

ஆனாலும் குமாரை மேடையில் ஆண் வேடத்தில் பார்க்கும்போதுகூட, பழக்கப்பட்டவர்கள் மனத்தில் நளினமும் மென்மையும் தோன்றுகின்றன என்றால், அவர் அத்தகைய பெண் வேடங்களில் தன்னை மறந்து லயித்து விடுவதே காரணம்.

ஒரு சந்தர்ப்பத்தில் தேவனின் 'கல்யாணி' நாடகத்துக்கு நாடக விற்பன்னர் வி. சி. கோபாலரத்தினம் வந்திருந்தார். குமார் 'கல்யாணி' பாத்திரம் தாங்கி நடித்துக் கொண்டிருந்தார். நாடகம் முடியும் தறுவாயில் மேடையில் வந்து பேசிய வி. சி. ஜி. தமக்கே உரித்தான பாணியில், 'நான் கல்யாணியைப் பாராட்டத் தயாரில்லை! ஆனால் அவருக்கு நிஜ வாழ்க்கையில் இப்படி ஓர் அழகான மனைவி கிடைப்பாளோ கிடைக்க மாட்டாளோ, எனக்குத் தெரியாது. ஆனால் இன்றைய நாடகத்தில் இப்படி ஒரு வனப்புள்ள மனைவி அவருக்கு வாய்த்திருப்பதற்காக அவர் அதிர்ஷ்டத்தைப் பாராட்டுகிறேன்'' என்றார்.


பொருளாதாரத்தில் எம். ஏ. பட்டம் பெற்று வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் பணியாற்றும் இளைஞர் குமார், பெண் வேடம் தாங்குவதில் அதைவிடப் பெரிய பட்டம் பெறத் தகுதி உடையவர்தான் என்று தயங்காமல் சொல்லலாம்!

— கோமதி ஸ்வாமிநாதன்





நவீன வாழ்க்கைக்கு ஏற்றது நெஸ்கா:பே





நெஸ்காஃபே மட்டும்தான் அலாதி சுவையின்பத்தை அளிக்கவல்லது



தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னிந்திய ப்ளான்டேஷன் பீபெரி காபிக்கொட்டையைப் பதமாக வறுத்து அதன் இயல்பான மணம் கெடாமல் தயாரிக்கப் பட்டதுதான் நெஸ்கா:பே — உடனே கரையக்கூடிய நூற்றுக்கு நூறு அசல் காபி! ஒரே ஸமயத்தில் தனித்தனியாக 'ஸ்ட்ராங்'காகவோ 'லைட்'டாகவோ காபியைத் தயாரிக்கமுடிவதால் நெஸ்கா:பே மிகவும் சிக்கனமானதும்கூட!

NESTLÉ
ஒரு நெஸ்லே தயாரிப்பு

5 விநாடிகளில் தயார்!
ஒரு முழு டீஸ்பூன் நெஸ்காஃபேயை கோப்பையில் போட்டு வெந்நீரை ஊற்றி ருசிக்கேற்றபடி சர்க்கரையும் பாலும் சேர்க்க வேண்டியது தான். காபி தயார்!

NESCAFÉ*

ISI

நெஸ்கா:பே — தனிச்சிறப்புள்ள தரமான காபி

*நெஸ்கா:பே என்பது நெஸ்லேயின் இன்ஸ்டன்ட் காபியைக் குறிக்கும் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்

JWT-NCE-5144 A

கல்லுக்குள் ஈரம்

அத்தியாயம் 18

கல்லும் கசிந்தது!

சென்னைக் கடற் கரையில் அந்தி வேளையில் ரங்கமணியும், அவனுடைய இதயராணியும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களைப் பார்க்க வருவது போல் கீழ் வானில் பூரண நிலவு உதயமாகியிருக்கிறது. அப்பொழுது அவனுடைய கை, அவளுடைய கைக்குள் அடங்கியிருக்கிறது. தன் விரலில் கிடந்த மரகதக் கல் பதித்த மோதிரத்தை அவள் விரலில் சூட்டுகிறான். பிறகு தன் விரலில் சூட்டப்பட்ட மோதிரத்தைப் பார்க்கிறான். நிலவொளியில் பச்சைக் கல் அவனைப் பார்த்துக் கண் சிமிட்டுகிறது. "இந்த மாதிரி என் நினைவு என்றும் பசுமையாகவே இருக்குமா?" — அவள் கேட்கிறாள்.

"ஓ...! அதற்காகத்தான் பச்சைக் கல் மோதிரத்தை என் விரலில் போட்டாயா? ராணி, இந்த மரகதம் மங்கினாலும் மங்கலாம்; உன் நினைவு மங்குமா...?" என்கிறான் ரங்கமணி. இருவர் பார்வையும் சந்திக்கின்றன. பார்வை இரண்டும் ஒன்றுக்குள் ஒன்று புகுந்து ஒன்றாகி விடுகின்றன. இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது நிலவு.

பழைய நினைவின் அழுத்தத்தால் ரங்கமணி நீண்ட பெருமூச்சு விட்டான். கையில் கிடந்த மோதிரத்தையே அவன் வெறிக்கப் பார்த்தான்.

"உன் நினைவு எப்போதும் பசுமையாகத்தான் இருக்கும். என் இதயத்தில் என்றுமே நீ ராணியாகத்தான் இருப்பாய்" என்று தனக்குள்ளேயே முனகிக் கொண்டான்.



வெள்ளி விழா இரண்டாவது பரிசு நாவல்!

அப்போது உள்ளே யாரோ வரும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான். திரிவேணி வந்து கொண்டிருந்தாள்.

"சாப்பிட வராமல் என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே அவன் பக்கத்தில் வந்தாள்.

"மோதிரம் அழகாயிருக்கிறதே! பச்சைக் கல் பிரமாதமாக இருக்கிறது. எப்போது வாங்கினீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே ரங்கமணியின் விரலில் கிடந்த மோதிரத்தை உற்றுப் பார்த்தாள்.

ர. சு. நல்லபெருமாள்

''முன்பே உள்ளதுதான். விரலில் போடாமல் இருந்தேன்'' என்றான் ரங்கமணி.

''உங்கள் கைக்கு மிகவும் அழகாக இருக்கிறது. உண்மையிலேயே இது மோதிரம்தானா அல்லது மோதிரத்துக்குள் ஏதாவது இரகசியம் அடங்கி யிருக்கிறதா?'' என்று கேட்டுவிட்டுக் குறும்பாக அவனைப் பார்த்தாள் திரிவேணி. இதைக் கேட்டு ரங்கமணி திடுக்கிட்டான்.

''இரகசியமா? இதில் என்ன இரகசியம்?''

''புரட்சிக்காரராயிற்றே, மோதிரத்துக்குள்ளும் ஏதாவது பயங் கரச் சதி ஒளிந்திருக்கும்'' என்றாள்.

''ஓஹோ... அதுவா...?'' என்று இழுத்தவாறு கூறிவிட்டுச் சிரித்துக் கொண்டான்.

''சாப்பிட வாருங்கள்'' என்று கூறிவிட்டுத் திரிவேணி வாசலை நோக்கி நடந்தாள். ரங்கமணி அவளைத் தொடர்ந்தான். அவன் மனமோ மோதிரத்தைத் தொடர்ந்தது.

'இது இரகசியம் நிறைந்த மோதிரம்தான். நெஞ்சத்தில் அடங்கிக் கிடக்கும் இனிய நினைவெல்லாம் இந்த மோதிரத்தில்தான் இரகசியமாக அடங்கிக் கிடக்கின்றன' — அவன் மனம் பேசிக் கொண்டது. மோதி ரத்தை அளவு மீறிய ஆவலுடன் ஒரு முறை பார்த்துக் கொண்டான்.


காலையில் அச்சாபீசுக்குப் புறப்பட்டபோது வாசல் வரை வந்து வழியனுப்பினாள் திரிவேணி.

''மத்தியானம் சாப்பிட வர மறந்து விடாதீர்கள். காத்துக் கொண்டிருப்பேன்'' என்றாள். அவளை ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்தான். அவளுடைய பார்வை அவன் இதயத்தில் எதையோ தேடுவது போல் அவன் மனத்தைக் குறுகுறுக்க வைத்தது. ஒரு கணந்தான் அவள் பார்வை, அப்படி அவனைத் துளைத்தது. பிறகு தரையை நோக்கினாள். அந்த ஒரு கணத்துக்குள் ரங்கமணி திக்குமுக்காடிப் போனான். அந்தச் சமயத்தில் நல்ல வேளையாக தீக்ஷிதர் வந்து சேரவே சமாளித்துக் கொண்டான்.

இன்று அவனுக்கு என்ன நேர்ந்து விட்டது? மனம் ஏன் குறும்பு செய்கிறது? எதையெல்லாமோ நினைத்துக் கொண்டு புது வியாக்கி யானத்தில் அல்லவா இறங்கி விட்டது! உண்மையிலேயே மனம் தன்னையே ஏமாற்றுகிறதா....?


ரங்கமணியின் மனம்! அது அவனுக்கு அடங்கியது. தன் இச்சையில் எதையும் நினைத்துக் கொண்டு ஆட்டம் போடும் உரிமையும் அதற்குக் கிடையாது. தன்மையும் அதுவல்ல. ஆனால் 'கடந்த கால நினைவின் அழுத்தம் அவன் மனத்தைக் கொஞ்சம் நெகிழ வைத்திருந்தது. அந்தப் பலவீனத்தில் மனம் ஏதேதோ நினைத்துக் கொண்டு தன் போக்கில் வியாக்கியானம் செய்துகொண்டது. இல்லையென்றால், திரிவேணியின் கனிந்த பார்வையில் அவன் கண்கள் படபடப்பானேன்? ஒரு கணம்தான் அப்படி. மறு கணம் அவன் மனம் புடம் போட்ட தங்கமாகி விட்டது. ஆண் மீது பெண் வைக்கும் பாசத்துக்கெல்லாம் ஒரே ஒரு அர்த்தம்தான் உண்டு என்று குறும்புத்தனமாக விளக்கம் செய்ய முயன்ற தன்னை நினைத்துச் சிரித்துக் கொண்டான். மோதிரத்தை ஆர்வத்தோடு உற்றுப் பார்த்தான். அதில் அவனுடைய ராணியின் முகம்தான் தெரிந்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமை. அச்சகத்துக்கு விடு முறை நாள். வெளிக்



கதவு சாத்தியிருந்தது. தெருவை ஒட்டியிருந்த சன்னல் கதவும் சாத்தியிருந்தது. ஆனால், அச்சு நிலையத்துக்குள் ஆசிரியரின் அறையில் அந்த நிலையத்தைச் சேர்ந்த எல்லாரும் அமர்ந்திருந்தனர். ஒரு பெரிய மேஜைக்குப் பக்கத்தில் சர்தார் சொக்கலிங்கம் பின்னே ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரே மேஜையின் மறு பக்கத்தில் ரங்கமணியைத் தவிர மற்ற அனைவரும் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். ஏதோ ஒரு விஷயத்தை மிகுந்த அக்கறையுடன் கவனிப்பதாகத் தோன்றியது. சர்தார் பேசினார்:

''இது ஒரு நல்ல சந்தர்ப்பம். கிரிப்ஸ் இன்னும் ஒரு வாரத்தில் டில்லிக்கு வருகிறார். எல்லாருடைய கவனமும் அவர்மீதுதான் இருக்



ரும். அந்தச் சமயத்தில் நம்முடைய காரியத்தைச் சாதித்துவிடலாம். யாரை அனுப்பலாம்?''

எல்லோரும் பதில் கூறாமல் ஒருசில நிமிஷங்கள் சர்தாரையே பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சர்தார் மீண்டும் பேசினார்: ''மிருந்த ஆலோசனைக்குப் பிறகு நாம் முடிவுகட்ட வேண்டிய விஷயம். கவனமாகக் கேட்க வேண்டும். டில்லியில் நமக்கு உதவ ஆட்கள் இருக்கிறார்கள். முதலில் அவர்களைச் சந்திக்க வேண்டும். பரம இரகசியமாக இருக்க வேண்டும். சிறிது அஜாக்கிரதையாக இருந்தாலும் காரியம் முழுவதும் கெட்டுவிடும். உங்களில் யார் சென்றாலும் நம்முடைய பத்திரிகையின் நிருபர் என்ற முறையில் செல்ல வேண்டும். கிரிப்ஸினுடைய வருகையைக் காரணம் காட்டித்தான் டில்லியில் தங்கவேண்டும். அதே சமயம் நம்முடைய வேலையும் முடித்து விடவேண்டும். சுபாஷ் சந்திர போஸிடமிருந்து இரகசியச் செய்தியும் அறிந்து வரவேண்டும். இதற்கெல்லாம் டில்லி நண்பர்கள் உதவுவார்கள். அவர்கள் கொடுக்கும் ரேடியோ ஒலிபரப்புக் கருவியை இரகசியமாக இங்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டும். இதுதான் முக்கியமான வேலை.''

சர்தார் பேசி நிறுத்தியதும் அந்த அறையில் சில நிமிஷங்களுக்கு மௌனத்தின் அழுத்தமிருந்தது.

''மீனாட்சி நாதனை அனுப்பலாம்'' என்றான் முத்து.

''இந்த முரடனை அனுப்பினால் காரியம் நடைபெறாது. யார் மீதாவது குண்டு எறிய வேண்டியிருந்தால் அனுப்பலாம்'' என்றான் மாணிக்கம், தன் மீசையை முறுக்கிக் கொண்டே. மீனாட்சிநாதன் சிரித்தான்.

''ஏன் மாணிக்கம் போகட்டுமே'' என்றான் மீனாட்சிநாதன்.

''இவன் மீசையே இவனைக் காட்டிக் கொடுத்துவிடும்.'' என்றான் நாகலிங்கம்.

''ஆ... உன் ஹிட்லர் மீசையை விடவா என் மீசை ஆபத்தை உண்டாக்கி விடும்?'' என்றான் மாணிக்கம். எல்லாரும் சிரித்தார்கள்.

''மந்திரத்தை அனுப்பலாம். அவனுக்கு ரேடியோ ஒலிபரப்புக் கருவியின் சூட்சுமம் தெரியும்'' என்றான் முத்து.

''ஓ... நான் தயார்'' என்றான் மந்திரம்.

''ஊஹூம்... நீ வேண்டாம். இது ஆபத்து நிறைந்தது. கொஞ்சம் கூடச் சந்தேகம் இல்லாமல் நடந்து கொள்ள வேண்டும். உனக்குப் பொறுமை கிடையாது. சிறிது காலதாமதமானாலும் உனக்கு எரிச்சல் வந்துவிடும்....'' என்றார் சர்தார்.

''இந்த வேலைக்குப் பொருத்தமானவன் ரங்கமணிதான். அவனை அனுப்பினால் கச்சிதமாக வேலையை முடித்துக் கொண்டு வந்து விடுவான்'' என்றான் சோமு.

சிறிது நேரம் மீண்டும் மௌனம் குடி கொண்டது. எல்லோருடைய மனத்திலும் ரங்கமணி நிழலாடினான். ரங்கமணி மீது அனைவருக்கும் பற்றும் மரியாதையும் இருந்தது. அந்தக் கூட்டத்தோடு சேர்ந்து மூன்று மாதங்களுக்குள் அவனுள் அடங்கிக் கிடந்த திறமையை மற்றவர்கள் உணர்ந்து கொண்டார்கள். அவனுடைய சுறுசுறுப்பும், ஆழ்ந்த சிந்தனையும், எதையும் தன்னுள்ளேயே மறைத்துவிடும் மன அழுத்தமும், செய்யும் காரியத்தில் பூரணத்துவத்தை எட்டிவிட வேண்டும் என்ற துடிப்பும், நிறைந்த பெருந்தன்மையும் யாரையும் கவர்ந்துவிடும் மலர்ந்த முகமும் எல்லாரையும் ஆட்கொண்டு விட்டன. சர்தாருக்கு அடுத்தபடியாக எல்லோருமே அவனையும் ஒரு தலைவனாகவே நினைக்கத் தொடங்கி விருந்தனர். சர்தார் சொக்கலிங்கம் பின்னேயும் ரங்கமணியை எடை போட்டு வைத்திருந்தார்.

''யோசிக்க வேண்டாம். அவனை அனுப்பினால் காரியம் வெற்றி பெறும்'' என்று மீண்டும் சொன்னான் சோமு. எல்லாரும் சர்தாரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''அனுப்பலாம். சில சமயங்களில் உணர்ச்சிவசப்பட்டு விடுவான். எது நடந்தாலும் நமக்கென்ன என்று இருந்துவிட மாட்டான். அவனிடத்தில் அது ஒரு குறைதான். முத்து, ஞாபகம் இருக்கிறதா? போன மாதம் நாம் திருச்சிக்குப் போயிருந்தபோது பஸ்ஸ்டாண்டில் சண்டைக்குப் போய்விட்டானே'' என்றார் சர்தார்.

''உம்... யாரோ ஒரு முரட்டுப் பிச்சைக்காரியை ஒருத்தன் கீழே தள்ளி விட்டான். அவ்வளவுதான். அந்த ஆசாமி மீது பாய்ந்து விட்டான், ரங்கமணி. நல்ல வேளை, பக்கத்தில் நாங்கள் இருந்தோம். ஒன்றும் நிகழாமல் பார்த்துக் கொண்டோம்'' என்றான் முத்து. எல்லோரும் அக்கறையுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''நம்ம ஐயா அவனை இது விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கும்படி கூறி அனுப்பினால் சரியாகி விடும்'' என்றான் சோமு.

''துணைக்கு யாராவது கூடப் போகலாமே'' என்றான் நீலகண்டன்.

''ஊஹூம். தனியாகத்தான் போக வேண்டும்'' என்றார் சர்தார்.

''ஐயா, ஒரு விஷயம்'' என்றான் காசிலிங்கம்.

''சொல்லேன்'' என்றார் சர்தார். எல்லாரும் காசிலிங்கத்தையே பார்த்தார்கள்.

''தாங்கள் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது....'' என்று கூறித் தயங்கினான் காசிலிங்கம். எல்லாரும் வியப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''நீ எதை வேண்டுமானாலும் கூறலாம். நம்முடைய கூட்டத்தில் இந்தச் சுதந்திரம் எல்லோருக்கும் உண்டு. ஏற்படும் சந்தேகத்தை மனத்தில் ஒளிய விட்டுக் கொண்டிருக்கக் கூடாது'' என்றார் சர்தார்.

''அஹிம்ஸா தத்துவத்துக்கும் தீவிரக் கொள்கைக்கும் இடையில் நின்று ரங்கமணி தவிக்கிறான். அவன் மனம் இதில் ஒருநிலைப் படவில்லை'' என்றான் காசிலிங்கம். சர்தாரின் உதட்டில் புன்னகை அரும்பியது. காசிலிங்கத்தின் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு சொன்னார்:

''ரங்கமணியைத் துல்லியமாகக் கணித்து வைத்திருக்கிறாயே! நீ சொல்வது உண்மைதான். ஆனால் அவன் சிந்தையில் கடைசியில்

தம்பி ஆட்கொள்வது தீவிரக் கொள்கை தான்.''

''திரிவேணியின் செல்வாக்கில் அமிழ்ந்து விடுவானோ என்று பயப்படுகிறேன். அவனுடைய அஹிம்ஸா வாதம் அவனைத் திணறடிக்கிறது. அவன்... அவன்...'' — ஏதோ சொல்ல வந்து, மேலே சொல்லாமல் தயங்கினான் காசிலிங்கம்.

''சொல்லு, வெளிப்படையாகச் சொல்லி விடு. எதையும் ஒளிக்காதே'' என்று அவனைத் தூண்டினார் சர்தார்.

''திரிவேணியிடம் அவன் நெருங்கிப் பழகாமல் இருப்பதே நல்லது.'' என்றான் காசிலிங்கம். இதைக் கேட்டு சர்தார் சிரித்தார். மற்றவர்கள் திகைத்தார்கள். ''நீ நினைக்கும் அளவுக்கு ரங்கமணி ஒரு குழந்தை அல்ல. திரிவேணியின் தொடர்பால் அவன் மனம் அஹிம்ஸைக்குத் திரும்பினாலும், அவனைப் பயங்கரவாதியாக மாற்ற என்னால் முடியும். மேலும் அவனால் அஹிம்ஸாவாதியாக மாறவே முடியாது. அவனுடைய வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம், வெள்ளைக்காரன் விஷயத்தில் அவனைச் சாதுவாக இருக்க விடாது. வெள்ளைக்காரனைப் பழிவாங்கும் துடிப்பு அவனிடம் எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அந்த வேகத்தினால்தான் நம்முடைய கூட்டத்தில் சேர்ந்திருக்கிறான். இல்லையென்றால் என்றோ வார்தா சந்நியாசியுடன் சேர்ந்து ஊர் சுற்றிக் கொண்டிருந்திருப்பான். அவனை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்று கூறிக் கொண்டே காசிலிங்கத்தின் தோளைத் தட்டிக் கொடுத்தார் சர்தார் சொக்கலிங்கம் பிள்ளை.

''ஐயா!'' — நீலகண்டன் மெதுவாகக் கூப்பிட்டான்.

''சொல்லு'' என்றான் சர்தார்.

''திரிவேணியை நம் பக்கம் இழுக்க முடியாதா?''

''திரிவேணி நமக்கு ஒரு கேடயம் மாதிரி. அவளால்தான் நாம் தப்பித்துக் கொண்டிருக்கிறோம். அவள் அஹிம்ஸாவாதியாக இருப்பதனால்தான் நாம் அவளைத் தூற்றிக் கொண்டு போலீசின் கண்களுக்கு நல்லவர்களாகத் தோன்றிக் கொண்டிருக்கிறோம். போலீஸ் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா? திரிவேணியின் அப்பாவுக்கே அவளுடைய கொள்கை பிடிக்காது; காந்தியைத் தீவிரமாக சர்தார் தாக்கிப் பேசுகிறார்' என்று பெயர் எடுத்துவிட்டேன். இதனால்தான் நம் மீது போலீசுக்கு இன்னும் சந்தேகம் விழவில்லை. திரிவேணியை நம் பக்கம் இழுத்தால் நம்முடைய குட்டு வெளிப்பட்டுவிடும். மேலும் அவளைத் திருப்பவும் முடியாது. அவள் பிடிவாதம் உங்களுக்குத் தெரிந்தது தானே........'' என்றார் சர்தார்.

இந்தச் சமயத்தில் அச்சகத்துக்குள்ளிருந்த 'காலிங்பெல்' அலறியது. ஒருகணம் எல்லாரும் திகைத்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். பிறகு மணி, இரகசிய முறைப்படி விட்டு விட்டு ஒலிக்கவே, ரங்கமணி வந்துவிட்டான் என்பதை எல்லாரும் புரிந்து கொண்டார்கள். முத்து வாசல் பக்கம் வந்து, சன்னல் கதவிலிருந்த இடுக்கு வழியாகத் தெருவில் பார்த்தான். வாசலில் ரங்கமணி நிற்பதைக் கண்டதும் கதவைத் திறந்தான். ரங்கமணி உள்ளே வந்ததும், வாசல் கதவைத் தாளிட்டுவிட்டு முத்துவும் உள்ளே வந்தான்.

''மன்னிக்க வேண்டும், நேரமாகிவிட்டது!'' என்று கூறிக் கொண்டே அறைக்குள் நுழைந்து மேஜைக்கருகில் காலியாகக் கிடந்த நாற்காலியில் அமர்ந்தான் ரங்கமணி.

''வழியில் வெங்குவைச் சந்தித்தேன். அவனோடு பேசிக் கொண்டிருந்துவிட்டேன்'' என்று ரங்கமணி தன்னுடைய தாமதத்துக்குக் காரணம் கூறினான்.

''வெங்கு ஏதாவது சொன்னானா?'' — சர்தார் கேட்டார்.

''சாலைக் குமாரசாமி கோயில் பக்கம் சந்தித்தேன். நாளை நடக்கும் மறியலை முறியடிக்க சிவானந்தம் தீவிர நடவடிக்கை எடுக்கிறாராம். தடியடிகூட நடக்குமாம்'' என்றான் ரங்கமணி.

''இந்த டெபுடி சூப்பிரின்டெண்டைத் தொலைக்க வேண்டும் முதலில்'' என்று கோபத்துடன் கத்தினான் மாணிக்கம்.

யாரோ இவர் யாரோ?



தாயும் மகளுமாக இந்தப் படத்தில் இருப்பவர் யார் என்று உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா? முந்தைய தலைமுறையைச் சேர்ந்தவர்களைக் கேட்டுப் பாருங்கள். அவர்களுக்கு ஒரு வேளை தெரிந்திருக்கலாம். ஆனால் அவர்களும் கையை விரித்தால் ஆச்சரியமில்லை. பேசாமல் 44ம் பக்கத்தைப் புரட்டிப் பார்த்து விடுங்கள். போதும். பிரச்னை தீர்ந்துவிடும்.

''சிவானந்தம் என்ன செய்வான்? அவன் அப்பாவி. அவன் மனைவி இருக்கிறாளே கமலா, அவளைத் தீர்த்துக் கட்டிவிட்டால் போதும். அவன் அவளுடைய கைப்பொம்மையாகி விட்டான். அவள்தான் இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் காரணம்'' என்றான் காளிலிங்கம் எரிச்சலுடன்.

''நாளைக்கு ஏதாவது திட்டம் உண்டா?'' என்று கேட்டான் மாணிக்கம்.

''நாம் அதில் தலை இடக்கூடாது. மேலும் நமக்கும் சத்தியாக்கிரகத்துக்கும் சம்பந்தமே இல்லை. அந்தப் பேடித்தனமான இயக்கத்தின் நிழலில்கூட நிற்கக் கூடாது'' என்று கோபத்துடன் கத்தினான் காளிலிங்கம்.

''ஐயா இது பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?'' என்றான் சோமு.

''காளி சொல்வதுதான் சரி'' என்றார் சர்தார்.

''சுயேச்சைப் பத்திரிகையின் நிருபர் என்ற முறையில் யாராவது ஒருவர் சென்று நோட்டம் பார்க்கலாமே!'' என்றான் சோமு.

''நிருபர் என்ற முறையில் அங்கு என்ன நடக்கிறது என்பதைக் கவனிக்கும் பொறுப்பு உனக்கு....'' என்று சர்தார் சொன்னதும் சோமு சம்மதத்துடன் தலையை ஆட்டினான்.

''செவ்வாய்க்கிழமை இரவு நீ, டில்லிக்குப் புறப்பட வேண்டும்'' என்று ரங்கமணியைப் பார்த்துச் சொன்னார் சர்தார்.

''நானா? டில்லிக்கா....?'' திகைப்புடன் கேட்டான் அவன்.

''ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் வரப் போகிறார், நீ நம் பத்திரிகையின் நிருபராகப் போக வேண்டும்'' என்றார் சர்தார்.

பயணம் என்றாலே ரங்கமணிக்கு உற்சாகந்தான்.

திடீரென்று அவனுள் சந்தேகம் தோன்றியது. எல்லாரையும் ஒரு முறை உற்றுப் பார்த்தான். பிறகு கேட்டான்:

''நிருபராகப் போவதுதான் குறிக்கோளா? அல்லது வேறு ஏதாவது திட்டமா.....?''

இதைக் கேட்டதும் சர்தாரின் முகம் மலர்ந்தது. உற்சாகத்துடன் அவன் முதுகில் ஓங்கித் தட்டினார்.

''பேஷ், புரிந்து கொண்டாயே!'' என்றார்.

''வரப் போகிற வெள்ளைக்காரனுக்காக இங்கிருந்து தில்லி வரை போவது அநாவசியமாயிற்றே: அதனால்தான் கேட்டேன்....'' என்றான் ரங்கமணி.

''நிருபர் என்ற வேஷத்தில் ஒரு பெரிய காரியம் சாதிக்கவேண்டியிருக்கிறது. எல்லாரும் உன்னைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம். உன்னுடைய பொறுப்புக்கள் பற்றிப் பிறகு சொல்லுகிறேன். செவ்வாய்க்கிழமை இரவு நீ புறப்பட வேண்டும்'' என்றார் சர்தார்.

''லண்டனிலிருந்து கிரிப்ஸ் வருகிறாரே, இவருடைய முயற்சியால் சுதந்திரம் கிடைப்பதாக இருந்தால்.....?'' சோமு சந்தேகத்துடன் கேட்டான்.

''மிகவும் நல்லதாய்ப் போயிற்று. நாம் நம்முடைய கழகத்தைக் கலைத்துவிடலாம்'' என்றான் முத்து உற்சாகத்துடன்.

''நீங்கள் நினைக்கிற மாதிரி ஒன்றும் நடந்துவிடாது. இந்தியாவில் ஆட்சி செய்து ருசி கண்டவன் வெள்ளையன். அடித்துத் துரத்தினாலன்றி வெளியேற மாட்டான்'' என்றார் சர்தார்.

''அப்படியானால், கிரிப்ஸ் இங்கு வருவானேன்?'' என்று கேட்டான் சோமு.

''எல்லாம் ஒரு நாடகந்தான். இந்தியாவுக்குள் எந்தச் சமயத்திலும் ஜப்பான்காரன் நுழைந்துவிடுவான். சிங்கப்பூர், மலேயா, பர்மாவிலிருந்து பிரிட்டிஷ்காரனை ஜப்பான் விரட்டிவிட்டது. இந்தியாவுக்குள் ஜப்பான் நுழைந்துவிட்டால், வெள்ளைக்காரன் இங்கிருந்தும் ஓட வேண்டியதுதான். இந்தியாவை இழக்க பிரிட்டிஷ்காரன் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டான். ஜப்பான்காரனை ஒழிக்க நம்முடைய ஒத்துழைப்பையும் நாடத்தான் கிரிப்ஸ் வருகிறார்.''

''இந்தச் சாக்கில் நாம் சுதந்திரத்தை வற்புறுத்தினால்.....'' — ஆவலோடு கேட்டான் ரங்கமணி.

''வற்புறுத்தலாம், ஆனால் பிரிட்டிஷ்காரன் தரமாட்டானே!'' என்றார் சர்தார்.

''அப்படியானால் கிரிப்ஸ் இங்கு வர வேண்டாமே!'' என்றான் சோமு எரிச்சலுடன்.

''எல்லாம் நாடகந்தான். இவருடைய தூது வெற்றிபெறப் போவதில்லை. எதையாவது சொல்லி இந்தியாவை ஏமாற்ற முடியுமா என்று பார்க்கத்தான் கிரிப்ஸ் வருகிறார்'' என்றார் சர்தார் சலிப்புடன்.

திடீரென்று 'காலிங்பெல்' அலறியது. காளிலிங்கம் எழுந்து வாசலுக்கு ஓடினான். சன்னலின் இடுக்குவழியாகத் தெருவில் பார்த்துவிட்டு உள்ளே ஓடிவந்தான்.

''திரிவேணி......'' என்றான் பரபரப்புடன்.

''எல்லாரும் அவரவர் இடத்துக்குப் போங்கள்'' என்று துரிதப்படுத்தினார் சர்தார். எல்லாரும் கலைந்து பல அறைகளுக்குள் புகுந்துவிட்டார்கள். ரங்கமணி மட்டும் சர்தார்கூடவே தங்கிவிட்டான். மீண்டும் காலிங்பெல் அலறியது.

''காளி, கதவைத் திற'' என்றார் சர்தார்.

காளிலிங்கம் கதவைத் திறந்ததும் திரிவேணி உள்ளே வந்தாள்.

''ஞாயிற்றுக்கிழமைகூடவா வேலை நடக்கிறது'' என்று கேட்டுக்கொண்டே சர்தாரின் அறைக்குள் நுழைந்தாள் திரிவேணி.

''இந்த வெய்யிலில் எங்கே வந்தாய்?'' என்றார் சர்தார்.

''நாளைக்கு மறியலுக்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனிக்க வந்தேன். அப்படியே போஸ்ட் ஆபீசுக்கும் போய்விட்டு வருகிறபோது இந்தப் பக்கமும் வேலை இருந்தது....'' என்றாள் திரிவேணி. இடை இடையே அவள் பார்வை ரங்கமணியின் பக்கமும் சென்று திரும்பிக் கொண்டிருந்தது.

சுவர்க் கடிகாரம் பன்னிரண்டு மணி அடித்தது.

''சாப்பிட நேரமாகிவிட்டதே, நீங்கள் வரவில்லையா அப்பா !'' என்றாள்.

''எனக்கு வேலை இருக்கிறதம்மா, சாப்பாட்டைக் குமாரிடம் கொடுத்து அனுப்பி விடு. ரங்கமணிக்கும் சேர்த்து அனுப்பி விடேன்'' என்றார் சர்தார்.

''வேலை இருக்கிறதா?''

''வேலை இல்லை. எனக்குச் சாப்பாடு வருகிறது. கூடவே இவனுக்கும் அனுப்பி விடேன். வீணாக வீடு வரை இவனும் அலைவானேன் ?'' என்றார் சர்தார்.

''அத்தை தேடிக் கொண்டிருப்பாள். தீக்ஷிதர் வேறு சாப்பிடாமல் காத்துக்கொண்டிருப்பார். நான் இவர்களைக் கூட்டிக் கொண்டு வீட்டுக்குப் போகிறேன்'' என்று கூறிவிட்டு ரங்கமணியைப் பார்த்தாள்.

''சோழியன் குடுமி சும்மா அசையாது. மறியல் வேலையைச் சாக்குச் சொல்லிக் கொண்டு ரங்கமணியைக் கூப்பிடத்தான் இங்கு வந்திருக்கிறாய்.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை.....'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள் திரிவேணி. அவளுடைய முத்துச் சிரிப்பே அவளைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

ரங்கமணியும் திரிவேணியும் அச்சுக்கூடத்தின் வாயிற்படி இறங்கிப் போவதையே வெறிக்கப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார் சர்தார். அவரிடமிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு கிளம்பியது. அவருடைய இதயத்துக்குள் எத்தனையோ எண்ணச் சிக்கல்கள்! எதையெல்லாமோ எண்ணத்தில் சுழலவிட்டுக் கொண்டு நாற்காலியில் சாய்ந்து கிடந்தார்.

தன்னுடைய மகள் விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டிருப்பதில் அவருக்கு அளவுகடந்த பெருமை. அவளுடைய துணிவும், தலைமை தாங்கும் திறமையும், அவரைப் பலமுறை திகைக்க வைத்திருக்கின்றன. அவளுடைய மேடைப் பேச்சை ஓரிரு முறைகள் மறைவாக நின்று கேட்டு உடல் சிலிர்த்திருக்கிறார். காந்தியின் அஹிம்சைப் பாதையில் ஈடுபட்டு விட்டாள் என்பதில் அவருக்கு மனக்குறை இருந்தாலும், அதை ஓரளவு அவர் விரும்பவும் செய்தார். தீவிர இயக்கத்தில் அவளும் ஈடுபட்டு அவளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து விட்டால் அதை அவரால் தாள முடியாது. மகள் மீது உயிரையே வைத்திருந்தார். என்னதான் தொண்டு, தியாகம், கொள்கை என்று திரிந்தாலும் பாசம் என்ற கட்டுக்குள் அகப்படும் போது, சர்தார் சொக்கலிங்கம் பிள்ளை எவ்வளவு சாதாரணமாகி விடுகிறார்!

முதன் முதலில் திரிவேணி சிறை சென்ற போது, சர்தாரின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகி வழிந்தது. அதைக் கண்டு திரிவேணியே அதிர்ந்து விட்டாள். கடினசித்தமும், உயிரைத் துரும்பாக மதித்து நாட்டின் விடுதலைக்காகப் பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபடும் துணிவும், நாட்டுக்காக எதையும் உதறத் தயாராகிவிட்ட சீலமும் நிறைந்த சர்தார் சொக்கலிங்கம்பிள்ளையும் பாசத்தில் கட்டுண்டு கிடந்தார்.

''உனக்கு இந்த வேலை எதற்கு? நாட்டு விடுதலைக்குத்தான் நாங்கள் பாடுபடுகிறோமே. நீ நிம்மதியாக இரேன்'' என்று கூட ஒருமுறை சொல்லிப் பார்த்தார். அதற்குத் திரிவேணி சொன்னாள், ''நான் சாதாரண திரிவேணியாக இருந்தால், அடுக்களைக்குள் முடங்கி இருந்திருப்பேன். ஆனால் சர்தார் சொக்கலிங்கம்பிள்ளையின் மகளாக வாய்த்துவிட்டேனே, என்ன செய்வது ?''

இதைக் கேட்டுச் சொக்கலிங்கம்பிள்ளை மெய்சிலிர்த்தார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது.

ஒரு சமயம் காந்தியடிகளின் கொள்கையைப் பற்றியிருப்பதற்காக அவளைக் கண்டித்தார். ஆனால் அவளுடைய பதிலைக் கேட்டுத் திகைத்து விட்டார்.

''நீங்கள் பாடுபடுவது நாட்டின் சுதந்திரத்துக்குத்தானே அப்பா ?''

''ஆமாம்.''

''அதாவது ஆட்சியை ஒரு கையிலிருந்து வேறு கைக்கு மாற்றுவது ?''

''ஆமாம், பிரிட்டிஷ்காரனிடமிருந்து நம்முடைய கைக்கு மாற்றுவது.''

''அப்படியானால் இந்தச் சுதந்திரம் வேண்டவே வேண்டாமே!''

''ஏன்?'' — பதறிப் போய்க் கேட்டார் சொக்கலிங்கம்பிள்ளை.

''எதிராளியின் கொள்கைகளுக்கு வெள்ளைக்காரனாவது கொஞ்சம் மதிப்புக் கொடுப்பான். மற்றவர்களின் கொள்கையை மதியாமல் உங்கள் கொள்கைகளையே பலாத்காரமாகப் புகுத்த நினைப்பவர் நீங்கள். ஆகவே வெள்ளையனிடமிருந்து ஆட்சியைப் பிடுங்கி உங்கள் கையில் வைத்துக் கொள்வதைவிட அவனையே ஆளவிட்டு விடலாம்'' என்றாள் திரிவேணி. அவளுடைய பேச்சு சர்தாரின் நெஞ்சில் சுரீர் என்றது.

''ஆட்சி வெறுமனே கைமாறுவதுதான் சுதந்திரம் என்றால் அது நமக்கு வேண்டாம். சுதந்திர நாட்டில், கொள்கைக்கு உரிமை வேண்டும், நிர்ப்பந்தம் ஒழிய வேண்டும், பயம் மறைய வேண்டும். கொள்கைச் சுதந்திரம்கூடக் கொடுக்க முடியாத உங்கள் கையில் ஆட்சி சிக்கினால்......'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள் திரிவேணி.

இதைக் கேட்டுச் சர்தார் திகைத்துவிட்டார். திரிவேணியின் அரசியல் ஞானத்தையும், அது பற்றிய அவளுடைய திட்டவட்டமான முடிவுகளையும் கண்டு மனம் பூரித்தார். அவளுக்குப் பூரண சுதந்திரம் கொடுத்து விட்டார். அவளுடைய அரசியல் நடவடிக்கைகளில் அவர் தலையிடுவதே இல்லை.

மகளைப் பற்றிய நினைவுகளிலேயே லயித்து விட்ட சர்தாரின் உதட்டில் புன்னகை தவழ்ந்தது. ஏதோ ஓர் ஆசையினால் தூண்டப்பட்டவராய் எழுந்து சன்னல் பக்கம் நின்று கொண்டு தெருவில் பார்த்தார். தூரத்தில் திரிவேணியும் ரங்கமணியும் பேசிக் கொண்டே நடந்து செல்வது தெரிந்தது. அந்தக் காட்சியைக் கண்குளிரப் பார்த்து ரசித்துக் கொண்டு நின்றார்.

ரங்கமணி வந்த பிறகு திரிவேணியின் முகத்தில் புதுப் பொலிவு தோன்றியிருப்பதாக உணர்ந்தார். அவளுடைய படபடப்பும் குறும்புங்கூட மட்டுப்பட்டிருப்பதாக அவருக்குப் பிரமை தட்டியது. (தொடரும்)

விண்வெளிக் கண்காட்சி

ஊர் வம்பு


சந்திரனுக்கு மனிதன் சென்று திரும்பக் கூடிய நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அமெரிக்கத் தூதரகக் காரியாலயத்தினரால் ராயப்பேட்டை ஒய். எம். ஸி. ஏ. மைதானத்தில் சென்ற மாதம் 23-ந் தேதியிலிருந்து 27-ம் தேதி வரை மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த 'ஜெமினி விண்வெளிக் கப்பலின் ''பிரயாணப் பெட்டி'' (Capsule)'யும், அது சம்பந்தமான படக் காட்சிகளும், திரைப்படங்களும் அவற்றைக் கண்டு களித்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உணர்த்திப் பரவசமளித்தன.

''மதிப்புக்குரிய முதல் அமைச்சர் அவர்களே!'' என்று தமது வரவேற்பு உரையை சுத்தத் தமிழிலேயே ஆரம்பித்துப் பேச்சைத் தொடங்கிய அமெரிக்கக் கான்ஸல் ஜெனரல் டாக்டர் ஃப்ராங்கின், அமெரிக்காவின் விண்வெளிச் சாதனைகள் பற்றியும், ஜனநாயகத்தில் அவர்களுக்குள்ள ஆழ்ந்த பற்றுதல் குறித்தும், பல துறைகளில் அவர்கள் அடைந்த முன்னேற்றத்தையும் அனுபவத்தையும் உலக மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தவே விழையும் பண்பைப் பற்றியும், முழுக்க முழுக்கத் தமிழிலேயே பேசி வியப்பிலாழ்த்தினர்.

தமிழ் மக்களின் தமிழ்ப் பற்றுக்கு எவ்வளவு தூரம் அமெரிக்க மக்களின் பிரதிநிதி திரு பிராங்க்ளின் மதிப்புத் தந்துள்ளார் என்பதைப் பாராட்டி, மகிழ்ச்சி பொங்கப் பேசிய முதலமைச்சர் திரு அண்ணாதுரை மிக நாசூக்காகவும், நகைச்சுவை ததும்பவும், அமெரிக்கர்களின் சாதனைகளையும் பரந்த மனப்பான்மையையும் உழைப்பில் அவர்களுக்குள்ள ஆர்வத்தையும் பாராட்டியதோடு, சந்திர மண்டலத்துக்குப் பயணமாகும் போது ஒரு தென்னிந்தியரையும் கூட்டிப் போகும்படி பொரிக செய்திருக்கிறார். ஏனெனில், விஞ்ஞானக் கண்கொண்டு அமெரிக்கர்கள் சந்திரனைக் காணும்போது கற்பனைத் திறன் கொண்டு சந்திரனைப் பற்றிய பல அபூர்வ விஷயங்களை நாம் காணக்கூடும் என்று சுவையுடன் குறிப்பிட்டார். ஒரு வேளை நடைமுறையில் இது செயல்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. யாருக்கு அந்தச் சீட்டு விழுகிறதோ பார்ப்போம்!

ஆனால் சந்திரனுக்கு நேரடியாகப் போகும் வாய்ப்பு நமக்குக் கிட்டாமல் போனாலும், அதற்குப் போவதற்கான விண்வெளிப் பெட்டியையாவது காணலாமே என்றுதான் இக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருக்கின்றனர் போலும்.

முழு அளவில் தத்ரூபமாகவே அமைக்கப்பட்டுள்ள இந்த விண்வெளிப் பயணப் பெட்டி பதினோரடி உயரமும், ஏழரை அடி குறுக்களவும் கொண்ட கூம்பு வடிவில் அமைந்துள்ளது. இரு விமானிகள் உள்ளே உட்கார்ந்து கொண்டு நிலத்தில் மோட்டார் வண்டியை ஓட்டிச் செல்வது போல் இதை இயக்குகின்றனர். அவர்களுக்கு எதிரில் 250—ஸ்விட்சுகள் கொண்ட விரிவான யந்திர அமைப்பு உள்ளது. இவற்றின் மூலம் அவர்களுக்குத் தேவையான எல்லாவற்றையும்—குடிநீர், மின் சக்தி, பிராணவாயு போன்றவைகளை எல்லாம் அடைய வசதிகள் உள்ளன. பிரயாணப் பெட்டியும் இரு பகுதியாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கிறது. விண்வெளியில் பிரயாணம் முற்றுப் பெற்றதும், ஒரு பகுதியைப் பூமிக்குத் திரும்ப இயக்குகிறார்கள். பூமியின் ஆகர்ஷண எல்லைக்குள் புகுந்ததும், அதன் வேகத்தைக் கட்டுப்படுத்த 'பாராசூட்'' சாதனங்கள் இப் பகுதியில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் வேகம் கட்டுப்படுத்தப்பட்டு, சமுத்திரத்தில் இறங்கும்போது சேதமில்லாது பாதுகாப்பாக இறங்குவது சாத்தியமாகிறது.



சென்ற மூன்று நான்கு ஆண்டுகளில் தொடர்ந்து நடந்த 'பரிசோதனைகள் மூலமும் மெர்குரி விண்வெளிப் பயணங்கள், ஜெமினி பயணங்கள் மூலம், விண்வெளியில் சஞ்சரிக்கும்போது என்னென்ன செயல்கள் புரியவேண்டியிருக்குமோ அவ்வளவையும் செய்து பார்த்து வெற்றி கண்டுள்ளனர் அமெரிக்க விஞ்ஞானிகள். இப்



போது இந்தப் பரிசோதனைத் தொடரின் இறுதி கட்டமான 'அப்போல்லோ' திட்டத்தில் தான் சந்திரனில் மனிதன் இறங்கும் சாதனையைப் புரிய அமெரிக்க விஞ்ஞானிகள் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். 1970ம் ஆண்டு வாக்கில் இத்திலே கைகூடலாம் என்று எதிர்பார்க்கிறார்கள். அந்தப் புது சகாப்தத்தை நாமும் நம்பிக்கையுடன் எதிர்நோக்குவோம்.

நூறாவது நாடகம்

ஒரு நாடகத்தைத் தயாரித்து அதை ஒரு முறை அரங்கேற்றுவதே பெரும்பாடாயிருக்கிறது. அப்படியிருக்க நூறு முறை நடத்துவதென்றால் அது சாமானியமான காரியமா?

பிரசித்திபெற்ற நாடக, சினிமா நடிகரும், கதை, வசனகர்த்தாவும், சினிமா டைரக்டருமான திரு 'சோ' அவர்கள் எழுதி, தயாரித்து நடித்துப் புகழ்பெற்ற "சம்பவாமி யுகே யுகே" நாடகம் நகைச்சுவையை ஆதாரமாகவும், சமுதாயத்தின் ஊழல்களுக்குக் கொடுக்கும் சவுக்கடிகளைப் பின்னணியாகவும் கொண்டது. அதனாலேயே இந்த நாடகத்துக்கு ரசிகப் பெருமக்களிடையே நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

26—3—67 அன்று திருவல்லிக்கேணி கலாமண்டபத்தில் பொதுத்துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்களின் தலைமையிலும், கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையிலும் "சம்பவாமி யுகே யுகே" நூறாவது நாடகம் நடைபெற்றது. நூறாவது நாடக விழாவுக்கு ஏற்பாடு செய்தவர் திரு ஜி. முத்து.

அமைச்சர் கருணாநிதி அவர்கள், இத்தகைய நாடகங்கள் ஏராளமாக அரங்கேற வேண்டும் என்றும், சமுதாயத்தின் தவறுகளை மக்கள் முன்னிலையில் வைத்துத் தீர்வுகாண இதைவிட நல்ல சாதனம் இருக்க முடியாது என்றும் கூறினார். அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள், இத்தகைய நாடகத்தின் மூலம் ஒழுக்கக் கேடு எல்லாத் துறைகளிலிருந்தும் அகற்றப்படும் என்றார்.

நூறாவது நாடகக் கொண்டாட்டத்தையொட்டி திரு 'சோ'வுக்குப் பல நாடகக் குழுக்கள் மலர் மாலை அணிவித்தன. சமூகத்தின் தவறுகளை, சர்க்கார் தவறுகளை, யாரையும் புண்படுத்தாமல், எள்ளி நகையாடியே கிள்ளி எறிய முயலும் திரு 'சோ'வின் நாடக பாணி மிகவும் பாராட்டுக்குரியது. நகைச்சுவை நிறைந்த அவரது மற்றைய நாடகங்களும் இதே மாதிரி நூறு நூறு விழாக்கள் கொண்டாட வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

சிலம்புச் செல்வருக்குப் பாராட்டு

திரு ம. பொ. சி.யின் "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்ற நூலுக்கு சாகித்திய அகாதெமியின் பரிசு வழங்கப்பட்டிருப்பது குறித்து அந்நூலின் பதிப்பாளர் சோம. சுவாமிநாதன் (இன்ப நிலையம்) சென்னை, தியாகராய நகர், வாணிமஹாலில் 26-3-67 அன்று மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் ஒரு பாராட்டு விழா நடத்தினார். "தினமணி" துணை ஆசிரியர் ஏ. ஜி. வெங்கடாச்சாரியார், திரு ச. சிவகுமாரன், திருமதி சௌந்தரா கைலாசம், திரு தி. க. சண்முகம் ஆகியவர்கள் மேற்படி நூலுக்குப் பாராட்டுரை வழங்கினர். திரு தெ. பொ. மீ. அவர்கள், மேற்படி நூலுக்கு சாகித்திய அகாதெமியின் பரிசு கிடைத்ததின் மூலம் அகாதெமியின் பெருமை உயர்ந்து விட்டது என்றார். திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் திரு ம. பொ. சி.யைத் தீந்தமிழ்க் கவிதைகள் மூலம் வாழ்த்தினார். 'அவ்வை' சண்முகம் எடுப்பான குரலில் அற்புதமாக அப்பாடல்களைப் பாடி அனைவரையும் உணர்ச்சிவசப்படுத்தினார்.


விழா முடிவில் திரு ம.பொ. சி.யின் நன்றியுரை வள்ளலாரைப் பற்றியதோர் உருக்கமான ஆராய்ச்சி உரையாக அமைந்தது.


முன்னேறும் மோட்டார்த் தொழில்!

சென்னை ராஜ்யத்தின் புதிய தொழில் மந்திரி திரு வி. ஆர். நெடுஞ்செழியன் திறந்து வைக்க, பழைய தொழில் மந்திரி ஸ்ரீ வெங்கடராமன் தலைமை தாங்கச் சென்ற 26—3—67 அன்று பிரேக் லைனிங், கிளட்ச் போன்ற மோட்டார் உறுப்புக்களைத் தயார் செய்யவென்று அம்பத்தூர் தொழிற் பேட்டையில் தொழிற்சாலை தொடங்கப்பட்டிருக்கிறது.

பல வருஷங்களாக மோட்டார் உற்பத்தித் துறையில் ஈடுபட்டு அநுபவம் மிகுந்த ரானே கம்பெனியார் இத்துறையில் தேர்ந்த ஸ்மால் அண்டு பார்க்ஸ் லிமிடெட் என்னும் பிரிட்டிஷ் ஸ்தாபனத்தாரின் தொழில் நுட்ப ஒத்துழைப்பையும், பொருளுதவியையும் பெற்று நவீன பாணியில் இத்தொழிற்சாலையை நிறுவியுள்ளார்கள். அதோடு கனடா நாடு தேவையான கச்சா பொருளை — அதாவது அஸ்பஸ்டாஸ் ஃபைபர், ரெஸின்ஸ் போன்றவற்றை வேண்டுமளவு தரச் சம்மதித்துள்ளது.

ஸ்ரீ எம். எம். நாராயணனின் பெரு முயற்சியினால் உருவாகியிருக்கும் இந்தத் தொழிற்சாலை ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு ஓங்கி வளரும் என்பதில் ஐயமில்லை.




ஜிம்பி
வால்ட் டிஸ்னி
ஆஹா..ஹா..! நான் காண்பது கனவா...?
கனவல்ல, கற்பனை யல்ல, நிஜமேதான்!
லபக்..
எத்தனை பெரிசு!
ஆஹா...! என்ன ருசி?
என்ன ருசியோ...டு..!
ஹலோ மிஸ்டர் ஜிம்பி..!
எங்கேப்பா இத்தனை பெரிய எலும்பைப் பிடிச்சாய்..?
ஓ! பேச மாட்டியோ...?
அடச்சீ...! யார்ராவன்?
8-21
ஐயோ!
என்ன ருசி... என்ன ருசி யோ... டு..!




பக்த பிரகலாதா

ஆதி காலத்துப் புராணக் கதை, வைகுண்ட ஏகாதசி புண்ணிய தினத்தில் விசேஷக் காட்சிகளுக்கு ஏற்ற கதை. காப்பி ரைட் தொந்தரவில்லாத கதை!

எல். விஜயலக்ஷ்மியின் விறுவிறுப்பான நடனம் படத்தைச் சுறுசுறுப்பாக ஆரம்பித்து வைக்கிறது. பேபி ரோஜாரமணி பிரகலாத னுக்கு ஏற்ற முகபாவங்களும், நடிப்பும் காட்டி நன்றாய் நடித்திருக்கிறான். எஸ். வி. ரங்காராவ் இரணியன். பிள்ளைப் பாசத்தி னால் உருகவும், ரௌத்ரத்தைக் காட்டிச் சீறவும் முடிகிறதே அவரால். அஞ்சலிதேவி பிரகலாதனின் தாயாக வந்து புத்திர வாஞ்சையை எப்படி வெளிப்படுத்துகிறார்! பாலமுரளி கிருஷ்ண நாரதர். பாட்டுக்குக் கேட்பானேன்! மந்திர, தந்திரக் காட்சிகள் அபாரமாக அமைக்கப் பட்டிருக்கின்றன. புராணப் படமாதலால் பத்தொன்பது பாடல் களையும் அனாயாசமாகத் தாங்குகிறது!

சமூகப் படக் கதைகளில் புதுமையைக் காண முடியாத போது புராணக் கதைகள் புதுமையாய்த் தோன்றுவது இயல்புதானே! வண்ண அமைப்பிலும், அற்புதமான காட்சி களிலும், குதூகலமான குழந்தையின் நடிப்பி லும், ஏவி. எம்.மின் "பக்த பிரகலாதா" பாரெங்கும் பக்தி உணர்வைப் பரப்பும் பிரமாதமான படம்.





ஸ்ரீ குருவாயூரப்பன்

இந்தக் கலியுகத்தில், ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் கண்கண்ட தெய்வமாக விளங்கி ஆண்டவன் அற்புத லீலைகள் புரிந்த ஊர் குருவாயூர். பட்டத்திரி இயற்றிய நாராயணீயம் என்னும் நூல் இதற்குச் சான்றாக விளங்குகிறது. இறைவன் இல்லாத இடங்கள் கிடையாது என்பது போல, இந்த நாட்களில்தான் நாராயணீயம் சொல்லாத உபந்யாசகர்கள் கிடையாதே.

இவ்வளவு பெருமை பெற்ற ஸ்ரீ குருவாயூரப்பனின் கதையைத் திரையோவியமாகச் சித்திரிக்க முயன்றிருக்கிறார்கள் ஸ்ரீ சுதர்சன் பிலிம்ஸார். அதுவும் எப்படி? கடலைத் துளைத்து ஏழ்கடலையும் அதற்குள் இணைத்து விடும் ரீதியில். இக்காரியத்தில் வெற்றி கண்டிருக்கிறார்கள் என்பதற்குச் சான்று வேண்டுமா?

இந்தக் காலத்துத் திரைப்படத்துக்குத் தேவையான நடனமும் கத்திச் சண்டையும் கூட அந்தக் காலத்துப் பின்னணியில் நமக்குக் காணக் கிடைக்கின்றனவே, அவை போதாவா?

துவாபரயுகத்தில் கதையைத் தொடங்கி, ஸ்ரீ குருவாயூரப்பனின் வரலாற்றோடு தொடர்பு கொண்ட பல பக்தர்களது சரிதைகள் இதில் இடம் பெற்றுள்ளன. குறிப்பிட்ட நேரத்துக்குள் முடிய வேண்டிய ஒரு படத்தில், எந்தவொரு நிகழ்ச்சியும் விட்டுப் போகாமல், அலுக்காமல், பக்திக்குச் சிறிதும் பங்கம் விளையாமல் படமாக எடுத்திருப்பது போற்றத்தக்கது.

நடிப்பில் முதல் இடம் பெறுகிறவர் சின்னக் கண்ணனாக வந்து மனத்தைக் கொள்ளை கொள்ளும் பேபி விநோதினி. குரூரம்மாவாக வரும் பண்டரிபாய், பட்டத்திரியாக வரும் முத்தையா, பிஷாரடியாக வரும் எஸ்.வி.பிள்ளை, மஞ்சுளாவாக வரும் அம்பிகா இப்படி எல்லோருமே உணர்ந்து நடித்திருக்கிறார்கள்.

இடையில் வாலிவதக் காட்சியை சிறந்ததொரு நாட்டிய நாடகமாகப் புகுத்தியிருக்கிறார்கள். செவிக்கினிய கர்நாடக இசைக்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். அதோடு, மலையாளத்திலிருந்து தமிழில் 'டப்' செய்யப்பட்ட படம் என்பதைச் சொல்லாமல் சொல்லிப் புரியவும் வைத்திருக்கிறார்கள்.

ஸ்ரீ கிருஷ்ண துலாபாரம்

அடியார்க்கு அடங்குவான், ஆணவத்துக்கு இடம் கொடான். இதுவே ஸ்ரீ கிருஷ்ண துலாபாரம் கூறும் நீதி.

நரகாசுரனை வதம் செய்யக் கண்ணனோடு சென்ற சத்யபாமாவுக்கு அகந்தை தலைக் கேறுகிறது. ஸ்ரீ கிருஷ்ண பகவான் தனக்கே சொந்தமானவன் என்று முடிவு கட்டுகிறாள். அவனைத் தன் உடைமையாக்கிக் கொள்ள அவள் செய்யும் முயற்சிகள் ஸ்ரீ கிருஷ்ண துலாபாரமாக உருவெடுத்து நாரதரிடம் கண்ணனை விலை கூறும் அளவுக்குக் கொண்டு விடுகிறது. அடியார்க்கும் அடியவளான ருக்மிணி கடைசியில் கை கொடுத்து உதவி சத்யபாமாவின் ஆணவத்தை அழிப்பதோடு ஸ்ரீ கிருஷ்ணன் எல்லோருக்கும் உரிமையானவன் என்பதை நிலைநாட்டுகிறாள்.

'அருவமான' ஆண்டவனுக்கு ஓர் உருவம் கொடுத்து வழிபடும் நம் பாரத சமுதாயத்துக்குப் புராணக் கற்பனை பெருமை சேர்க்கிறது. அந்தக் கற்பனைக்கு ஓர் உருவம் கொடுத்து ஸ்ரீ கிருஷ்ண துலாபாரம் திரைச் சித்திரமாக உருவாகியிருக்கிறது.

ஸ்ரீ கிருஷ்ணனாக வரும் என். டி. ராமாராவ், தமது நடிப்பையும் 'தாரக மூன்'ஆக்கியிருக்கிறார். குறை - நிறைக்கு இடம் வைக்காமல் கச்சிதமாக நடித்திருக்கிறார்.

அடக்கமும் பக்தியும் உருவான ருக்மிணியாக அஞ்சலிதேவியும் ஆணவமும் மிடுக்கும் ஆசையும் கொண்ட சத்யபாமாவாக ஜமுனாவும், தராசின் இரு தட்டுகளென நடித்திருக்கிறார்கள்; நடிப்பில் சம எடையாகவும் திகழ்கிறார்கள். இது தெலுங்கிலிருந்து தமிழாக்கப்பட்ட படம். இரண்டு படங்களிலுமே பார்ப்போர்களின் கண்களும் பேசுவோர்களின் வாய்களும் ஒத்துழைக்கவில்லை. அதற்காகத் தமிழ் தெலுங்கு மலையாள மொழிகளுக்குள்ள ஒற்றுமையில் குறை காண முடியுமா?





கதையாகி உள்ளது. அதனுல் கேட்கும் கேள்விக்கு, 'டக், டக்' என்று பதில் சொல்ல வேண்டும்.''

''சரி, சம்மதம்!''

''உங்கள் பெயர் என்ன?''

''என் பெயரைச் சொல்லித்தானே இப்பொழுது மூன்று முறை கூப்பிட்டீர்கள்?''

''அது உங்கள் பெயர்தான் என்று என்ன நிச்சயம் ?''

''என் அப்பா — அம்மா ஆசையோடு வைத்த பெயர் ஆயிற்றே ! விவரம் அறியாப் பருவத்திலேயே 'சரோஜினி' என்று யாராவது கூப்பிட்டால் நான் திரும்பித் திரும்பிப் பார்த்திருக்கிறேனே!''

''இதோ பாருங்கள்! கேட்கிற கேள்விக்கு நறுக்கென்று அணுக்குத் தெறித்தாற் போல் பதில் சொல்ல வேண்டும். சுற்றி வளைக்கக் கூடாது.''

''சரி!''

''சரோஜினிபாய்! உங்கள் தந்தையின் பெயர்....?''

''டாக்டர் ஜி. ஏ. அஜ்வானி.''

''தொழில்....?''

''யாருக்கு? எனக்கா, என் தந்தைக்கா?''

''முதலில் உங்கள் தந்தைக்கு.''

'''டாக்டர்' என்று சொன்னபொழுதே விளங்கியிருக்க வேண்டுமே!''

வாழ்க்கை ஒரு வழக்கு !

''சரோஜினி பாய்!
சரோஜினி பாய்!
சரோஜினி பாய் !''

பேட்டிக்கென்று பிரத்தியேகமாக நிர்மாணிக்கப்பட்ட விசாரணைக் கூண்டில் எடுப்பான உடலும் களையான முகமும் கொண்ட ஒரு பெண்மணி காட்சி தருகிறார்.

''என்ன அக்கிரமம்! விசாரணை செய்யும் வக்கீலையே விசாரிப்பதா ?'' — முணு முணுக்கிறது அவர் வாய்.

''சொல்லுங்கள்!.... நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறு எதுவும் இல்லை!''

நாடக பாணியில் அவரெதிரே ஒரு புத்தகம் நீட்டப்படுகிறது. அது 'கல்கி' புத்தகம்.

''உண்மையைத் தவிர வேறு எதுவும் நிலையான பொருள் இல்லையே ! இதையே நானும் சொல்ல வேண்டுமா ?'' மீண்டும் முணு முணுப்பு.

''ரூல்னு ரூல்தான். சட்டம்னு சட்டம் தான். யாருக்கும் அது தயை—தாட்சிண்யம் பார்ப்பதில்லை; விதிவிலக்கு அளிப்பதில்லை. தெரியும் அல்லவா ?''

''தெரியும். நாய் வேஷம் போட்டால் குரைக்க வேண்டும். அரச வேஷம் போட்டால் அதிகாரம் செலுத்த வேண்டும்.''

''இன்று உங்கள் நிலை, 'ஓடம் வண்டியில் ஏறும், வண்டி ஓடத்தில் ஏறும்' என்கிற

''டாக்டரா? எந்தத் துறையில்?''

''வைத்தியத் துறையில்; அதுவும் மிருக வைத்தியத் துறையில். மேல்நாடு சென்று பட்டம் பெற்று வந்தவர். வடகோடியிலிருந்து தென் கோடி வந்து வாயில்லாப் பிராணிகளுக்குச் சேவை செய்த பெருமை அவருக்கு உண்டு.''

''என்ன? நீங்கள் வடநாட்டவர்களா ?''

''ஆம், பிறப்பால் நாங்கள் சிந்திகள் ; ஆனால் வளர்ப்பால் தமிழர்கள்.''

''இதோ, பாருங்கள்! நீங்கள் பொய் இல் சொல்லவில்லையே !''

''நீதிக்கும் நியாயத்துக்கும் போராடும் வழக்கறிஞர் பரம்பரையைச் சேர்ந்தவள் நான். இம்மியளவும் இதில் பொய் இல்லை.''

''எத்தனை அழகாகத் தமிழ் பேசுகிறீர்கள் ! உங்கள் பேச்சைக் கொண்டு நீங்கள் தமிழராகத்தான் இருக்க வேண்டுமென்றல்லவா நான் எண்ணினேன் !''

''இப்பொழுதும் நீங்கள் உங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. எனக்கும் என் சகோதரிகளுக்கும் சிந்தி மொழியைக் காட்டிலும்

தமிழ் மொழிதான் நன்றாக வரும். இதற்குக் காரணம் எங்கள் தந்தைதான்.''

''என்ன புதிர் போடுகிறீர்கள்? உங்களுக்குத் தாய்மொழியிடம் பற்றே கிடையாதா?''

''ஏன் கிடையாது? தமிழ்த் தாயின் மடியிலே பிறந்து வளர்ந்தவர்கள் நாங்கள். எனவே, தமிழ்மொழியைத் தாய்மொழியாக — தாய்மொழிக்கும் மேலாக மதிக்கிறோம். இத்தனைக்கும் எங்கள் தந்தைக்குத் தமிழ் அவ்வளவாகத் தெரியாது; சரியாகப் பேசக்கூட வராது. ஆனால் பள்ளியிலும் கல்லூரியிலும் நாங்கள் தமிழ் பயில வேண்டும் என்றே அவர் விரும்பினார். காரணம், அவர் வாழ்க்கைக்கு வித்திட்டு வளம் காட்டியது தமிழ் நாடு அல்லவா?''

''இந்தப் பண்பு எல்லோரிடமும் வளர்ந்தால், மொழி மறைந்து மனிதத் தன்மை தலைதூக்கும். ஆமாம், உங்களுக்கு எத்தனை சகோதரிகள் ?''

''மூன்று பேர். மூத்த சகோதரி டாக்டர், இரண்டாவது சகோதரி எஞ்சினியர். மூன்றாவதான நான்......''

''....வக்கீல். இப்படி ஒவ்வொரு துறையாகப் பிரித்துப் பங்கு போட்டுக் கொள்ள உங்கள் சகோதரிகளுக்கு எப்படித் தோன்றியது ?''

''எங்களுக்குத் தோன்றவில்லை. எங்கள் தந்தைக்குத்தான் தோன்றியது. அவருக்கு ஆண் சந்ததிகள் கிடையாது. எங்களை ஆண்களுக்கு ஒப்பாகப் படிக்க வைக்க வேண்டும் என்று திட்டமிட்டார்; திட்டமிட்டபடியே வெற்றியும் கண்டார்.''

''நீங்கள் கல்வி பெற்றது எங்கே?''

''உயர்நிலைக் கல்வி பெற்றது எழும்பூர், பி. டி. உயர்நிலைப்பள்ளி, பட்டப் படிப்பு ஸ்டெல்லா மேரி; சட்டப் படிப்பு சென்னை சட்டக்கல்லூரி. மாகாணத்திலேயே முதலாவதாகத் தேறிய பெருமையும் எனக்கு உண்டு.''

''அப்படியா? யாரிடம் அப்ரெண்டிஸாக இருந்தீர்கள் ?''

''ஸ்ரீ ஏ. சுப்பிரமணிய ஐயரிடம்.''

'' எத்தனை ஆண்டுகளாக இத்துறையில் இருக்கிறீர்கள் ? உங்கள் சீனியர் யார்?''

''ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகளாக இத்துறையில் இருக்கிறேன். ஸ்ரீ கே. ராமசாமி அவர்களிடம் இப்பொழுது நான் ஜூனியராக இருக்கிறேன். ஜில்லா ஜட்ஜாக இருந்து ஓய்வு பெற்ற அவர் தேர்ந்த வழக்கறிஞர் என்பது தெரிந்திருக்குமே!''

''நீங்கள் தனியாகவும் வழக்குகளை மேற்கொள்வதுண்டா ?''

''உண்டு. எத்தனையோ வழக்குகள் நடத்தியிருக்கிறேன். ஆரம்பப் பயிற்சிக்குச் சிறு சிறு கிரிமினல் வழக்குகள் பயன்பட்டன. இப்பொழுது எல்லா வகை வழக்குகளையும் நடத்துகிறேன். கஸ்டம்ஸ், ரெவின்யூபோர்டு அப்பீல்கள் போன்ற பல வழக்குகளும் 'னக்கு வருகின்றன.''

''நீங்கள் எடுத்துக்கொண்ட முதல்வழக்கு?

''பால் கலப்பட வழக்கு.''

''வெற்றியா, தோல்வியா?''

''கீதை படித்திருக்கிறீர்களா நீங்கள்?''

''ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?''

''கண்ணபெருமான் அதில் என்ன சொல்கிறான், தெரியுமா ?''

''என்ன சொல்கிறான்?''

''பணி செய்ய வேண்டியது உன் கடன். வெற்றிதோல்வி என்னும் பலனை எதிர்பார்ப்பது உன் காரியம் அல்ல.''

''அதற்கும் என் கேள்விக்கும் என்ன சம்பந்தம் ?''

''நான் என் கடமையைச் செய்தேன். வெற்றி — தோல்வியைப் பற்றி நினைத்துப் பார்க்கவே இல்லை. குற்றம் புரிபவர்களுக்குத் தண்டனை உண்டு. இது சட்டம் வழங்கும் நியாயம். என் கட்சிக்காரர் தமக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையைக் கட்டி விட்டார். எப்படிப் பார்த்தாலும் இது வெற்றிதானே?''

''குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாயிருக்கிறதே, உங்கள் பேச்சு!''



''ஏனெனில், மீசையில்லை, மண் ஒட்டவில்லை. என் கட்சிக்காரருக்குத் தோல்வி என்றாலும் சட்டப்படி நியாயத்துக்கு வெற்றி கிட்டத்தானே செய்திருக்கிறது?''

''சரியான வக்கீல்தான் நீங்கள்!''

''நீங்கள்தான் இதை ஒப்புக் கொள்ளுகிறீர்கள். பெரிய பெரிய வழக்கறிஞர்கள், நீதிபதிகள் முதற்கொண்டு பெண்களைச் சிறந்த வக்கீல்களாக ஏற்றுக்கொள்வதில்லை.''

''ஏன்?''

''பெண்களுக்கு அவ்வளவாக வாதாட வராது என்பது அவர்கள் அபிப்பிராயம்.''

''உங்கள் அபிப்பிராயம் என்ன?''

''பெண்களைப் போலப் பேச யாருக்கும் வராது என்பதுதான். என் கணவரேகூட அடிக்கடி கூறுவார்.''

''இதை நான் ஆமோதிக்கிறேன்!''

எங்கள் பேச்சுக்குச் சாட்சியாக, இது வரை பேசாமல் உட்கார்ந்திருந்த ஸ்ரீ லக்ஷ்மணன் நம்மையும் மறந்து கூறி விட்டார். அவரும் ஸ்ரீ ராமசாமியின் ஜூனியர்தான்.

"நான் ஆட்சேபிக்கிறேன்."

"இதில் ஆமோதிப்பதற்கோ ஆட்சேபிப்பதற்கோ என்ன இருக்கிறது?"

"அதற்காகச் சொல்லவில்லை. பேசியே பொழுது போக்கும் பெண்கள் நீதிபதியாக இருக்கத் தகுதியற்றவர்கள் என்பது இந்த 'லக்ஷ்மணர்'களின் அபிப்பிராயம். அதைச் சொல்லவே ஆமோதிப்பது போலப் பேசி என்னை மடக்கப் பார்க்கிறார். எனவேதான், நான் ஆட்சேபணைக் குரல் எழுப்பினேன். ஆந்திரம், கேரளம் போன்று நமது தமிழ் நாட்டிலும் பெண்களை மாவட்ட மாஜிஸ்திரேட்டுகள், நீதிபதிகள் ஆகிய பதவிகளில் நியமிக்க வேண்டும் என்பது என் அபிப்பிராயம். அப்பொழுது நிச்சயம் பெண்கள் 'பேசா மடந்தை'யராகி நியாயம் வழங்கத் தவறமாட்டார்கள். ஆணுக்குப் பெண் தாழ்ந்தவளல்ல என்பதை நிரூபிக்கும் வாய்ப்பையும் பெறுவார்கள்."

"அட, 'ஒரிஜினல்' விசாரணையில் உங்கள் 'அப்பீலை'ச் சேர்க்கிறீர்களே! கவலைப்படாதீர்கள், ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் உங்கள் கனவு கட்டாயம் பலிக்கும்; 'அப்பீல்' கவனிக்கப்படும்.

"உங்களுக்கு எத்தகைய வழக்குகள் வருகின்றன?"

"உலகத்தில் எத்தனைவித வழக்குகள் உண்டோ, அத்தனையும் வருகின்றன. டாக்டர் என்று ஒருவர் போர்டு மாட்டிக் கொண்டால், பல்வகை நோயாளிகளும் வரத்தானே செய்கிறார்கள்? அது போலத்தான் வழக்கறிஞர்களின் வழக்குகளும். எதையென்று குறிப்பிட்டுக் கூற முடியும்?"

"இப்படி வழக்குகள் மலிவதற்கு என்ன காரணங்கள் இருக்கக்கூடும்?"

"ஒன்று, இரண்டா? ஊர்ப்பட்ட காரணங்கள் இருக்கக்கூடும். எதை என்று கூறுவது? கேட்கப் போனால் இதற்கும் இதை வைத்தான் உதாரணம் காட்டவேண்டியிருக்கும். ஒரு பொருளுக்கு ஆசைப்படுகிறோம். அது வீண் ஆசை என்று தெரிந்தாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. அதை அடைய விம்பு தோன்றுகிறது. அந்த விம்பு நிறைவேறவில்லையானால் கோபம் — தாபம் ஏற்படுகிறது. அதன் பலனாக விரோதம் விளைகிறது. இவையே முக்கிய காரணங்களாகும். சிவில், கிரிமினல்-இரண்டு வழக்குகளுக்குமே."

"ஆசைப்படுவதே தவறு என்கிறீர்களா?"

"அப்படிச் சொல்லிவிட முடியுமா? ஆசை நியாயமான ஆசையாக இருக்க வேண்டும். அதை நியாயமான வழியில் பெற வேண்டும். எதுவுமே அறவழியில் இருந்துவிட்டால், சண்டை—சச்சரவுகளுக்கு இடம் இராது. சமுதாயத்துக்கு ஊறுநேரா வண்ணம் மக்கள் வாழப் பழக வேண்டும் என்பதற்கே சட்ட திட்டங்களும் நீதி—நியாயங்களும் உருவாகின்றன. நீதியை நிலை நாட்டுவதற்காக எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிக்கு ஓர் உதாரணம் கூறுகிறேன். குற்றவாளி ஒருவன் செலவழித்துத் தன் கட்சியில் உள்ள நியாயத்தைச் சொல்ல இயலாதவனாயிருக்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் சார்பில் வாதாட நீதிமன்றமே ஒரு வக்கீலை நியமிக்கும். இதற்கு 'ஸ்டேட் ப்ரீஃப்' என்று பெயர். வழக்கறிஞருக்கு இதனால் ஊதியம் ஒன்றும் கிடைக்காது என்றாலும், நியாயத்துக்காக வாதாடினோம் என்ற ஆறுதல் கட்டாயம் கிடைக்கும். ஸ்ரீ கிருஷ்ணசாமி ரெட்டியார் ஒரு வழக்கில் இம்மாதிரி வாதாடும் உரிமையையும் பெருமையையும் எனக்கு அளித்தார்."

"அப்படியா? நீங்கள் நடத்திய ஓரிரு வழக்குகள்......"

"கோடம்பாக்கம் வழக்கு."

"ஆறுமுகம் — ருக்மிணி வழக்குத்தானே? அதிலேகூட ராஜரங்கம், சப் இன்ஸ்பெக்டர் நடராசன் ஆகியோர் சம்பந்தப்பட்டிருந்ததாகப் படித்திருக்கிறேன்."

"அந்த வழக்கில் வாதாடி வெற்றி கண்டு விடுதலை வாங்கிக் கொடுத்ததுண்டு. ஆனால் ஆந்திரா பாங்கு வழக்கில்......"

"சூரியநாராயண கொலை வழக்குதானே?"

"ஆமாம், அதில் விஜயகுமார் என்று ஒரு இளை நடிகர்......"


"அவருக்குத் தூக்குத்தண்டனை கிடைத்ததாக அல்லவா ஞாபகம்!"

"நீதியின் பிடியில் சிக்கிக் கொண்டுவிட்டால் ஒருவன் தண்டனைக்கு அஞ்ச முடியுமா? ஆயினும், மரண தண்டனை பெற்றுவிட்ட அந்த நடிகர் கடைசி சில நாட்களில் மனச் சஞ்சலமுற்றுத் தவித்தார். இறப்பவருக்கு ஆறுதல் வேண்டும் என்ற எண்ணத்தோடு, நாளைக்கொரு தடவையாவது சிறைச்சாலை சென்று பார்ப்பேன். ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு, அவர் நினைவாகவே மீதிப் பொழுதையும் போக்கச் சொன்னேன். வழக்காடுவதோடு வக்கீல்களின் வேலை முடியவில்லை, தண்டனை பெற்றவர்களுக்கு ஆறுதல் சொல்லும் பணியும் அவர்களுக்கு உண்டு என்பதை அந்த நிகழ்ச்சி எனக்கு உணர்த்தியது. தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முதல் நாள் அவர் தமது உடைமைகள் என்று சொல்லக்கூடியவற்றை என் பொறுப்பாக்கிச் சென்றார். அவை விலை உயர்ந்தவை இல்லையென்றாலும் விலைமதிக்க முடியாதவை. நாலு வார்த்தைகள் ஆறுதல் சொன்னதற்காக என் மீது அவருக்குத்தான் எத்தனை நம்பிக்கை! அவர் அளித்துச் சென்ற பொருள்கள் இன்னும் என்னிடம் இருக்கின்றன, நினைவுச் சின்னங்களாக. மனித மனத்தின் விசித்திரங்களை நினைத்து நினைத்துப் பார்க்கிறேன். ஆண்டவனைப் போலவே, அவையும் விளங்காப் புதிராக இருக்கின்றன."

"இந்தத் தொழிலைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?"

"இருமுனைக் கத்தி. நீதியோடு நேர்மையும், நேர்மையோடு கண்டிப்பும் கண்டிப்போடு கருணையும் உறவாடும் இந்தத் தொழில் தர்க்கத்தையும் மனத் தத்துவத்தையும் ஆதாரமாகக் கொண்டது; மூளைக்கு வேலை கொடுத்து மனத்துக்கு இதம் தருவது. இதற்கு மேல் 'அப்பீல்' இல்லை." —ரா. வீ.

"அம்மா எனக்காகத் தான் ஸிந்தால் பவுடர் வாங்கினாள்...



ஆனால் பெரும் பங்கு தனக்காகவே பயோகிக்கிறாள்.

"அதன் சுகமான வாசனையில் சொக்கி விட்டாள் அம்மா. அப்பாவும் இதையே உபயோகிக்கிறார்....அதிலுள்ள ஜி-11 (ஹெக்ஸாக்ளோரோபீன்) தம் உடம்பிலே நாற்றமென்பதே ஏறாமல் பாதுகாக்கிறது என்கிறார் அப்பா. அழகுதான்! எனக்காக வாங்கி விருக்கிறாள்...வேர்க்குரு வாராமல் என்னைக் காக்க...எனக்குத் தானே அதிகம் தேவை".

ஸிந்தால்
டாய்லெட் பவுடர்

புதுமலர்ச்சி பெற இரு மடங்கு உறுதி யுணர்வு—ஜி-11 (ஹெக்ஸாக்ளோ-ரோபீன்) அடங்கிய ஸிந்தால் சோப் உபயோகித்தபின் ஸிந்தால் டாய்லெட் பவுடரைத் தூவிக் கொள்ளுங்கள்.



கண்கவரும் 2 வகை டப்பாக்களிலே இன்று கிடைக்கிறது ஸிந்தால் டாய்லெட் பவுடர்.

ஜி-11 என்பது, ஸ்விஸ் ஜிவோடன் ஏ ஜி எஸ்.ஏ. அவர்களின் ட்ரேட் மார்க்.

INTERPUB/GCPA

[அந்தக் காலத்து அல்லி நினைவு வருகிற மாதிரி இந்தக் காலத்தில் ஒரு மல்லி தோன்றினால் ராஜ தந்திரத்தில் சிறந்த ஓர் அர்ஜுனனும் தேவைதான்!]

அந்த ஆபீசுக்குப் புத்தம் புதியவனான அர்ஜுனன் (வேலையில் சேர்ந்து இரண்டரை மணி நேரமே ஆகிறது) தனது புத்தம் புதிய எவர்சில்வர் டிபன் கேரியரைத் தூக்கிக் கொண்டு டைனிங்ஹாலுக்குள் செல்ல முதற் படியில் கால் வைத்ததும் கலகலவென்று சிரிப்பொலி கேட்டது. விக்கிரமாதித்த மகாராஜா சிம்மாசனத்தில் உள்ள மாதிரி இந்த டைனிங்ஹால் படிக்கும் ஏதாவது ஒரு வல்லிப் பதுமை காவல் இருக்கிறதா, ஒருவேளை அதுதான் நகைக்கிறதோ என்றெல்லாம் குழம்பியவாறு சுற்றுமுற்றும் பார்த்தான் அர்ஜுனன்.

சிரித்தது பியூன் கார்க்கோடகன்.

''சார்! அந்த டைனிங்ஹாலுக்கா போறீங்க? வேணும் சார். அங்கே ஆம்பளைங்க போய்ச் சாப்பிடறதில்லே.''

'' ஏன் ?'' —அர்ஜுனன் வினவினான்.

'' அங்கே அல்லிராஜ்யம் நடக்குதுங்க. நம்ப ஆபீஸிலே வேலை செய்யற ஒம்பது பொம்பளைங்களும் அந்த ஹாலைப் பிடிச்சிட்டு ஆம்பளைங்க யாரையும் வர விடறதில்லே. ஆம்பளைங்க அதோ அந்த மரத்தடி. வராண்டா இங்கே தான் சாப்பிடுவாங்க.''

''அப்படியா? இதைப் பத்தி மானேஜரிடம் யாரும் புகார் சொல்லலியா?''

''ஹூம், அதை ஏன் கேக்கிறீங்க? புகார் கொடுத்துட்டு வீராதி வீரன்மாதிரி இதுக்குள்ளே போனாரு டெஸ்பாட்சில் சீதாராமன். பாவம், அவர் பட்டபாடு இருக்கே..!''

கார்க்கோடகன் சுவாரசியமாக விவரித்த அந்தச் சம்பவத்தின் சுருக்கம் :

சீதாராமனுக்கு அந்த ஆபீஸில் சற்றுத் துணிச்சலானவன் என்று பேர். ஒரு நாள் அவனுக்குத் துணிச்சலுடன் தன்மான உணர்ச்சியும் பீறிட்டுக் கொண்டு வரவே டைனிங் ஹாலில் ஆண்களுக்கும் உரிமை உண்டு என்பதை நிலைநாட்டத் தன் டிபன்பாக்ஸுடன் வீராவேசமாகப் புறப்பட்டான்.

டைப்பிஸ்ட் ஞானம்பாளுக்கு ஞானக் கண் உண்டோ என்னவோ, மாறு கண் மட்டும் உண்டு. சீதாராமன் அவளுடைய கதிர்வீச்சுப் பார்வைக்குத் தப்ப முடியுமா?

''சேவகி! என்ன நமது அந்தப்புரத்தில் திடீரென்று ஆண் வாடை வீசுகிறது?'' என்று முழக்கினாள் ஞானம்பாள். அவ்வளவு தான். பெண்கள் கூட்டம் சீதாராமனைச் சூழ்ந்து கொண்டது.

''நமக்கெல்லாம் ஏதோ ஸ்பெஷல் டிபன் கொண்டு வந்திருக்கிறார் மிஸ்டர் சீதாராமன்'' என்று ஒலிபரப்பிக் கொண்டே அவன் கையிலிருந்த டிபன் பாக்ஸைப் பறித்தாள் மல்லிகா. பெண்கள் குழுவின் தலைவி அவள்.

டிபன்பாக்ஸைத் திறந்த ஸ்டெனோ இசபெல்லா குதித்தாள்.

''தோசையா! தயிர் வடை.....!''

மல்லி ராஜ்யம்!



வடைகளைப் பங்கு போட்டுக் கொண்ட கூட்டம், 'ஆகா பிரம்மாத்' என்று மழலை மொழியில் மிழற்றியது.

"மிஸ்டர், சீதாராம்ஜி! உங்கள் மனைவி சர்க்கரைப் பொங்கல் செய்வதில் சமர்த்து என்று கேள்விப்பட்டேன். நாளைக்கு இதே மாதிரி எங்களுக்குச் சர்க்கரைப் பொங்கல் சமாராதனை செய்ய வேண்டும். ப்ளீஸ்!" என்று அன்புக் கட்டளையிட்டாள் ரிஸப்ஷன் ரேவதி.

"ஆமாம்!" என்று ஆமோதித்தது பரிவாரம்.

சீதாராமன் வெல வெலத்துப் போனான். அவனுக்கு இரண்டு கால்கள்தான் இருந்தன. இன்னும் இரண்டு கால்கள் எப்பொழுது முளைத்தனவோ? நாலு கால் பாய்ச்சலில் டைனிங்ஹாலைவிட்டு வெளியே பாய்ந்தான். அந்த ஹாலை மட்டுமல்ல. ஆபீசைவிட்டே அதே வேகத்தில் ஓடிப் போக இருந்தவனைப் பியூன் கார்க்கோடகன்தான் வளைத்துப் பிடித்து நிறுத்தினான்.

"ரொம்ப அரட்டைங்க சார், இதுங்க. சீதாராம் சார் விவகாரத்துக்கு அப்புறம் ஆம்பளைங்க யாரும் அந்தப் பக்கம் எட்டி கூடப் பார்க்கறதில்லே" என்று முடித்தான் கார்க்கோடகன்.

வழவழப்பான தன் முகவாய்க்கட்டையை ஒரு நிமிஷம் சிந்தனையுடன் தடவிவிட்ட அர்ஜுனன், "ஆல்ரைட்! சீதாராமனால் செய்ய முடியாத காரியத்தை நாளைக்கே நான் செய்து காண்பிக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு மரத்தடியை நோக்கி நடந்தான்.

கார்க்கோடகன் ஒரு துள்ளுத் துள்ளினான். நாளைக்கு 'அர்ஜுனன் வதைப் படலம்' பார்க்கப் போகிறோம் என்ற குதூகலத்தில்.

மறு நாள்.

கார்க்கோடகன் மூலம் செய்தி ஆண் ஜெப்பந்திகளிடையே ரகசியமாகப் பரவிவிடவே அலுவலகம் வந்த அர்ஜுனனை ஒவ்வொருவரும் அனுதாபமாகவும், பரிகாசமாகவும், தங்களுக்குச் சாபவிமோசனம் வாங்கித் தர வந்த அதிசய புருஷனாகவும் விதம் விதமான கோணத்தில் பார்த்தார்கள். எதற்கு வீண் வம்பு என்று புத்திமதி சொன்னவர்களும் உண்டு.

அர்ஜுனன் எதற்கும் அயரவில்லை. சாப்பாட்டு வேளை வந்ததும் உறுதியுடனும், தைரியமாகவும் தன் சின்ன டிபன்பாக்ஸுடன் டைனிங் ஹாலுக்குள் நுழைந்தான்.

வாழை இலைத் துணுக்கு ஒன்றைத் தன் எதிரில் விரித்துத் தண்ணீர்த் தெளித்துவிட்டு டிபன்கேரியரில் கைவைத்த ஞானாம்பாள், எலக்ட்ரிக் ஷாக் வாங்கியது போல் கையை உதறினாள்.

"சேவகி! என்ன இடமென்று இங்கே ஆண் வாடை வீசுகிறது?" — பழைய பல்லவி.

அர்ஜுனன் ஒரே தாவில் அவள் முன் போய் நின்றான்.

"அடடே! போலீஸ் இலாகாவில் நாய்களுக்குத்தான் மோப்பம் பிடிக்க ட்ரெயினிங் கொடுக்கிறார்கள் என்று நினைத்திருந்தேன். உங்களுக்குக்கூடவா கொடுத்தார்கள்?"

"ஷட் அப்!" ஞானாம்பாள் கண்ணும் மூக்கும் சிவக்க உறுமினாள்.

"ஓ..... இவருதான் புது அர்ஜுனனா?" என்று கேட்டுக் கொண்டே அவன் எதிரில் வந்தாள் ரேவதி.

"மகாபாரதத்தில் வரும் பழைய அர்ஜுனனும் நானேதான். இது இரண்டாவது பிறவி. அதிருக்கட்டும்! நீங்கள் என்ன உயரத்தை விடக் குறுக்களவில் ஜாஸ்தியாயிருப்பீர்கள் போலிருக்கிறதே! சௌண்டி எம். எம். சினிமாவுக்குச் சரியான கதாநாயகி!" என்று



ஏ.எஸ்.சுந்தரராஜன்



அவளை ஒரு கேமராப் பார்வை பார்த்தான் அர்ஜுனன்.

முத்துப் பற்கள் நரநர வென்று நொறுங்கும் ஓசை கேட்டது. தனது தளபதிகள் நிறைநுவதைக் காணச் சகிக்காத மல்லிகா அவசரம் அவசரமாக உதவிக்கு வந்தாள்.

''கோபித்துக் கொள்ளாதே ரேவதி. நம் அர்ஜுனன் ரொம்ப நல்லவர். நமக்காக ஸ்பெஷல் டிபன் கொண்டு வந்திருக்கிறார்!''

அர்ஜுனன் முந்திக் கொண்டான். மல்லிகா டிபன்பாக்சைப் பறிப்பதற்குமுன் அதை அவள் கரங்களில் திணித்து விட்டு, ''ஓ....! சாப்பாட்டை மாற்றிக் கொள்ள எனக்கு ஆட்சேபணையில்லை'' என்றான். அதோடு நிற்காமல் மின்வெட்டும் நேரத்தில் மல்லிகாவின் டிபன்காரியரைத் தூக்கி வந்து சாப்பிடவும் தொடங்கி விட்டான்.

பெண்கள் கூட்டம் மூச்சு விடவும் மறந்து திகைத்து நின்றது.

''ஷேம்! ஷேம்!'' — வெளியே ஆரவாரம் கேட்டது. அதைத் தொடர்ந்து முப்பத்து மூன்று ஆண் சிப்பந்திகளும் திமுதிமுவென்று டைனிங்ஹாலுக்குள் நுழைந்தார்கள். அவ்வளவுதான். தங்கள் டிபன்கேரியர்கள் சூறையாடப்படாமல் காப்பாற்றிக் கொள்ளவே பெண்கள் அரும்பாடுபட வேண்டியதாயிற்று. கேஷியர் தனது பழைய கோட்டைக் கழற்றி ஒரு கம்பில் கட்டி உயர்த்திப் பிடித்தார். ஆண்களின் உரிமை இப்பொழுது கோட்டுக் கட்டிப் பறந்தது அங்கே !

சாவகாசமாகச் சாப்பிட்டு முடிந்த அர்ஜுனன் ''ரொம்ப தேங்க்ஸ் மல்லிகா. உங்கள் சமையலுக்குத் தாராளமாக 'ஃபூ' சர்ட்டிபிகேட் கொடுக்கலாம். அடடே! என்ன இது. இன்னும் என் கேரியரைத் திறக்காமலேயே வைத்திருக்கிறீர்கள் ?''

மல்லிகா உஷ்ணமாக அவனைப் பார்த்தாள். உஷ்ணம் என்றால் என்னும் கொள்ளும் மட்டுமென்ன, கண்டைக்காய் வெண்டைக்காய்கூட வெடித்துவிடும்.

அப்படிப்பட்ட மல்லிகாதான் மாலை நான்கு மணிக்கு அவனை நோக்கி வந்தாள். அர்ஜுனனுக்கு வியப்பு அடங்கவில்லை.

நல்ல வேளை. அவனை அதிக நேரம் குழப்பத்தில் ஆழ்த்திருக்க விடாமல் மல்லிகா அவசர அவசரமாக, தான் அவனை நாடி வந்த விஷயத்தைச் சொன்னாள்.

அந்த ஆபீஸ் மானேஜர் நடுத்தர வயதைக் கடந்தவர்தான் என்றாலும் இடீர் இடீரென்று இங்கிதமற்ற சபலத்துக்கு இரையாகிவிடக்கூடியவர். இத்தனை நாட்களாக இல்லாமல் இப்பொழுது அவரது கழுகுப் பார்வை மல்லிகாவின் மேல் படவே சாயந்திரம் தம்முடன் சினிமாவுக்கு வரவேண்டும் என்று ஆர்டர் போட்டுவிட்டார். இந்த இக்கட்டிலிருந்து தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்பது மல்லிகாவின் கோரிக்கை.

அர்ஜுனனுக்குத் தன் வேலையின் கடுமை புரிந்தது. டைனிங்ஹால் படையெடுப்பு மாதிரி சாதாரணமான விஷயமா இது? மானேஜரை நினைக்கும் போதே பகீரென்றது. கையில் மிளகாய்ப் பொடியே இருந்தாலும்கூட அவர் கண்களில் தூவுவது அவ்வளவு சுலபமான காரியமல்லவே !

''ஏன் தயங்குகிறீர்கள் அர்ஜுனன்? என்னுடைய நிலைமை இன்னும் உங்களுக்குப் புரியவில்லையா? மானேஜருடன் போனால் மானத்துக்கு ஆபத்து. போகாவிட்டால் வேலைக்கு ஆபத்து. உங்கள் ஒருவரால்தான் இந்த இக்கட்டிலிருந்து என்னைத் தப்புவிக்க முடியும். நீங்கள் மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் உதவி செய்தால்.......''

''உதவி செய்தால்....?''

மல்லிகா பதில் சொல்லவில்லை. அர்த்த புஷ்டியுடன் ஒரு பார்வை பார்த்தாள். அர்ஜுனனுக்குப் புரிந்தது. அந்தப் பார்வையின் பொருள்.

''ஆகட்டும், பார்ப்போம்!'' என்று அவளுக்கு அபயம் கொடுத்துவிட்டானே தவிர மானேஜரைச் சமாளிப்பது எப்படி என்பதுதான் அவனுக்கு விளங்கவேயில்லை.

சரியாக ஆறரை மணிக்கு மானேஜரின் கார் சினிமாத் தியேட்டரின் முன்னால் வந்து நின்றது. அர்ஜுனன் எங்காவது தென்படுகிறானா என்று கண்ணால் துழாவியபடி காரிலிருந்து இறங்கினாள் மல்லிகா. எங்கேயும் அவனைக் காணாது போகவே அவள் முகம் சிறுத்துவிட்டது. கண்கள் கலங்கின. மானேஜர் காரைப் 'பார்க்' பண்ணிவிட்டு டிக்கெட் வாங்கி வரச் சென்றார்.

ஐந்து நிமிஷம் இடைவெளி.

கையில் டிக்கெட்டுகளுடன் திரும்பிய மானேஜரை வழிமறித்தாள் ஒரு மாது.

''என்ன இது. இரண்டு டிக்கட்டுகள்தானா வாங்கினீர்கள்? நான் குழந்தைகளையும் கூட்டி வந்திருக்கிறேனே!''

மானேஜர் திருதிருவென்று விழித்தார். அந்த நிலையில் எதிரில் தம் மனைவியையும். ஏழு குழந்தைகளையும் பார்க்கும் எந்தக் கணவரும் அப்படித்தானே விழிப்பார் ?

மானேஜரின் மனைவி தொடர்ந்து சொன்னாள்:

''ஆனாலும் நீங்கள் ரொம்ப மோசம். சினிமாவுக்குப் போக வேண்டும் என்றால் கொஞ்சம் முன்னாடி சொல்லி அனுப்பக் கூடாது? சரியாக ஆறேகாலுக்கு 'போன்' பண்ணுகிறீர்கள், தியேட்டருக்கு வரச் சொல்லி. பசங்களை யெல்லாம் தயார் பண்ணுவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.''

'அட சனியனே!' சினிமாவுக்கு வரச் சொல்லி 'போன்' பண்ணினேனா, என்ன உளறல்?' என்று மனத்துக்குள் பொருமிய அவர் ஏக்கத்துடன் மல்லிகா நின்றிருந்த இடத்தைப் பார்த்தார். அவள் நின்ற இடம் காலி.


ஃ ஃ ஃ

ஹோட்டல் 'டிரைவ் இன்'னில் ஒரு காட்சி.

தங்கள் முன் கொண்டு வந்து வைக்கப்பட்ட புரூட் சாலடை ருசி பார்க்கத் தோன்றாமல் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அமர்ந்திருந்தார்கள் மல்லிகாவும் அவளுக்கு அபயமளித்து ஆட்கொண்ட அர்ஜுனனும்.

என்ன ஆச்சரியம் பாருங்கள். ஐந்து நிமிஷங்களுக்கு முன்புதான் காதலிக்க ஆரம்பித்தவர்களானாலும் உடனே கண்ணால் பேசும் கலையில் மட்டும் எப்படியோ 'எக்ஸ்பர்ட்' ஆகிவிட்டிருந்தார்கள் !


மயிலின் தோகை
அழகு வாய்ந்ததே!
அதினும் அழகிய
கூந்தலை அளிப்பது
கேசவர்த்தினி
உடனடியாக உபயோகிக்க
கேசவர்த்தினி
ரெடிமிக்சட்
ஹேர் ஆயில்


மூட்டுகளிலே
வலி, பிடிப்பு?
'அயோடெக்ஸ்'தடவி உடனே வலியை
அகற்றுங்கள். அதில் சேர்ந்துள்ள
ஆற்றும் சக்திவாய்ந்த பொருள்கள்
உள்ளே ஊடுருவி உடனடியாக
நிவாரணமளிக்கின்றன.
'அயோடெக்ஸ்'இப்போது வசதியான
ட்யூப் பாக்கிங்கில் கிடைக்கிறது.
தடவுங்கள்
அயோடெக்ஸ்—
தணியுங்கள்
வலியை
IODEX
அயோடெக்ஸ் ®
ஸ்மித் க்லைன் & பிரெஞ்ச் (இந்தியா) லிட்., பம்பாய்-1



நிஜாம் எவ்வளவு பெரிய பணக்காரர்?



நிஜாம் எவ்வளவு பெரிய பணக்காரர் என்ற விஷயம், இந்திய சர்க்காருக்கு மட்டுமே தெரிந்திருக்கும் ரகசியம்.

1953—ஆம் ஆண்டு மாநில சர்க்காரின் அப்போதைய செக்ரடரியாகப் பதவி வகித்த ஸ்ரீ சி. எஸ். வெங்கட்டாச்சார், நிஜாமின் சொத்து விவரங்களைப் பற்றிய ஒரு மதிப்பீட்டை அவரிடம் சேர்ப்பித்தார்.

அப்பத்திரத்தில் உள்ள விவரங்கள் வெளி வுலகுக்குத் தெரியாதபடி மிகவும் ரகசிய மாகவே வைக்கப்பட்டுள்ளன. 'இருந்தாலும் — இங்கிலாந்திலும், இந்தியாவிலும் உள்ள பல நூலகங்களிலிருந்து 'ஆராய்ந்து சேகரித்த விஷயங்களைக் கொண்டு பார்த்தால் நிஜாமின் சொத்து குறைந்தபட்சம் எவ்வளவு இருக்கும் என்று உத்தேசமாகக் கணிக்கலாம்.

1944லிருந்து நிஜாமின் சொத்து படிப் படியாகக் குறைந்தே வந்திருக்கிறது. அப் போது அதன் மதிப்பீடு சுமார் 800 கோடி ரூபாய். ஆனால் சுதந்திர ஹைதராபாத்தை நிறுவ வேண்டும் என்ற அவரது முயற்சி தோற்றதன் விளைவாக, நாற்பது கோடி ரூபாய் அவர் நஷ்டமடைந்தார்.

'இந்திய போலீஸ் நடவடிக்கை'க்குப்பின் அரசாங்கம் அவரது உடைமைகளை, அவரது பூர்வீகச் சொத்து என்றும், நில வருவாயில் பெருகிய சொத்து என்றும் இருவகையாய்ப் பிரித்தது. முன்னதை அவரிடமே விட்டு விட்டு, நில வருவாயில் பெருகிய சொத்தை மட்டும் முன்னாள் ஹைதராபாத் மாநிலத்தின் பல பாகங்களுக்கும் பங்கிட்டு வழங்கி விட்டது. அது தவிர, அவரது நிலபுலன்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டதற்கு நஷ்ட ஈடாக, இந்தியாவில் அவருக்குத்தான் அதிகத் தொகை பராமரிப்புப் பணமாக வழங்கப்பட்டது; அவரது உடைமைகள் சில, வரிகளிலிருந்து விலக்கப்பட்டன.

கடைசியாக நிஜாமின் வரவுசெலவுகளைக் கூட்டிக் கழித்த போது, அவரது சொத்து 135 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டது. அதில் ரொக்கமாய்க் கையிருப்பில் இருந்தது. 35 கோடி ரூபாய்; நகைநட்டுகளாகப் 50 கோடி; மீதி 50 கோடி மத்திய, மாநில அரசாங்கங்களின் பத்திரங்களில் தங்கி விட்டன. அதில்கூட 19 கோடி ரூபாய் அவர் ஆந்திரப் பிரதேச அரசாங்கத்துக்கு வட்டி யில்லாக் கடனாகக் கொடுத்ததாய்ச் சொல் லப்படுகிறது.

நிஜாமின் பெரும்பாலான நகைகள் ஒரு பம்பாய் பாங்கின் பாதுகாப்பிலும், வைரங் களும், முத்துக்களும் ஹைதராபாத்திலும் வைக்கப்பட்டிருப்பதாய்ச் சொல்லப்படுகிறது. அவைகளில் குறிப்பிடத்தக்கவை இரண்டு வைரங்கள். ஒன்று, 'ஜேகப் டயமண்ட்' என்ற பெயருள்ள 150 காரட் வைரம். அதன் மதிப்பு 150 லக்ஷ ரூபாய். இரண் டாவது 277 காரட் எடையுள்ள 'நிஜாம் டயமண்ட்'.

1950-ல் புகழ்பெற்ற ஒரு பம்பாய் நகை வியாபாரி, அவருடைய பொக்கிஷ சாலை

யைப் பார்வையிட்டு, 'நிஜாமின் ஆபரண நிர்ணயக் குழுவுக்கான தாக்கீது ஒன்றைத் தயாரித்தார்.

'கிங்கோட்டை' அரண்மனையில் பொக்கிஷச் சாலை ஏறத்தாழ 120 அடி நீளமும், 40 அடி அகலமும் இருக்கும். அங்குள்ள பொக்கிஷங்களோடு கிடைத்தற்கரிய 22 பச்சைக் கற்களைக் கண்டார். அவைகளின் மொத்த நிறை 400 காரட் என மதிப்பிடப்பட்டது. அவற்றில் மிகப் பெரிய கல் 50 காரட்டும், சிறிய கல் பத்து காரட்டும் இருந்தன. 'அடர் பச்சை வண்ணம் கொண்ட அவைகள் மிகப் பிரகாசமாய்த் திகழ்ந்தன' என்று தம் 'ரிப்போர்ட்'டில் எழுதியுள்ளார் அவர். அவற்றின் ஒட்டுமொத்த மதிப்பு அதில் குறிக்கப்பட்டுள்ளபடி 55 லக்ஷ ரூபாய்.

முழுவதும் கற்கள் பதிக்கப்பட்ட ஓர் அழகுமிக்க உடைவாளும் அங்கு காணப்பட்டது. அந்த வியாபாரி தம் ரிப்போர்ட்டில் அதைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'நிஜாமின் புராதனப் பொக்கிஷங்களின் நிலையான காவலாள்'' என்று எழுதியிருக்கிறார்.

மிக அருமையான கிழக்கத்திய ஆபரணங்கள் அவருக்குக் காட்டப்பட்ட போது, ''இது போன்ற அணிகளை இதுவரை நான் பார்த்தது இல்லை!'' என்றாராம்.

அவைகளில் ஒன்றின் மாதிரியைக்கூட என்றும் இப்போது செய்ய இயலாது.



மறைந்துவிட்ட கலைத் திறனின் இணையற்ற உதாரணங்கள், அவைகள்! நிஜாம் சேகரித்துள்ள கீழ்த்திசைக் கலைப் பொருட்கள் உலகத்தில் உன்னதமாய் விளங்குகின்றன.'' — இவற்றையும் இன்னும் பல ஆபரணங்கள் தங்கம் வெள்ளிப் பாத்திரங்களையும் கலைப் பொருட்கள் ஆகியவற்றையும் மதிப்பிட அந்த நகை வியாபாரிக்கு நான்கு நாட்களாகி விட்டன.

நிஜாம் விலை உயர்ந்த வைரங்களையும், கரன்ஸி நோட்டுக்களையும் மரப் பெட்டிகளில் வைத்து பத்திரப்படுத்தியிருந்தார். சில வருஷங்களுக்குமுன், இங்கிலாந்திலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையான 'டெய்லி மெயில்' ஒரு கவையான தகவலைப் பிரசுரித்திருந்தது. நிஜாமின் பொக்கிஷசாலையில், நான்கு கோடி ரூபாய் மதிப்புள்ள இந்திய கரன்ஸி நோட்டுக்களை எலிகள் தின்று விட்டனவாம். அத்துடன் இரண்டு நகைப் பெட்டிகள் 'மாயமாய்' விட்டிருந்தனவாம்.

பெட்டிகள் ஒவ்வொன்றையும் திறந்து சரி பார்ப்பது என்பது அவருக்குச் சிரமமாய் இருந்ததாம். அவைகளின் மூடிகளையும், அவற்றின் மேல் படிந்துள்ள தூசியையும் கவனித்துக் கொண்டே போவாராம். தூசி கனமாய்ப் படிந்து, கலைக்கப்படாமல் இருப்பதைக் கொண்டு, யாரும் தன் பொக்கிஷங்களைக் களவாடவில்லை என்று திருப்தியடைவாராம். எலிகள் சாப்பிட்ட கரன்ஸிகளுக்கு அவர் மாற்றுக் கேட்ட போது, அரசாங்கம் மறுத்து விட்டதாய்ச் சொல்லப்படுகிறது.

ஒரு காலத்தில் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் டஜன்கணக்கான மாளிகைகள் உடையவராய் இருந்த நிஜாம், அரசாங்க நடவடிக்கைக்குப்பின் ஹைதராபாத்தில், மூன்று மாளிகைகளும், சிலபல சிறிய 'மான்ஷன்'களும் உடையவராய் இருந்தார். ஆந்திரப் பிரதேசத்தில் அதிகமான நிலம் உடையவராய் இருந்தவரும் அவரே! மொத்தமுள்ள 23497 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்படாமல் இருந்தவை 20143 ஏக்கர்; சாகுபடி செய்யப்படுபவை 3354 ஏக்கர்.

சில வருடங்களுக்குமுன், அவர் பூதான இயக்கத்துக்கு 3700 ஏக்கர் நன்கொடையாக அளித்தார். 1952ல் ஹைதராபாத் மாநகராட்சி அவரது சொத்துக்களின் மீது ஒன்றரை லட்ச ரூபாய் வரி விதித்தபோது, அவர் தம்முடன் அரசாங்கம் எடுத்துக் கொண்ட உடன்பாட்டைக் குறிப்பிட்டுத் தாம் வரி செலுத்த வேண்டியதில்லை என எடுத்துரைத்தார். இருந்த போதிலும், அவர் அந்நகராட்சிக்கு அரை லக்ஷ ரூபாய் அன்பளிப்பாக அளித்தார்.

1944ல் நிஜாம் எண்ணற்ற கார்கள் வைத்திருந்தார். காலத்துக்குத் தகுந்தாற் போல் செய்யப்பட்ட 'ரோல்ஸ்ராய்'லிருந்து நவீன மோஸ்தர் அமெரிக்கக் கார்கள் வரை அவர் மாளிகையில் வரிசைக்கிரமமாய் நிறுத்தப்பட்டிருக்கும். ஆனால் சமீப காலம் வரை, 1934ம் வருடத்திய ஃபோர்டு வண்டியில்தான் அவர் செல்வது வழக்கம்.

நிஜாம்] தம் காலம் வரை, மோட்டார் வாகன வரிகளிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தார். 1953ம் வருடக் கணக்கின்படி அவரது வாகன வரிசைகள் — கோச் வண்டிகள் தவிர — 34 மோட்டார்கள், 2 டெலிவரி வாகன்கள், 10 பஸ்கள், 2 டிரக்குகள், 4 ஆட்டோரிக்ஷாக்கள், 2 ஜீப்புகள் ஆகும்.

293 மில்லியன் ரூபாய்க்கு அவர் 28 'டிரஸ்ட்'கள் ஏற்படுத்தியிருந்தார். அவைகளில் பெரியது ஐம்பது மில்லியன் ரூபாயில் ஏழைகளுக்காக நிறுவப்பட்ட 'டிரஸ்ட்'. ஹைதராபாத்திலும், அதன் சுற்றுவட்டாரங்களிலுமுள்ள மக்களின் நலனுக்காகவும், மெக்கா, மதீனா செல்லும் யாத்ரீகர்களுக்காகவும் நிறுவப்பட்ட 4 மில்லியன் ரூபாய் டிரஸ்ட் ஒன்றும், நிஜாமின் பாரசீக, உருதுக் கவிதைகளைப் பிரசுரிப்பதற்காக 125 ஆயிரம் ரூபாய் டிரஸ்ட் ஒன்றும், 'மதரஸே ஹாபீஸ்' என்னும் மதபோதனைக் கல்லூரிக்காக இரண்டு லக்ஷ ரூபாயை டிரஸ்டும் குறிப்பிடத்தக்கவை.

ஒவ்வொரு வருஷமும் அரசாங்கம் அவருக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்து வந்தது — 50 லக்ஷ ரூபாய் அவரது செலவினங்களுக்காக; மீதி 50 லக்ஷம், அவரது 45 லக்ஷம் ஏக்கர் நிலங்களை மாநில அரசாங்கம் எடுத்துக் கொண்டதற்கு நஷ்டஈடாக! இரண்டாவதாய்க் கிடைக்கும் பணத்தில் அவர் 25 லக்ஷ ரூபாய் மாநில அரசாங்க நிதிக்கு அளித்து வந்தார்.

பம்பாய், கல்கத்தா, புதுதில்லி ஆகிய நகரங்களில் உள்ள அவரது மூன்று மாளிகைகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அவைகளின் மொத்த மதிப்பு இரண்டு கோடி ரூபாய்.

1947ல் அவர் பூதான இயக்கத்துக்கு 3700 ஏக்கர் நிலம் வழங்கியதைத் தொடர்ந்து, அநேக சந்தர்ப்பங்களில் மூன்றரை கோடி ரூபாய் வரை நன்கொடைகள் அளித்துள்ளார். 1943-ல் 'பாலஸ்தீன அகதிகள் நிதி'க்கு 10 லக்ஷமும் 1952ல் உஸ்மானியா சர்வகலாசாலைக்கு 3 கோடியும், தாகூர் நிதிக்கு ஐந்து லக்ஷமும் வழங்கியது, அவைகளில் சில!

நிஜாமின் குடும்பம் மிகப் பெரியது. மூன்று மனைவிகள், 'பேகம்' என்ற பட்டத்துடன் 40 ஆசை நாயகிகள், 36 குழந்தைகள், 46 பேரன் பேத்திகள், 16 மருமகப் பெண்கள், 100 'ஹானஜாத்'கள்— மொத்தம் 241 பேர்கள் கொண்டது. உயர்குடி முஸ்லீம் குடும்பங்களிலிருந்து, நிஜாமின் தர்பார் விவகாரங்களைக் கவனிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வாலிபர்கள், இந்த 'ஹானஜாத்' என்பவர்கள். நிஜாமின் குடும்பத்தின் ஒரு பகுதியாய் அவர்களும் இணைக்கப்பட்டிருந்தனர். அக்குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் மூன்றிலிருந்து நான்கு வேலைக்காரர்கள்வரை நியமிக்கப்பட்டிருந்தனர். அதன்படி, — 'கிங்கோட்டீ' மாளிகையில் ஆயிரம் வேலையாட்களுக்கு மேல் உலவிக் கொண்டிருந்ததாய்த் தெரியவருகிறது.

அந்தக் குடும்பத்துக்கான உணவு வகைகளை நிஜாமே எழுதிக் கொடுப்பாராம். அவர் அப்படிச் சிக்கனமாய் இருந்தும்கூட, அக்குடும்பத்தின் செலவு 20 லக்ஷரூபாய் ஆயிற்று. காய்கறி, பலசரக்கு பில் மட்டும் வருடத்துக்கு 5 லக்ஷ ரூபாய் ஆகிவிடும்.

நிஜாமின் மாளிகையில் நூற்றுக்கணக்கான அடிமைகள் வைக்கப்பட்டுள்ளதாய்ச் சில வருடங்களுக்குமுன் ஹைதராபாத் வக்கீல் ஒருவர் ஹைகோர்ட்டில் புகார் செய்தார். அதன் பேரில் அதனைப் பரிசீலிக்கும் பொருட்டு ஒரு போலீஸ் கமிஷனர் அங்கு அனுப்பப்பட்டார். ஆனால் அங்குள்ளவர்களில் ஒருவர்கூட அதைப் பற்றிக் குற்றம் குறை கூறாததின்பேரில், நிஜாமுக்கு எதிராயிருந்த புகார் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

தமக்குப் பராமரிப்புப் பணமாய்க் கிடைக்கும் 50 லக்ஷ ரூபாயில், 6 லக்ஷம் தன் மூத்த மகனான 'பிரார்' இளவரசனுக்கும், 4 லக்ஷம் இரண்டாவது மகனுக்கும், ஒன்றரை லக்ஷம் 'பிரார்' இளவரசிக்கும், மற்றுமோர் ஒன்றரை லக்ஷம் தன் மூத்த பேரனுக்கும் கொடுத்து வந்தார். ஆனால் கொடுக்கப்படும் பணம் போதாமல், பிரார் இளவரசர் பெருமளவில் கடன்பட்டிருந்தார். பதினேழு வருஷங்களில் அவர் பட்டிருக்கிற கடனைத் தீர்க்க நிஜாம் கொடுக்க வேண்டியிருந்த பணம், ஐம்பது மில்லியன் ரூபாய்க்கும் மேல்!

நிஜாமின் செலவினங்களில் மற்றொன்று, அவரை நம்பியிருந்த கணக்கற்ற அவரது முன்னோர்களின் சந்ததிகள். 'ஸாகப்ஸாதா' என்றும், 'ஸாகப்ஸாதி' என்றும் அழைக்கப்பட்ட அவர்கள் ஒவ்வொருவரின் பராமரிப்புக்கும் அவர், அவரவர் தகுதிக்கேற்ப மாதம் 25000 ரூபாய் முதல் 46 ரூபாய் வரை கொடுத்து வந்தார்.

நிஜாமின் பிரத்யேக ராணுவம் 2900 அரேபிய வீரர்களைக் கொண்டது; இப்போது அவர்களுக்கு வயதாகிவிட்டது. அவர்களில் பெரும்பாலோர் அவரது முன்னாள் மெய்க்காப்பாளர்கள். அரசாங்கத்துடன் அவர் செய்திருந்த உடன்படிக்கையின்படி, அவர் தமக்கென்று ஒரு சிறிய ராணுவம் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரது ஆக்ஞையே அரண்மனைச் சுவர்களுக்குள் முடிவானதாகக் கருதப்பட்டது. மாளிகைக்கும், பொக்கிஷங்களுக்கும் காவலாகக் கெட்டித்த துப்பாக்கிகளுடன் எப்போதும் நூறு வீரர்கள் நின்று கொண்டிருப்பார்கள். அவரது ராணுவத்துக்கான தளவாடங்களை ஆந்திரப் பிரதேச அரசாங்கமே விநியோகித்து வந்தது.

பல மகாராஜாக்கள் தங்கள் ராஜ வாழ்வை விட்டு விட்டுச் சாதாரணமாய் வாழ்வதைக் கண்ணுறும் போது அவர் மிகவும் ஏமாற்றமடைவார்.

1952-ல் பிரதம மந்திரி நேரு புதுதில்லியில் அவருக்கு அளித்த விருந்தின்போது, பரோடா, ஜெய்ப்பூர் மகாராஜாக்கள் தங்கள் 'டர்பன்' இல்லாமல் வந்ததைக் கண்ட நிஜாம், ''ஆ! எத்தகையதோர் வீழ்ச்சி!'' என்று வியந்து கூறினாராம்.

சமீபத்தில் 'மிர்ரர்'ல் வெளியான கட்டுரை.

தமிழாக்கம் : என். ஆர். லக்ஷ்மி

அத்தியாயம் 13

தீவுக்குச் செல்கிறார்கள்!

மன்றத்துக்கு வெளியே அழலாடிக்காகக் காத்திருந்த ஆதனார் அப்படியே ஓடிவந்து தமது மாணவனை ஆவி சேரத் தழுவிக் கொண்டார். அவருடைய கண்கள் கலங்கின. ஆனாலும் கலக்கத்தைச் சரிப்படுத்திக் கொண்டு பேசினார்:

''தம்பி, நீ உன்னுடைய அறையிலே சென்று எனக்காகக் காத்திரு. நான் மன்னரைச் சந்தித்துப் பேசிவிட்டு வருகிறேன்!''

இவ்வாறு சொல்லி அழலாடியை அனுப்பினார் ஆதன் ஆசிரியர். அழலாடி தனது கூடத்துக்கு வந்து ஆசிரியருக்காகக் காத்திருந்தான். சற்று நேரத்தில் ஆசிரியர் திரும்பி வந்தார்.

''தம்பி, நிகழ்ச்சிகள் போருக்கான ஏற்பாடுகளுடன் ஆயத்தம் ஆகின்றன. நாம் அனைவரும் நம்முடைய தனிப்பட்ட இன்ப துன்பங்களை யெல்லாம் மறந்து, தமிழகத்தின் எதிர்கால வாழ்வுக்காக ஒரே மனத்தோடு போராட வேண்டிய தருணம் வந்து விட்டது. இதை வற்புறுத்திச் சொல்ல வேண்டியதே என்னுடைய முதலாவது கடமையாக இருக்கிறது. மன்னரும் இப்போது அதையே கூறினார். மனைவியை இழந்த ஒரு கணவனின் மனநிலை எவ்வாறு இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளாத மனிதன் இல்லை நான். ஆனால் நாம் அனைவரும் அரசப் பணியிலே ஈடுபட்டுள்ள போர்த் தொண்டர்கள். நமக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் உண்டு!'' என்று பேச்சைத் தொடங்கினார் ஆதனார்.

''ஆசிரியர் பெருமானே, நீங்கள் சொல்ல வருகிற செய்திக்கு, அதன் துயரத்துக்கு ஏற்கனவே என்னை நான் ஆயத்தமாக்கிக் கொண்டு விட்டேன். முல்லைமூதூரிலே பிடித்தெரிந்த




வெண்ணிலவுப்
பெண்ணரசி
சோமு

நெருப்பில் அந்த உத்தமப் பெண்மணி, பொன்மணி வெந்து சாம்பலாகி விட்டாள் என்பதைச் சொல்ல வருகிறீர்கள். மாற்றுடையிலே சென்று நீங்கள் அறிந்து வந்த செய்தி அது தானே?'' என்று கேட்டான் அழலாடி.

''தம்பி, துளுநாடு சென்று மாற்றுடையிலே அரசச் சுற்றத்தார்களிடையில் இருந்தேன். பொன்மணி மூதூரில் மறைந்து ஒளிந்து கொண்டிருந்ததை எண்ணி அந்த ஊருக்கே தீயிட்ட துளுநாட்டுப் படை, அவள் வெந்து சாம்பலாகிவிட்டதை மகிழ்ச்சியோடு பேசுகிறது. தானைத் தலைவனுக்கு இந்த நிகழ்ச்சியினால் உன்னையே பழி தீர்த்துக் கொண்டு விட்டதாக ஓர் எண்ணம்! அந்த எண்ணத்திலே அவன் திருப்தி அடைந்து களிப்போடு நடமாடுகிறான். சூலபாணிக் கிழவரோ சிறையிலே வேதனை அனுபவித்து வருகிறார். இதையெல்லாம் பார்த்ததும் என் உள்ளத்தில் துயரத்தோடு சேர்ந்து ஆத்திரமும் கடுஞ் சினமும் பொங்கி எழுந்தன. இந்தக் கயவர்களை அழித்து ஒழிக்கும் பெருமுயற்சியைத் தாமதமின்றித் தொடங்க வேண்டும் என்று ஒரு மன வேகம் எழுந்தது. அந்த வேகத்தோடு ஊர் திரும்பினேன். அதற்குள் மன்னரிடமிருந்து அவசரச் செய்தி வந்தது. உடனே இங்கு புறப்பட்டு வந்தேன். வந்தால் இப்போது மன்னர் ஆனை பிடிக்கும் ஏற்பாடுகளைப் பற்றி விரிவாகச் சொன்னார். இந்த ஏற்பாடுகள் முடிந்து ஆனைப் படை மேலும் வலுவடைவதுவரை நானும் இங்கேயே இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டார் அரசர். உன்னிடம் ஒப்படைத்துள்ள பணியைப் பற்றியும் கூறினார்'' என்றார் ஆதனார்.

இதன் பிறகு ஆதனாரும் அழலாடியும் தனியாக இருந்து அதிகமாக எதுவும் பேசுவதற்கே அவர்களுக்கு நேரம் இல்லாதபடி ஆனைக் காட்டிலே மும்முரமான ஏற்பாடுகள் தொடங்கின.

''படுகுழி'' என்றும் ''பயம்பு'' என்றும் தமிழ் இலக்கியங்களில் அழைக்கப்படுகிற பெரிய குழிகள், ஆனைக் காட்டிலே தோண்டப்பட்டன. பத்து முழம் ஆழமுள்ள பெருங் குழிகளைக் காட்டிலே ஆனைப் பாதைகள் கூடுகிற சந்தியில் தோண்டினார்கள். பத்து முழ நீளம், பத்து முழ அகலம், பத்து முழ ஆழத்திலே மும்மூன்று குழிகளாகத் தோண்டி ஆயப்படுத்தி, அந்தக் குழிகளின் மீது மூங்கிற் கம்புகளைப் பக்குவமாகப் பதித்து, மேலே தழைகளும் குழைகளும் புல்லும் பரப்பித் திறமையோடு இந்தப் பயம்புக் குழிகளைச் சீர்செய்தார்கள். குழிகளிலே வந்து விழும் ஆனைகளுக்கு அடிபடாமல் இருப்பதற்காகப் பயம்புகளின் உள் தரையிலே திட்டுத் திட்டாக இலைகளையும் புற் கட்டுக்களையும் பரப்பினார்கள்.

பயம்புகளைச் சுற்றித் தொலைவிலே மரங்களில் பரண்கள் கட்டி அரசச் சுற்றத்தார்கள் இருந்து பார்ப்பதற்காக ஏற்பாடுகள் செய்தார்கள். விழுந்த ஆனைகளைச் சுருக்காங் கண்ணி போட்டு மேலே இழுப்பதற்கான பெரிய பெரிய கயிறுகளை முறுக்கி அங்கங்கே கருவை போட்டார்கள். அரசனும் இளவரசி இளநன்னியும் இருந்து பார்ப்பதற்காக வென்றே தனியாக ஒரு பெரும் பரண் மரங்களினூடே *அமைத்து அதைச் சுற்றித் தழைகளால் வளைவு எழுப்பினார்கள். மந்தை மந்தையாக வருகிற ஆனைகள் கலைந்து போய்க் குழிகளிலே விழுவதற்காகப் பறையும் வளை முரசுகளும் ஆயத்தம் செய்து, ஆங்காங்கே மரங்களிலே கட்டினார்கள்.

ஆனைப் படையின் தானைத் தலைவன் வயது முதிர்ந்த கிழவன் என்றாலும் உள்ளத்திலே இளமையும், . வலிமையும் நிரம்பியவன். ஆனைகள் எப்படிக் குழிகளிலே வந்து விழும், அந்த ஆனைகளை எப்படிக் கயிறுகளிலே கண்ணி போட்டுச் சுருக்க வேண்டும், பிறகு அவற்றை எப்படி வெளியே இழுத்துக் கொண்டு வரவேண்டும், பின்னர் இந்த ஆனைகளைப் போர்ப் பயிற்சியிலே பழக்குவதற்காக ஏற்கனவே படையிலுள்ள பெரிய ஆனைகளைக் கொண்டு வந்து எப்படிக் காட்டானைகளுக்குப் பாடங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பதையெல்லாம் அந்தத் தானைத் தலைவன், அழலாடிக்குக் கற்பித்தான். ஆனைகளோடும், அவற்றின் கட்டளை மொழிகளோடும் நன்கு பழகியிருந்த ஆதன் ஆசிரியரும் அழலாடிக்குச் சில நுட்பங்களை உணர்த்தினார். வஞ்சி நாட்டு ஆனைப் படையிலே தமது மாணவன் எதிர் காலத்தில் எத்தகைய பொறுப்பை ஏற்க வேண்டியவன் என்பதில் அவருக்கு அத்தனை ஆர்வமும் ஆவலும் இருந்தன!

''ஆனை கோள்'' என்று அழைக்கப்பட்ட அந்தப் பெரு நிகழ்ச்சியைக் காண்பதற்கு அரசச் சுற்றத்தார்கள் கொங்கு நாட்டு ஆனைக் காட்டிற்கு வந்து மரங்களிலும், பரண்களிலும் இடம் பிடித்து அமர்ந்து கொண்டார்கள். கொங்குச் சேர மன்னன் இளவரசி இளநன்னியோடு வந்து அரசப் பரணிலே அமர்ந்தான். காட்டுக்குள்ளே இரிகிற ஆனைகள் எல்லாம்


ஜெம்
ரெஃப்ரிஜெரேடரை
பார்த்தீர்களா?
ஓ! எவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது
அதன் சீரான (ஸ்ட்ரீம்லைன்ட்) அமைப்பும், முத்துப் போன்ற மழமழப்பான பூச்சும் பிரமாதம்!
குறைந்த செலவில் அதிகமான பொருள்களை வைக்கக் கூடிய இடவசதி.
மின்சாரச் செலவும் 25 சதம் முதல் 50 சதம் வரை குறைவு.
90 நிமிடங்களில் ஐஸ்—ஏன் ஐஸ்க்ரீம் கூடத் தயாராகிவிடும்.
ஓசையில்லாமல் இயங்குகிறது.
காற்று புகாதபடி ஸீல் செய்யப்பட்ட பகுதிக்கு 5 வருட உத்தரவாதம் உண்டு.
விற்பனைக்குப்பின், தொழிற்சாலை பயிற்சி பெற்ற டெக்னீஷியன்களின் திறமை மிக்க சர்வீஸ் வசதி கொண்டது.
இன்றே உங்கள் உள்ளூர் வியாபாரியின் ஷோ-ரூமில் ஜெம் ரெஃப்ரிஜெரேடரைப் பாருங்கள்
கொள்திறன்
286 லிட்டர் (10.1 கன அடி)
ஜெம்
ரெஃப்ரிஜெரேடர்
விற்பனையாளர்கள்:
ஜெனரல் இக்விப்மெண்ட் மர்சென்ட்ஸ் லிமிடெட்
புது டெல்லி, கல்கத்தா, மதராஸ், ஹைதராபாத், பம்பாய்
EB/GEM/TAM/10

ரேயான் - கிரேட் காஸ்டிக் சோடா

98/99% சுத்தம்

திரவப் பொருளாகவும், கட்டியாகவும் தூளாகவும் கிடைக்கும்

THE METTUR CHEMICAL AND INDUSTRIAL CORPORATION LIMITED

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் டாம் R. S., சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்டுகள் :
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

விநியோகஸ்தர்கள் :

சென்னை : தி அலீட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் லிமிடெட் 7, செகண்ட் லைன் பீச், மதராஸ்-1 ○ கே. எ. ஹாஜி நூருத்தீன் சாஹிப் & கம்பெனி, மண்டி வியாபாரி, வேலூர் ○ தி காவேரி ஏஜென்ஸீஸ், 106, இருசப்ப செட்டித் தெரு, கடலூர் ○ வாசுகல் சோப் ஒர்க்ஸ், 195, சாலைத்தெரு, பெரிய காஞ்சிபுரம் ○ தி சௌத் இந்தியா ஏஜென்ஸீஸ், 9, காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம் ○ தி மேட்டூர் ஏஜென்ஸீஸ், 8, பெரிய கம்மாளத் தெரு, திருச்சி ○ தி கெமிகல் ஏஜென்ஸீஸ் 51, தெற்கு மாசி வீதி, மதுரை ○ வி. எம். வைத்தியநாதன், 165, தெற்கு மாசி வீதி, மதுரை ○ அருணாசல விலாஸ், காரைக்குடி ○ வி. ஆர். பி. ராமநாதன், 55, அப்பு செட்டித் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம் ○ எஸ். வி. கே. ஐயர் & கம்பெனி, 100, குமரன் ரோடு, திருப்பூர் & 282, நேதாஜி ரோடு, ஈரோடு ○ டி. கே. பட்டாபிராமன், 682, ரங்கை கௌடர் தெரு, கோயமுத்தூர் ○ ஸ்ரீ மீனாக்ஷி விவிங் பாக்டரி, 8, ரதவீதி, கரூர் ○ கே. எம். சுப்பையா, 68, தெற்கு ரத வீதி, திருநெல்வேலி.

ஆந்திரா : ராமநாத் & கம்பெனி, 100/5, முனிசிபல் ஆபீஸ் ரோடு, விஜயவாடா-1 ○ 141, சரோஜினி தேவி ரோடு, செகந்தராபாத், டி. பி. ரோடு, குண்டக்கல்-2 ○ தி கெமிக்கல் டிரேடிங் கம்பெனி, ஏகாம்பர குப்பம் போஸ்ட், நகரி ரெயில்வே ஸ்டேஷன்.

மைசூர் : B.R.V. & சன்ஸ், வாணி விலாஸ் ரோடு, பசவன்குடி, பெங்களூர்.

கேரளா : யுனைடெட் கேரளா டிரேடர்ஸ், கல்லாய் ரோடு, கள்ளிக்கோட்டை (கோழிக்கோடு) ○ பீனிக்ஸ் பில்டர்ஸ் கார்ப்பொரேஷன், 32/815, ஆர்யசாலா, திருவனந்தபுரம்.

கலைந்து நிலை குலைந்து அங்குமிங்கும் சிதறி ஓடிப் படுகுழிகளிலே வந்து விழுந்துபடுகிற முறையிலே கொட்டுகளும், முரசங்களும், வன்பறைகளும் அழலாடியின் தலைமையிலே படபடத்தன. இளநன்னிக்கு அந்த ஓசையைத் தாங்க முடியவில்லை. இரண்டு கைகளாலும் காதைப் பொத்தி அடைத்துக்கொண்டான்.

பயம்புகளுக்கு அப்பால் இரண்டு மரங்களுக்கு நடுவே ஒரு பெரிய கொம்பன் ஆனையின் மீது அமர்ந்து அழலாடி நிகழ்ச்சிகளை இயக்கிக் கொண்டிருந்தான். பயம்புகளுக்கு மறுபுறம் ஒரு பெரிய புரணியிலே நின்று வயது முதிர்ந்த ஆனைப் படைத் தலைவனும் ஆதன் ஆசிரியரும் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள்!

காட்டு ஆனைகள் மந்தை மந்தையாக வந்து பயம்பிலே விழுந்தன. நூறுநூறு வீரர்கள் கையிலே மாபெரும் கயிறுகளைக் கொண்டு சென்று அந்தக் குழிகளின் விளிம்பிலே நின்று வித்தைத் திறமையோடு சுருக்காங்கண்ணி போட்டார்கள். அவர்களையெல்லாம் கொம்பன் ஆனைமீது ஒய்யாரமாக உட்கார்ந்து அழலாடி இயக்கிய நேர்த்தியைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் இளநன்னி. மற்ற வீரர்களின் கண்ணியிலே சிக்காமல் திமிறிய சில வீரம் மிக்க வன அரச ஆனைகளை, அழலாடி தானே வந்து நின்று ஆற்றல் மிக்க தனது வீரக் கைகளிலே சுருக்குக் கயிறுகளைத் தாங்கிப் பற்றிப் பக்குவமாக வீசிப் பிடித்தான்! அழலாடியின் கண்ணியிலே சிக்கிய அந்த மாபெரும் அரச ஆனைகளோடு சேர்ந்து இள நன்னியின் அன்பு உள்ளமும் இணைந்து சிக்கியது.

* * *



சேரலாத மன்னன் போர் முயற்சியை மிகவும் ஆற்றலோடு செயல்படுத்தினான். துளு நாட்டு நன்னர்களை அழித்து ஒழிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தனது இளையரசர்களான கொங்குச் சேர மன்னர்களைக் கொண்டு ஆனைப் படையை இணைக்கும்படி ஏற்பாடு செய்தான். மலைகளின் வழியாகவும், அண்டை நாடுகளின் வழியாகவும் கடல் மீதும் மூன்று பக்கங்களிலிருந்து மூன்று வெவ்வேறு படைகள் ஒரே சமயத்தில் துளு நாட்டின் மீது தாக்கிச் செல்ல வேண்டும் என்பது சேர மன்னனின் எண்ணம்.

துளுநாட்டுக்கான போர் ஏற்பாடுகள் அப்படி நடந்து கொண்டிருந்தன. கடற் கொள்ளைக் கூட்டத்தார்களான கடம்பர்களை எப்படி ஒழிப்பது என்பது குறித்து யாரிடமும் எதுவும் சொல்லாமல் மனத்துக்குள்ளாகவே ஏதேதோ சிந்தனை செய்து வந்தான் சேரலாத மன்னன். இந்தச் சிந்தனைகளும் திட்டங்களும் என்னவென்பது சேர நாட்டு அரசச் சுற்றத்தார்கள் யாருக்கும் தெரியாத ஒரு பெரிய ஆயமாக இருந்தது. ஆனால் எல்லோருக்கும் வியப்பை உண்டாக்கிய ஒரு புதிய நிகழ்ச்சி என்னவென்றால், சேரலாதனுடைய அரசியல் ஆலோசனைகளில் அதிகப் பங்கு எதுவும் எடுத்துக் கொள்ளாமல் போருக்கான படைக்கலப் பயிற்சிகளில் மட்டுமே இதுவரை ஈடுபட்டு வந்த இளவரசன் செங்குட்டுவன், இப்போது அடிக்கடி தந்தையோடு ஏதேதோ ஆலோசனைகளை நடத்தி வந்தான்.

ஆம்; இளவரசன் செங்குட்டுவன் வீரமும் படைக்கலப் பயிற்சியும் மிகுந்த பெருவீரனே என்றாலும் இதுவரை போர் ஏற்பாடுகளில் செங்குட்டுவனை அழைத்து எதுவும் கலந்து பேசியதில்லை சேரலாதன். திடீரென்று ஒரு நாள் இரவிலே வேலவன் கோதையை அழைத்துத் தனியாக ஏதோ பேசி வெள்ளைத் தீவுக்கு அனுப்பினான் அல்லவா? அது போலவே இப்போது தனது இளவரசனைக் கூப்பிட்டு அந்த முயற்சிகளைப் பற்றிச் சொல்லி மேற்கொண்டு செய்ய வேண்டிய நடவடிக்கைகளைக் கலந்து ஆலோசித்தான். அந்தப் பேச்சின் தன்மைகள் மிகவும் ஆயமாகவே இருந்தன.

இந்நிலையில் ஒரு நாள் சேரலாத மன்னன் தனது திருவோலக்க மண்டபத்துக்குச் சில முக்கியமான படை வீரர்களை அழைத்து அவர்களுக்கு ஒரு கட்டளை பிறப்பித்தான். புன்னாட்டு நீலக்கல் சுரங்கத்தைக் கடற் கொள்ளைக் கூட்டத்தாரின் தாக்குதலில் இருந்து காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்புச் சேர நாட்டுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றும், இந்தப் பொறுப்பை ஏற்றுச் செயல் புரிவதிலே இளவரசன் செங்குட்டுவன் ஈடுபட்டிருக்கிறான் என்றும் அறிவித்தான் சேரலாதன்.

''வீரர்களே, நீங்கள் எல்லோரும் தானைப் படையிலே பழகியுள்ளதோடு கடற் படையிலும் நன்கு பயின்ற நல்வீரர்கள். உங்களை இனி நமது இளவரசன் செங்குட்டுவனின் தலைமையிலே ஒப்படைக்க எண்ணியுள்

ளேன். எந்த விநாடியும் நீங்கள் புன்னாட்டுக்குச் செல்ல வேண்டிய அவசியம் நேரலாம். அதோடு மலர்வேணிய மன்னனின் படைகளோடு சேர்ந்து கூட்டணியாக நீங்கள் கடல் மீது சென்று போர் புரிய வேண்டிய நிலையும் ஏற்படலாம். இந்த எண்ணத்தோடு செங்குட்டுவன் தலைமையில் நீங்கள் இனிமேல் பணி புரிய வேண்டும். கடல் மீது சென்று வெள்ளைத் தீவைத் தாக்க வேண்டிய தருணத்தில் நீங்கள் வானமண்டலக் கடம்பனின் சூழ்ச்சிகளை எதிர்த்து மிகுந்த ஆற்றலோடு பல மாயச் செயல்கள் புரிய வேண்டிய நிலையும் ஏற்படலாம். வீரத்தை வீரத்தால் வெல்வது போலவே சூழ்ச்சியைச் சூழ்ச்சியால் வெல்ல வேண்டும் என்பதை உணர்ந்து நீங்கள் அனைவரும் இளவரசனுடைய இன்னுயிர்த் துணைவர்களாகவும், ஆற்றல் மிக்க போர் வீரர்களாகவும் இயங்க வேண்டும். தமிழ் நாட்டு வரலாற்றிலே உங்களுடைய வீரமும், போரும் புலவர்கள் பாடக்கூடிய பெருமை பெற்று விளங்க வேண்டும் என்பதே என் ஆசை!''

இவ்வாறு தன்னுடைய வீரர்களுக்கு அறிவித்தான் சேரலாதன்.

இந்நிலையில் பெருந்துருத்தித் தீவிலோ என்றால் துறவிகள் பலரை வரவேற்று அவர்களுக்குப் புகலிடம் தருவதை உருவாக்கிக் கொண்டிருந்தார் செவ்வந்தி அடிகள்!

''பெண்ணே, நம்முடைய கனவு நனவாகும் காலம் வந்துவிட்டது அம்மா. செவ்வந்தி அடிகளிடமிருந்து செய்தி வந்திருக்கிறது!'' என்றார் மாதவம் பள்ளியிலே, ஆதிரைஅடிகள்.

''செவ்வந்தி அடிகளிடமிருந்தா ?'' என்று கேட்டாள் பொன்மணி.

''இந்தப்பள்ளியிலே உள்ள துறவிகள் எல்லாரும் ஒரு காலத்தில் வெள்ளைத்

பணி புரியவே பிறந்தவர் !

பாரதம் அடிமைப்பட்டுக் கிடந்த நாட்களில் சுதந்திர தாகத்தை ஊட்டி வளர்த்த அம்மையார் அன்னிபெஸண்ட். 1847ம் வருஷம் அக்டோபர் 1ந் தேதி லண்டனில் பிறந்தார் அவர். அவர் லண்டனில் பிறந்தாலும், அவர் தம் உடலில் தம் தாயுடைய ஐரிஷ் ரத்தம் ஓடுவதாகக் கருதினார்.



மிஸ் மரியாட், அன்னிக்கு இளமைக் கல்விக்கு வித்திட்டாள். ஜெர்மனும், பிரஞ்சு மொழியும் அவள் கற்றுக் கொடுத்தாள். 1866ம் ஆண்டில் ஈஸ்டர் தினத்தில் பூஜ்யர் பிராங்க் பெஸண்டைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. 1867ம் ஆண்டில் பெஸண்டுக்கும் அன்னிக்கும் திருமணம் நடைபெற்றது.

1872ம் ஆண்டில் ஸிஸில்துமஸாக்குப் பிறகு ஸிப்ஸே கிராமத்தில் டைபாய்ட் ஜுரம் பரவியது. சேவா உணர்ச்சிகொண்ட அன்னிபெஸண்டுக்கு இந்தத் தருணத்தில் கஷ்டப்படுபவர்களுக்கு உதவும் எண்ணம் பிறந்தது. பிரும்மஞான சபையினைத்தோற்றுவித்த ஆல்காட்டுடன் அன்னிபெஸண்ட் சேர்ந்து அதில் பணிபுரியத் தொடங்கினார். 1893ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்து, அதையே தம் தாயகமாகக் கொண்டார். காசியில் 1895ல் இல்லம் அமைத்துத் தம் பிரும்ம ஞானத் தொண்டை நடத்தத் தொடங்கினார். இந்து சமயத்துக்கும், கலாசாரத்துக்கும், இந்தியக் கல்விக்கும், இந்தியப் பெண்மணிகளின் உயர்வுக்கும் பாடுபட்டார்.

இந்திய தேசிய காங்கிரஸின் தலைமைப் பதவியை ஏற்றார். இந்திய பிரும்மஞான சபையின் தலைமைப் பதவியை ஏற்றுத் திறம்படப் பணியாற்றினார். அரசியல் போராட்டத்தின்போது அவர் நடத்திய பத்திரிகை மூன்று தடவைகளுக்கு மேல் இருபதினாயிரம் ரூபாய் ஈட்டுத் (Securities) தொகையாகத் தரும்படியாயிற்று.

இப்போது அன்னிபெஸண்ட் அம்மையாரின் குழந்தைப் பிராயப் படத்தை மீண்டும் ஒருமுறை பாருங்கள். அச்சிறுமியின் முகத்தில் புதிதாக ஒரு ஒளி நமக்குத் தென்படுகிறது இல்லையா?

தீவிலிருந்து வானமண்டலக் கடம்பரால் நாடுகடத்தப்பட்டவர்கள் என்று உனக்குச் சொல்லியிருக்கிறேன் அல்லவா? நம்முடைய தலைவர்களிலே வயதும் ஞானமும் பக்குவமும்முதிர்ந்த பெரியார் பெருந்துருத்தித் தீவிலே வாழ்கிறார் அல்லவா? அவர் நம் அனைவரையும் அந்தத் தீவுக்கு வரும்படி செய்தி அனுப்பியிருக்கிறார்!'' என்றார் ஆதிரை.

''யாரைச் சந்திக்க வேண்டும் என்று நாம் காத்திருக்கிறோமோ அவரைச் சந்திக்கப் போகிறோமோ?''

''ஆம்; புன்னாட்டிலிருந்து மலர் வேணிய மன்னர் நமக்காக மரக்கலம் அனுப்புகிறாராம். அந்த மரக்கலத்தில் ஏறி நாம் அனைவரும் பெருந்துருத்திக்குச் செல்லவேண்டும் என்று செல்வந்தி அடிகள் கட்டளை!''

பொன்மணி வியப்போடு ஆதிரை அம்மையைப் பார்த்தாள். அப்போது அந்தத் துறவி சொல்லுவார்:

''பெண்ணே, தமிழ் நாட்டில் பெரிய போர் ஒன்று வரப் போகிறது அம்மா! உன்னுடைய முல்லைமுதூரைத் தீயிட்டது அல்லவா துளுநாட்டுப் படை, அந்த நாட்டுக்குக் கேடுகாலம் வந்து விட்டது. தமிழகத்து மன்னர்கள் எல்லாரும் இப்போது தங்களுக்குள் ஒற்றுமை கொண்டு தீயவர்களையும் கொடுங்கோலர்களையும் தொலைப்பதற்காகச் சீறி எழுந்துவிட்டார்கள். துளு நாட்டு நன்னர்களும், வெள்ளைத் தீவுக் கடம்பர்களும் செய்து வந்த பழி பாவங்களுக்கு முடிவு வந்துவிட்டது. கொங்கு வஞ்சியிலே உள்ள இளைச் சேரர்களும், புன்னாட்டு மன்னர்களாகிய வேணியர்களும், தங்களுக்குள் கலந்து ஆலோசித்து இப்போது கூட்டாகப் படை திரட்டித் தாக்குதலுக்குரிய ஏற்பாடுகளிலே இறங்கி விட்டார்கள். நாட்டிலே பெரும் போர் மூளப் போகிறது. அந்தத் தருணத்தில் துறவிகள் எல்லாரும் பாதுகாவலாக ஒரு புகலிடத்திலே போய்த் தங்கியிருக்க வேண்டும் என்று விரும்பி, மன்னர்களே இப்படி ஓர் ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். இந்த மாதவப்பள்ளியில் உள்ள துறவிகளைப் போலவே இன்னும் பல இடங்களிலும் உள்ள துறவிகளும், எல்லாரும் பெருந்துருத்தித் தீவுக்குச் சென்றுவிட வேண்டும் என்பது திட்டம். செல்வந்தி அடிகள் நம்முடைய வரவை எதிர்பார்த்துப் பெருந்துருத்தித் தீவிலே நமக்கான புகலோடு ஆயத்தமாக இருக்கிறார்!''

இவ்வாறு சொன்னார் ஆதிரையம்மை.

''யாரோ எப்படியோ செய்து முடித்திருக்க வேண்டிய குலப் பழி இப்படியா தீரப் போகிறது!'' என்று ஒரு விநாடி மனத்துக்குள்ளே எண்ணிப் பார்த்தாள் பொன்மணி. கண் கலங்கியது. அழலாடியின் வீர வாள், தன்னைக் கைப் பிடித்த கணவனின் வீர வாள், எந்த நன்னனுடைய தலையை வெட்டி வீழ்த்தி அந்தக் குருதித் துளிகளை நடுகல்லிலே கொண்டு தெளித்திருக்க வேண்டுமோ, அந்த நன்னனுடைய அழிவு, இப்போது பல மன்னர்களின் கூட்டுறவு முயற்சியினால் இந்த வகையில் நிறைவேறப் போகிறது என்று எண்ணினாளோ இல்லையோ கலங்கிய கண்களிலிருந்து 'பொல பொல' என்று கண்ணீர் பொங்கி வழிந்தது.

''பொன்மணி!'' என்று அழைத்தவாறு அவளுக்கு அருகிலே வந்து கண்களைத் துடைத்தாள் ஆதிரை.

''மன்னிக்க வேண்டும், தாயே! ஏதோ எண்ணினேன். உள்ளம் கலங்கிவிட்டது!'' என்றாள் பொன்மணி.

''இன்ப துன்ப உணர்ச்சிகளை வென்று நிற்கிற புத்தனுடைய குழலை அடைந்த பின்னும் உள்ளத்தைத் தளரவிடலாமா கண்ணே! நெஞ்சகத்திலே உள்ள பாசப் பின்னலைக் களைந்து எறிந்துவிட வேண்டாமா! நம்முடைய இலட்சியம் நிறைவேறுகிறது. புத்த தேவனுடைய கருணை நம்மை ஆட்கொள்ளுகிறது. அந்தக் கருணை வெள்ளம், துயர மாசுகளையெல்லாம் அடித்துக் கொண்டு செல்லப் போகிறது. எழுந்து நில். புறப்படுவதற்குச் சித்தமாயிரு!'' என்றாள் ஆதிரை மிகுந்த பரிவோடு.

பெருந்துருத்தித் தீவிலே வேலவன் கோதையைப் பாதுகாவலோடு காத்துக் கொண்டிருந்த செல்வந்தி அடிகள் இப்போது துறவிகளின் வரவை ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இந்நிலையில், வெள்ளைத் தீவைத் தாக்குவதற்குச் செல்லும் வழியிலே புன்னாட்டு வீரரும் சேரப் படையினரும் செங்குட்டுவனுடைய தலைமையிலே—பெருந்துருத்தித் தீவுக்குச் சென்று அடிகளைக் கண்டு பேச வேண்டும் என்பது சேரலாதனின் கட்டளை!

இரண்டாம் பாகம் முற்றிற்று



வர்ண ஜாலம்

1. ஆறு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை எந்த வர்ணமுடைய பொம்மைகளோ, துணிகளோ அதிகமாகக் கவர்கின்றன?

அ. சிவப்பு
ஆ. பச்சை
இ. நீலம்

2. வர்த்தக ரீதியில் நிற பேதங்கள் சுமார் எத்தனை வகைப்படும்?



அ. 5,000,000
ஆ. 500,000
இ. 50,000



3. சட்டென்று கவனத்தைக் கவரவல்ல நிறம் எது?

அ. சிவப்பு
ஆ. ஆரஞ்சு
இ. மஞ்சள்

4. உயர் ரத்த அழுத்த முள்ளவர்கள் தங்கியிருக்கும் அறைச் சுவர்களுக்கு எந்த வர்ணம் உகந்தது?



அ. சிவப்பு
ஆ. நீலம்
இ. மஞ்சள்



5. அறுவைச் சிகிச்சை நடைபெறும் அறையின் வர்ணம் எதுவாக இருக்க வேண்டும்?

அ. வெள்ளை
ஆ. பச்சை
இ. மஞ்சள்

விடை 81ம் பக்கம் பார்க்க

வாழ்வுக் கலை



சேவா கிராமத்தின் ஒரு மண் குடிசையில் காந்தியடிகள் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தார். திடீரென்று குடிசையின் வேறொரு மூலையில் ஒருவர் ஆணி அடித்துக் கொண்டிருந்த சத்தம் கேட்டது.

"சுவரில் யார் ஆணி அடிக்கிறது?" என்று காந்தியடிகள் திரு ராமச்சந்திரனைக் கேட்டார். உடனே போய்ப் பார்த்தார் அவர். ஆணி அடிக்கப்பட்ட அந்தச் சுவர் சற்று பழுதடைந்திருந்தது. இந்தச் சத்தம் காந்தியடிகளுக்குத் தொந்தரவு கொடுக்கிறது என்று திரு ராமச்சந்திரன் தெரிவித்ததும், ஆணி அடிப்பவர் அந்த வேலையை நிறுத்திவிட்டார்.

அதே சமயம் காந்தியடிகளும் அங்கே வந்து சேர்ந்தார். தரையின் நிலையையும் சுவரின் நிலையையும், வளைந்த ஆணியையும், ஆணி அடிப்பவர் நிலையையும் கவனித்த மகாத்மா சிரித்தார். பிறகு, "ராமச்சந்திரன் சொன்னது போல் எனக்கொன்றும் தொந்தரவு ஏற்படவில்லை. எந்தச் சத்தங்களுக்கு இடையேயும் நான் எழுதிக்கொண்டிருக்க முடியும். தொழில் தெரிந்தவன் ஆணி அடிக்கும்போது சீரான ஒருவகை இசை பிறக்கும். அந்தக் கீதம் கேட்கவில்லையே என்று வந்தேன் நான். அழகு அழிந்த நிலையைக் காண்கிறேன்" என்று கூறினார். - தஞ்சை விந்தன்

குறுகிய கடிதம் எழுத நேரமில்லை

ஒரு முறை பெர்னார்ட் ஷாவுக்கு நாடக மன்றங்களின் கழக மொன்றுக்குத் தாம் எழுதிய கடிதம் மிக நீண்டு விட்டது என்று தோன்றியது. கடிதத்தின் இறுதியில் அவர் குறிப்பிட்டார்: "இந்தக் கடிதம் அளவுக்கு அதிகமாய் நீண்டு விட்டதற்காக மன்னிக்கவும். என்ன செய்வது, சுருக்கமான கடிதம் எழுத எனக்கு நேரமில்லை!"

ஆதாரம்: "படியுங்கள் சுவையுங்கள்"
தகவல்: ப. ஜெயராஜா



மன்னரும் துறவியும்



இப்ராகிம் இப்னு அத்தம் "ஹஜ்" யாத்திரைக்காக மக்கா செல்லும் வழியில் ஓரிடத்தில் கூடாரமடித்துத் தங்கினர். கூடாரம் தங்க முளைகளில் கட்டப்பட்டிருந்தது. அவ்வழியாக வந்த துறவி ஒருவருக்கு இந்த ஆடம்பரம் சிறிதும் பிடிக்கவில்லை.

"புனித யாத்திரை இப்படித்தான் செய்வதோ?" என்று அவர் ஆத்திரத்துடன் இப்ராகிமைப் பார்த்துக் கேட்டார். அதற்கு இப்ராகிம் பதில் கூறவில்லை.

அடுத்த நாள் பரிவாரங்கள் அங்கிருந்து கிளம்பின. கூடாரங்கள் பிரித்துச் சுருட்டிக் கட்டப்பட்டன. ஆனால் தங்க முளைகளை அப்படியே விட்டு விட்டுக் கிளம்பிவிட்டனர்.

எல்லோரும் மக்கா நகர் நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் வந்து கொண்டிருந்த துறவி, "கொஞ்சம் நில்லுங்கள்! இதோ வந்துவிடுகிறேன்" என்று கத்திக் கொண்டே ஓடினர்.

"எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டார் இப்ராகிம்.

"என் குவளை ஒன்றை விட்டு விட்டு வந்து விட்டேன்" என்று நின்றுகூடச் சொல்லாமல் ஓடினர் அந்தத் துறவி.

சில கணங்களில் துறவி தம் குவளையுடன் வந்து சேர்ந்தார். இப்ராகிம் அவரைப் பார்த்து, "தங்க முளைகளையே விட்டுவிட்டு நான் கவலையின்றி வருகிறேனே. எல்லாம் துறந்ததாகக் கூறும் தங்களுக்குக் கேவலம் ஒரு குவளையை விட்டு வர மனமில்லையே!" என்றார். துறவியின் தலை நிமிரவே இல்லை.

இரண்டு டிக்கெட்டுகள்

ஒரு முறை காசி பல்கலைக் கழகத்தை நிறுவிய 'பண்டித மதன்மோகன் மாளவியா' ஓர் ஊருக்குப் புறப்பட்டார். அவர் ரயில் நிலையத்துக்குச் சிறிது தாமதமாக வந்தபடியால் வண்டி புறப்பட இன்னும் சில வினாடிகளே இருந்தன. அதனால் அவரால் டிக்கட்டு வாங்கிக் கொள்ள இயலவில்லை. டிக்கட்டு வாங்காமலே வண்டியில் ஏறி அமர்ந்து தாம் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார். மற்றொரு முறை அதே ஊருக்குப் போக நேர்ந்தது. அப்போது இரண்டு டிக்கட்டுகள் வாங்கி ஒன்றைக் கிழித்துப் போட்டுவிட்டு மற்றொன்றைப் பத்திரமாக வைத்துக் கொண்டார் மாளவியா.

—தஞ்சை வித்தகன்



காதலென்னும் கன்னியைப் பார்த்து மனிதர்கள் முதலில் புன்முறுவல் பூக்கிறார்கள். அடுத்துச் சிரிக்கிறார்கள். கடைசியாகப் பல்லைக் காட்டுகிறார்கள். ஆனால்......

அந்தக் காதலென்னும் கன்னியோ அவர்களைப் பார்த்துக் கண் சிமிட்டி 'அடப் பைத்தியக்காரர்களே!' எனச் சிரிக்கிறாள்.

இப்படி மனிதர்களைச் சிரிப்பாய்ச் சிரிக்க வைக்கும் அந்தக் காதற் கன்னியைப் பற்றி, மனிதர்களின் உள்ளத்தில் புகுந்துகொண்டு அவர்களை ஆட்டுவிக்கும் அவளைப்பற்றிச் சிந்தனைச் சிற்பிகளும், பேரறிஞர்களும் என்ன கூறுகிறார்களென்பதைச் சற்று கேளுங்கள்:

'அழகு இரத்தத்தில் கிளர்ச்சி செய்யும்; காதல் உள்ளத்தை உயர்த்திவிடும்'.

'எல்லா இன்பங்களையும் விட காதல் துன்பம் இனியதாகும்.'

அறிஞர் ட்ரைடன்

'காதல் தனக்காக இன்பம் தேடுவதில்லை. தனக்காகக் கவலைப்படுவதுமில்லை. மற்றொருவருக்காகத் தன் சௌகரியத்தை உபயோகப்படுத்துகின்றது. நரக வேதனையிலும் சொர்க்க இன்பத்தை அமைத்து விடுகின்றது'. - அறிஞர் ப்ளேக்

'காதல் மனத்தைப் புனிதமாக்கும், இதயத்தை விரிவுபடுத்தும். அறிவே அதன் வாசஸ்தலம். பகுத்தறியும் பான்மை அதற்குண்டு. தேக சுகத்தில் ஆழ்ந்துவிடாது. தேவ பக்திக்கு ஏறும் ஏணியாகும்.'

— மகாகவி மில்டன்

'காதல் செய்பவனுக்கும் மரணம் எய்துபவனுக்கும், மண்ணிலிருந்து விண்ணுக்குப் பறக்க வேறு சிறகுகள் வேண்டியதில்லை!.'

- மைக்கேல் ஏஞ்சலோ

'ஆரம்பத்தில் பெண்கள் காதலரையே காதலிப்பர். ஆனால் பின்னால் அவர் காதலிப்பதெல்லாம் காதல் ஒன்றையே.'

— மகாகவி பைரன்

'காதலுக்காக ஏக்கப்படுகிறவர்கள், காதலைக் கண்டு பயப்படுகிறவர்கள், காதலினால் துன்பப்படுகிறவர்கள் என்று மூவகைகளாகப் பிரிக்கலாம் மனிதச் சமுதாயத்தை!. - ஷெல்லி

— குற்றாலம் வீ. சம்பந்தன்



கடவுளுக்குப் பிரார்த்தனை செய்கின்ற கைகளே மேலானவை. -இங்கர்சால்

தொகுப்பு: அகிலோன்

கல்கி


சந்தா விகிதம்

	ஒரு வருஷம் ரூ. பை.	ஆறு மாதம் ரூ. பை.
இந்தியா	20-00	10-00
பர்மா, மலேயா இதர நாடுகள்	40-00	20-00
இலங்கை (இலங்கை நாணய மதிப்புப்படி)	21-00	10-50

சந்தா தொகை முன்னதாக அனுப்பப் பட வேண்டும். வி. பி. பி. கிடையாது

மானேஜர் :

கல்கி காரியாலயம் — சென்னை -10




நீரிலே நெருப்பு

நெருப்பை அணைப்பதற்குத் தண்ணீரைப் பயன்படுத்துவதை நாமறிவோம்; வெப்பத்தை உண்டாக்குவதற்குத் தண்ணீரைப் பயன்படுத்துகிறார்கள் என்றால் வியப்பாக இருக்கிறது. இல்லையா? ஆனால் இது முற்றிலும் உண்மை.

அமெரிக்காவில் ஒரு ராக்கெட் பரிசோதனையில் இப்படிச் செய்து வெற்றி கண்டிருக்கிறார்கள். ராக்கெட்டின் இடைப்பகுதியில் எரிபொருள் இருக்கும். தண்ணீரை அதன்மீது தெளிக்கும் போது நீரிலுள்ள ஆக்ஸிஜன் மூலம் அது பற்றுகிறது. 4000 டிகிரி பாரன் ஹீட் வெப்பத்தில் வாயுக்கள் உற்பத்தியாகி வேகமாக வெளியேறுகின்றன. அவை வெளியேறும் வேகத்தால் ராக்கெட் மேலே எழும்பிச் செல்கிறது. இப்பரிசோதனை முழு வெற்றியடையுமானால் நிலத்தில் ஓடும் வாகனங்களையும் இக்கொள்கையின் அடிப்படையில் இயங்கச் செய்ய முடியும் என்று கருதுகிறார்கள்.

ஆதாரம்: ''ஆர்பிட்'' தகவல்: எறும்பு




அனல் மின் நிலையம், நீர் மின் நிலையம், அணு மின் நிலையம் இவற்றுடன் வாயு மின் நிலையம், அலை மின் நிலையம் ஆகிய இரண்டையும் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. காற்றினுடைய வேகத்தைப் பயன்படுத்தியும் கடல் அலைகளின் வேகத்தை உபயோகித்தும் டர்பைன்களை இயங்கச் செய்கின்றனர். டர்பைன்கள் சுழலும்போது மின்சாரம் உற்பத்தியாகிறது. உலகில் முதல் அலை மின் நிலையம் பிரான்ஸில் உருவாகியுள்ளது. நீருக்கடியிலுள்ள இருபத்திநாலு டர்பைன்கள் ஆண்டுதோறும் 500 மிலியன் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்கின்றன. இயற்கையிலேயே குறிப்பிட்ட கால அளவையில் இங்கு கடல் மட்டம் உயர்வதும் தாழ்வதுமாய் 26 அடி உயரத்துக்கு வித்தியாசப்படுகிறது. கடல் மட்டத்தின் இந்த ஏற்றத் தாழ்வைப் பயன்படுத்தி டர்பைன்களை இயங்கச் செய்கிறார்கள். கீழுள்ள படத்தில் நதியின் முகத்துவாரத்தில் கட்டப்பட்டுள்ள அணையையும் மின் நிலையத்தையும் காணலாம்.



சைக்கிள் பிறந்த கதை


இன்று தெருவெங்கும் காணப்படும் சைக்கிளைப் பற்றிய சுவையான தகவல்கள் உங்களுக்குத் தெரியுமா?

'இரு சக்கர' சைக்கிள் வண்டி முதன் முதல் கண்டு பிடிக்கப்பட்ட போது அதற்கு 'எலும்பு உலுக்கி', 'பொழுது போக்குக் குதிரை' போன்ற பெயர்கள் வழங்கப்பட்டன. ஆனால் அச்சமயத்தில் அதுதான் மிக வேகமாகச் செல்லும் வண்டியாக இருந்தது. (சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்..) முதன்முதல் செய்யப்பட்ட சைக்கிள்கள் இப்போது உள்ளதுபோல் அவ்வளவு வசதியானதாக இல்லை.




முதன் முதல் கண்டு பிடிக்கப்பட்ட சைக்கிளில், 'சைக்கிள் ஓட்டி' ஆசனத்தில் உட்கார்ந்து, காலால் தரையை உந்தித் தள்ளி ஓட்ட வேண்டும். ஏனெனில், அந்தச் சைக்கிளில் 'பெடல்'களோ அல்லது 'சங்கிலி' (செயின்)களோ கிடையாது. இதனால் ஓட்டுபவர்கள் சிறிது தூரம்போனதுமே, கால்வலிக்க, சோர்ந்துவிடுவார்கள்.

பிறகுதான் சைக்கிளுக்குப் 'பெடல்' போடும் பழக்கம் வந்தது. அதன் பிறகு ஓட்டுபவர் தரையை உதைத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் இதன் சக்கரங்கள் மரத்தாலும், டயர்கள் இரும்பாலும் ஆனதால் இதற்கு 'எலும்பு உலுக்கி' என்று பெயர் ஏற்பட்டது. இந்தச் சைக்கிள்கள் மெதுவாகப் போயின.



இதனால் முன் சக்கரங்கள் பெரிதானதாகவும், பின் சக்கரங்கள் சிறியதாகவும் செய்து சைக்கிளின் வேகத்தை அதிகரித்தனர். இது ஓட்டுவதற்கு மிக ஆபத்தானதாக இருந்தது. இதனால் 1880ம் ஆண்டு ஒரு புது சைக்கிள் செய்யப்பட்டது. இதுதான் தற்கால சைக்கிள்.

ஆதாரம்: ஆர்பிட்
தகவல்:வி. சம்பத்குமார்





“பேப்பரில்” பார்த்தீர்களா, இந்த அநியாயத்தை?” ராஜி பரபரப்புடன் என் முன் பரப்பினாள். முக்கியமான ஒரு கேஸ் விஷயமாகக் குறிப்பெடுப்பதில் ஈடுபட்டிருந்த எனக்கு முதலில் எரிச்சல் பற்றிக் கொண்டாலும், செய்தியைக் கண்டதும் அது துக்கமாக மாறியது.

“....தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த லக்ஷ்மிபுரத்தில் சிவன் கோயிலில் துணிகரத் திருட்டு. பஞ்சலோக விக்கிரகங்கள் திருட்டுப் போய் விட்டன. ஒரே பீடத்தில் அமைக்கப்பட்ட நடராஜ விக்கிரகம் மட்டும் பிராகாரத்தில் விடப்பட்டிருந்தது. அந்த மூர்த்தத்தின் சிவகாமி அம்மையைக் காணோம். போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனர். இராக் காவல் பொன்னனும், அவன் தோழனொருவனும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.”

நான் சிந்தனையில் ஆழ்ந்தேன். தினம் எத்தனையோ நோய்கள், விபத்துக்கள், சாவுகள் உலகத்தில் நிகழ்கின்றன. அதில் நமக்கு வேண்டியவர் யாராவது சம்பந்தப்பட்டிருந்தால் நம் மனம் என்ன பாடுபடுகிறது? அது போல் நம் ஊர்க் கோயில் என்றதும் என் நெஞ்சு பதறியது. ஊருக்குப் போய்ப் பத்து வருஷங்களுக்கு மேலானாலும் சொந்த மண்ணின் பாசமே தனிதானே?

என் கண் முன் எங்கள் ஊர் தோன்றியது. சலசலத்து ஓடும் காவிரி; அதன் கரையில் கண்ணைக் குளிர்விக்கும் வாழைக் கொல்லைகள்; வானையளாவும் தென்னைகள். படித்துறை ஏறி அரச மரத்தடிப் பிள்ளையாரைச் சுற்றிவிட்டுத் தெருவில் நடந்தால் முதலில் வருவது கோயில்தான். ஒரு காலத்தில் எந்த மகாராஜாவோ கட்டியது.

அந்தத் தேவன் சந்நிதியில் வலம் வந்து விழுந்து வணங்கித்தான் என் வாழ்வின் அஸ்திவாரம் வலுவாகப் போடப்பட்டது என்பதைக் கூற நான் பெருமையே கொள்கிறேன். அவர் இட்ட பிச்சை இன்று நான் முன்னுக்கு வந்து பெரிய மனிதனுமி—சொல்ல வெட்கமாக இருக்கிறது.-போலீஸில் பெரிய அதிகாரி நான்! ஆனால் என் கொடி பறப்பது வடக்கே ஒரு ஜில்லாவில்! ஆனால் தென்னாட்டில் தந்தைக்கு ஆபத்து என்றால் மகன் பதறிக் கொண்டு ஓடமாட்டானா? அப்படித்தான் துடித்தது என் மனம் இன்று!

எப்படியும் ஒரு தடவை ஊருக்குப் போய் வரவேண்டும் என்ற ஆவல் காரணமாக லீவுக்கு எழுதினேன். அதிர்ஷ்டவசமாக லீவு கிடைத்தது. உடனே புறப்பட்டு விட்டேன் என் பரிவாரத்துடன்! என் மனைவி புக்ககத்துக் கோயில் அம்மனுக்குச் சாத்தப் புடவை, வேஷ்டிகள் வாங்கினாள். மகனுக்கு ஒரே சந்தோஷம்.

ஃ ஃ ஃ

காவிரியின் சிலுசிலுப்பு என் உடலை வருடியது.

“வாகவா? எப்போது வந்தாய்?”

“வடக்கே பெரிய வேலையாமே உனக்கு. நம்ம பையனுக்கும் ஏதாவது கைகாட்டக் கூடாதா?”

“நீயும் சம்சாரியாகி விட்டாய்! பெண்ணுக்கு வரன் தேட வந்தாயா?”

மாலை நேரத்தில் ஊருக்குள் அடி எடுத்து வைத்த என்னை இப்படி ஏதேதோ குசலப் பிரசனங்கள் வரவேற்றன. ஆனால் நான் நினைத்தபடி கோயில் குறைபாடு மட்டும் யாரிடமும் கிளம்பவில்லை. எல்லாரும் ஆண்டவனையே மறந்து விட்டார்களோ? கடைசியில் ஓரிருவ



ரிடம் நானே கேட்டபோது வந்த பதில் இன்னும் வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருந்தது. பீடத்தில் ஓர் ஓரம் மூளியாகி விட்டதால் ஈசன் விக்கிரகத்தையும் ஒதுக்கி விட்டார்களாம். அது இப்போது எந்தப் புதைபொருள் இலாகாவில் இருக்கிறதோ? அட கடவுளே! திருட்டுப் பற்றிய செய்தி?.... ம்ஹூம்! சமீப காலமாகப் பக்கத்து நகரத்திலிருந்து ஒருவன் அடிக்கடி ஏதோ ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவதாக வந்தான். திருட்டு ஆனபின்கூட ஓரிரு நாட்கள் அவன் வரத்தான் செய்தான். பின் தன் ஊருக்குச் சென்றுவிட்டான். ஆனால் அதெல்லாம் பெரிய இடத்துப் பையன். நமக்கும் வேண்டியவர்கள்தான். தவிர, சிலையினால் அவனுக்கு என்ன லாபம்..... இல்லையா?

தர்மகர்த்தாவே இப்படிக் கூறிவிட்டபின் என்ன செய்வது......?

பொழுது புலர்ந்தது. காவிரியில் எல்லாரும் ஸ்நானம் செய்துவிட்டுக் கோவிலுக்குப் புறப்பட்டோம். மார்கழி மாதம் விடியற்காலையில் கோயிலில் விசுவரூப தரிசனம் பார்க்க நினைத்தேன். நேரமாகி விட்டதோ என்னவோ என்ற பரபரப்புடன் என் மனைவி



புறப்பட்டான். கிராமத்தில் எதைக் கண்டாலும் என் குழந்தைகளுக்கு வியப்பாக இருந்தது. தாத்தா இருந்த வீடு எது, நம் நிலம் எங்கே என்று துளைத்து விட்டனர். இடிந்துகிடந்த வீடு அவர்கள் உற்சாகத்தைக் குறைக்கவில்லை. நிலம்? அது எனக்கே தெரியாதே! வருஷா வருஷம் குத்தகைக்காரன் இத்தனைதான் என்று தர்மத்துக்கு அனுப்புகிறான். நானும் திருப்தி அடைகிறேன்.

''இதாப்பா... கோயில்....?'' மணியின் குரல் என் சிந்தனையைக் கலைத்தது.

''ஆமாம்.....'' — ஆனால் இது என்ன?

ராஜி திகைப்புடன் என்னை நோக்கினாள். விசுவரூப தரிசனம் அங்கு நடக்கவில்லை! பெரிய பூட்டு ஒன்று விசுவரூபமாக நின்ற மரக் கதவுக்குக் காவலாகத் தொங்கியது. இதற்குள் வெளியே திண்ணையில் அரட்டை அடித்துக் கொண்டிருந்த இருவர் அந்நியர்களான எங்களைக் கண்டு எழுந்தனர். ஐயோ, கடவுளே! காலை வேளையில் கண்ட உடம்புடன் கொட்டமடிக்கக் கோயில் திண்ணையா கிடைத்தது! அவர்கள் முஞ்சும் தலையும்! காலடியில் காவிரி! ஒரு முழுக்குப் போட்டுவிட்டு, இல்லை, முகம் கழுவிவிட்டாவது வந்து உட்காரக் கூடாதா?

''என்ன ஸார், தரிசனத்துக்கு உள்ளே போக வேண்டுமா? பரவாயில்லை, வாருங்கள்'' எதையோ விட்டு தெம்பித் திட்டி வாசல்

கதவைத் திறந்தான் ஒருவன். என் உடல் கூசியது, அவன் உள்ளே நுழைந்த போது.

''கட்டளைக் குருக்கள் பக்கத்து டவுனில் இருக்கிறார். வர நாழியாகும். நானும் ஒரு குருக்கள்தான். கதவைத் திறக்கவா? சாவி எடுத்து வரச் சொல்கிறேன். சந்நிதிக்குப் போகலாம்.''

என்னுள் ஏதோ ஒன்று புரண்டது! மணி ஆறு! உஷக்காலப் பூஜைக்கு இன்னும் ஆள் வரவில்லை !

''அனுசாரம்.... கட்டளைக்காரராவது.... வரட்டும்.....'' — ராஜி கெக்கெத்தாள்.

இதற்குள் வாசலில் இருந்தவர்களில் இளைஞன் கதவுகளைத் திறந்தான். கர்ப்பக் கிருகம் மட்டும் திறக்க முடியவில்லை. உள்ளே நோக்கினேன். ஒரே இருட்டு ! ஆண்டவன் உள்ளே இருக்கிறாரோ, இல்லையோ.....!

''ஏய்..... கடலே, அந்த எண்ணெய்யை எடுத்தா !''

ஒரு கிழவன் — புதுக் காவல்காரனும் — அவன் தந்த செம்பை விளக்கில் கவிழ்த்தான் இளைஞன். அவன் அருகே வந்த போது புகையிலை நெடி வீசியது. சட்டையைக்கூடக் கழற்றவில்லை அவன். சட்டைப் பையில் பல காரணங்களுக்காக இருக்கும் தீப்பெட்டியி லிருந்து நெருப்பை விளக்கிலிட்டான்! 'கல்லானாலும் கணவன்' என்று கற்றிருந்த என் மனைவி இருளானாலும் இறைவன்' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள். ஆனால் என் போலீஸ் மனம் ஆண்டவனையே ஆராய்ந்தது. இல்லை தேடியது, மன மாகிற டார்ச் லைட்டினால் !

''அம்மன் சந்நிதிக்குப் போகலாமா?''

''ம்....'' ராஜி நகர்ந்தாள். நான் சற்றுப் பின்தங்கினேன். கிழவன் கடலை என்னை வியப் புடன் நோக்கினான். காலை வேளையில் வந்து விட்ட இந்தப் பக்தர் கோஷ்டி, கற்பூரம்கூடக் காட்டாது போவது அவனுக்கு அதிசய மாகத்தான் இருந்திருக்கும்.

''அப்பா... பிராகாரத்தின் அடைசல் — பாம்பு பூச்சியெல்லாம் இருக்கும் போல் இருக்கிறதே ! இந்த அழகில் திருடன் எப்படி இருட்டில் வந்தானோ ?''

''திருடன் வெளியிலிருந்து வரவேண்டுமா சாமி?''

''அப்படி என்றால்....?''

''நமக்கென்ன சாமி.... ஏதேதோ சொல் றாங்க...... இப்ப பாருங்க.... நானும் வந்து ஆறு மாசமாச்சு. நாலு மாசமா சம்பளம் வரலே ! கோவிலுக்கு எண்ணெய் இல்லே ! குருக்களையாவைக் கேட்டாத் தமக்கு வருகிற சம்பளம் குடும்பத்துக்குப் பத்தலேங்கிறார். தர்மகர்த்தா என்னவோ என் . வீட்டுக்கு அந்த எண்ணெயில் விளக்கெரிக்கிறாப்பலே பேசுறார் ! பார்ப்பேன்.... இந்த மாசமும் சம்பளம் வரலே..... பேசாமல் நின்னுக்கிடு வேன். அடுத்த மாசம் நீங்க வந்தா இப்படிக் கதவைத் திறந்து இதுதான் கோவில்னு காட்டக்கூட ஆள் இருக்காது. என்ன செய்யறது சாமி! பெரியவங்க எல்லாம் கோயில் தங்கள் வயித்தை நெரப்பன்னு நினைக் கிறாங்க..... நாங்க அந்தத் தெய்வத்தை மட்டும் பார்த்துக்கிட்டுச் சந்நிதியில் கிடந்தா வயிறு ரொம்பிடுமா? ஜனங்களுக்கு நம் பிக்கை ஏற்பட சம்பந்தப்பட்டவங்க சுத்தமா யிருக்கணும். இல்லாமத்தான் பக்தியே புதைஞ்சு போச்சு.....'' கடலே தன் வயிற் றெரிச்சலைக் கொட்டித் தீர்த்தான்.

அம்மன் கோயில் வாசலில், 'நான்தான் சின்ன குருக்கள்' என்று நூறும் தடவையாக ஜபித்த கோயில் காளை வெற்றிலைக் காவிப் பல்லும், ஜில்பாக் குடுமியும் அழுக்குச் சட்டையும், தூங்கிவழியும் முகத்தில் பாழ் நெற்றியுமாக நின்று கொண்டிருந்தது. ஆதிருதியான இந்த அம்மனை எத்தனையோ முறை, ஜகஜ்ஜோதியான ஒளியில் சந்தனக் காப்பும், பூப்பாவாடையுமாகப் பார்த்திருக் கிறேன். அப்படிப் பரவசப்பட்டிருந்தஎனக்கு இன்று இருளில் பார்த்த போது...சகலனைப் பிரிந்து திருடப்பட்டு, எங்கோ யார் கையிலோ — அவன் சிற்பியோ, புராதனக் கலைக் கள்வனோ, சரித்திர ஆராய்ச்சி யாளனோ — அவன் கையில் அசோக வனச் சீதையாகப் பரிதவிக்கும் அன்னையின் சோக பிம்பம் மூலவிக்கிரகத்தில் படிந்து விட்டது போல் எனக்குத் தோன்றியது. ''அம்மா.... என் தாயே....!'' என்று வாய் விட்டு ஒரு குரல் அலற வேண்டும்போல் இருந்தது எனக்கு!

''ராஜி, சாமியைத் திருடன் கொண்டு போகவில்லையடி.... திருடனை ஒரு கருவி யாக்கிக் கொண்டு, முதலில் தேவியை அனுப்பிய ஐயனும் அகன்று விட்டான் இங்கிருந்து. பாழடைந்த கிராமத்தில் — கிழங்கள் நகர முடியாமல் முடங்கிக் கிடக்க, நம் போன்ற இளம் தலைமுறைகள் வெளி யேறிவிடவில்லையா, அப்படி.... இந்தக் கிழங்களைப் போல மூலவர் இன்னும் முனகிக் கொண்டு அக்கிரமங்களைச் சகித்துக் கொண்டு இருட்டில் முடங்கிக் கிடக்கிறார். உற்சவர் புறப்பட்டு விட்டார் உதறிவிட்டு.....'' வெளியே வந்த போது என் நெஞ்சு வெடித்துப் பீறிட்ட சொல் இதுதான்.

''சே..... ஏன், தெய்வத்தை மூளியாக்கிப் பேசுகிறீர்கள்? அப்படியானால் நீங்கள் ஒன்றும் சிரத்தை எடுக்கப்போவதில்லையா இருட்டைப் பற்றி....?''

''அப்படியானால் நீ கொண்டு வந்த புடவையைச் சாத்தப் போகிறாயா?'' நான் திருப்பி வினவினேன்.

அவள் ஒரு கணம் தயங்கினாள். ''நம் குழந்தைக்குக் கல்யாணமான பிறகு வந்து ஒரு தடவையாகச் செய்து விடலாம். அதற் குள் கோயில் உத்தாரணமும் ஆகிவிட்டால்.''

நான் அவளுடைய சாமர்த்தியமான பேச் சுக்கு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டேன். ஆனால் இருவர் மனமும் ஒன்றுதான். மறக்க முடியாத சாட்டை அடியாக விழுந்த கோவில் கொள்ளையைவிட, கோவிலின் நிர்கதி எங்களைத் தாக்கிவிட்டது என்பது உண்மை !

மூன்று வருடங்கள் ஓடிவிட்டன. பரம சிவன் நெஞ்சில் நஞ்சு போல, கிராமக் கோயி லின் சம்பவம் என் நினைவில் தங்கிவிட்டது. எங்கெங்கோ புனருத்தாரணமும் கும்பாபி ஷேகமும் நடந்தன. ஆனால் லக்ஷ்மிபுரத்தில்

மூச் ! அந்தப் பரமசிவனே இன்று நிஜமாகவே நாகாபரண பூஷிதராக்கி விட்டனர் போலும்!

ஃ ஃ ஃ

'சீனியர்' நகருக்கு உத்தியோக விஷயமாகப் போனவன், நண்பன் ரகுவின் அழைப்பை மதித்து இல்லில் இறங்கினேன்.

''வாங்க, போலீஸ் துரை! திடீர் விஜயமாக வந்து என்னைத் திகைக்க வைக்க விரும்பினாலும் நான் துப்புக் கண்டு பிடித்துவிட்டேன், நீ வரப் போகிறாய் என்று..எப்படி என் சமர்த்து.....'' நண்பன் மலர்ந்த முகத்துடன் வரவேற்றது எனக்கு ஆச்சரியமாக இருந்தது......

''அதென்னடா, ஜோசியம் படிக்க எங்கு கற்றாய்?''

''இதோ பாரேன்... துப்புத் துலக்கக் கிடைத்த தடயம். நீயா ஊரை விட்டுப் புறப்பட்ட ஒரு வாரத்துக்குள் அம்மாவுக்கு ஜூரம் ஏக்கமாகி விட்டதாம். உடனே ஒரு கனமான கடிதம் எழுதி விட்டாள் உனக்கு.'' நண்பனின் கையில் சிக்கியிருந்த என் மனைவியின் கடிதமும் பரிகாசமும் என்னைச் சிரிக்க வைத்தன. ஆம், கனமான கவர்தான்....!

கவரை நண்பன் எதிரிலேயே பிரித்தேன். அதனின்று விழுந்தது நாலைந்து மஞ்சள் நிறக் காகிதங்கள்!

''உன் பெண் எவ்வளவு பெரியவளாகி விட்டாள், வரன் தேடுவதற்கு! காலம் எத்தனை வேகமாக ஓடுகிறது! இங்கு ஏதாவது வரன் இருக்கிறதா?''

''அதில்லே ரகு! ராஜிக்கு என்னைச் சர்க்காரில் பேட்டா கொடுத்து வெளியூருக்கு அனுப்புவதே பெண்ணுக்கு வரன் தேடத்தான் என்ற எண்ணம். அதோடு இங்கு செகரிடேரியட்டிலும், ஆல் — இந்தியா — ரேடியோவிலும் தடுக்கி விழுந்தால் தமிழர்கள் இருக்கிறார்கள் என்று வேறு யாரோ சொல்லிவிட்டார்கள் அவளுக்கு.''

''ஓ..... அதற்கென்ன......? வேட்டையாடிவிடுவோம்.'' — ரகுவும் தலை ஆட்டினான். ''என் நண்பர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு ஒரு பையன்.... நல்ல பண்பான குடும்பம்.''

நானும் ஆமோதித்தேன் மகிழ்ச்சியுடன்.

ஃ ஃ ஃ

''குட்மார்னிங், ஸார் !''

''ஓ.... ரகுவா? வா, அப்பா.... ஸார் யாரு ?''

''என் நண்பர்..... தூரத்து உறவில் அண்ணன்கூட. ஒரு பெண் இருக்கிறாள். நம் சேகரின் ஜாதகத்தை வாங்கலாம் என்று.''

''ஓ.... வெல்கம்...! வாருங்கள் ஸார்!''

ஆனால் நான் ஆஜானுபாகுவாக, சிவப்பழமாக நின்ற அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவருக்குப் பின்னால் அழகிய கண்ணாடி பீரோவுக்குள், வரிசை வரிசையாக இருக்கும் அவை என்ன?

''என்ன அப்படிப் பார்க்கிறாய்?'' — ரகு என்னை உலுக்கினான்.

''ஸாருக்கு உத்தியோகமே தொல்பொருள் ஆராய்ச்சிதான். ரஸனையும் அதிகம். இவை அவருடைய சில சேமிப்புக்கள். இது ஒரு





''காலேஜ் படிப்பு முடிந்து, பட்டணத்திலிருந்து வரும் போது, ரோஜாச் செடி கொண்டுவரச் சொன்னதே அம்மா! இதோ....''

❋ ❋ ❋

'ஹாபி' அவருக்கு. புராதனப் பொருள்களை என்ன விலையானாலும் வாங்கி விடுவார்....''

''ஆங்.... அப்படியா....? தேவலையே !'' நான் இன்னும் ஆர்வத்துடன் அவைகளை நோக்கினேன்.

''ஆமாம். என்னுடைய அபூர்வமான கலெக்ஷன்ஸ் பல தற்போது நடக்கும் எக்ஸிபிஷனில்கூட இருக்கின்றன.....!'' பெரியவர் பெருமையுடன் கூறிக் கொண்டார்.

''அப்படியா?'' நான் வியந்தேன். ''இவைகளை எப்படிச் சேர்த்தீர்கள்?''

''சில புதைந்து கிடந்து கிடைத்தவை. சில விலைக்கு வாங்கியவை. அருமையாக இருக்கின்றன அல்லவா ?''

''பிரமாதம்.... இவையே இப்படி என்றால் இன்னும் நீங்கள் மதித்துக் கண்காட்சிக்கு அனுப்பியவை எப்படி இருக்குமோ?'' என் கலாரஸனையும் கட்டு மீறியது.

''உண்மை. அவை மிக உயிரானவை எனக்கு. சாயங்காலம் வாருங்களேன், பார்க்கலாம்.'' பெரியவர் அழைப்பு விடுத்தார்.

''இல்லே. இன்று வேறொரு இடத்தில்...'' ரகு தொடருமுன் நான் குறுக்கிட்டேன். ''இல்லே, இன்றே போகலாம்.'' என்னுள் ஏதோ ஓர் வேகம் பிறந்தது. இயந்திரகதியில் ஜாதக பரிவர்த்தனை முடிந்து நாங்கள் புறப்பட்ட போது ரகு உரக்கக் கேட்டான். ''உனக்கு எத்தனை நாட்களாக இந்தப் பைத்தியம்? சாயந்திரம் போ! மனிதன் ஒவ்வொன்றாக வர்ணித்துப் 'போர'டித்து விடுவார்! மாலே என்கேஜ்மென்டை ரத்து செய்துவிட்டுப் பிள்ளையைப் பார்க்க வந்தாலும் அர்த்தம் உண்டு.... அந்தக் கிறுக்குடன் பழைய குப்பையைக் கிளறப் போகிறாயா? அல்லது சம்பந்தியாக அவரைக் கவர இதுவும் ஒரு போலீஸ் தந்திரமா?''

''ரகு. குப்பையைக் கிண்டினால் சில சமயம் மாணிக்கம் கிடைக்கலாம். அல்லவா? இது அவரைக் கவர அல்ல. இன்று தேற்

நல்ல..... கடந்த நாலு வருஷங்களாக நான் இப்படித்தான் புரட்டுகிறேன். ஆனால்.... ஆனால்....."

"ஏன், ஏதாவது தொழில் முறையில்...."

"அப்படியில்லை.... ஆனால் அதற்கும் மேல். கூட்டத்தில் பிரிந்த தாயைத் தேடும் குழந்தை போல்.... நான்....."

"அடி சக்கை! நீ எப்போது இப்படி வர்ணனையுடன் பேசக் கவிஞனானாய்?.... போலீஸ்காரன் மனத்திலும் இந்த நுண்ணிய ரசனைகூட இருக்குமா?" ரகு சிரித்தான்.

"ரகு இப்போது ஒன்றும் கேட்காதே. இரவு சாவகாசமாகப் பேசலாம். ஆனால்.... நீ என்னுடன் வரவில்லையா?"

"உனக்காக வருகிறேன். ஆனால் அந்த 'போரை' நினைத்து....."

"ஓ.... பரவாயில்லை. தாங்க்ஸ்."

கீ கீ கீ

முகப்பு வாயிலிலிருந்த வர்ண ஒளி விளக்குகள் நல்வரவு கூற அந்தப் பெரிய கண்காட்சி மண்டபத்துக்குள் நுழைந்தோம். "இவைகள்தாம் என் கலெக்ஷன்ஸ். இந்தப் பகுதி முழுவதும் என்னுடையதுதான். மற்றவை இது போன்ற பல்வேறு அன்பர்களுடையவை." பெரியவர் எல்லாவற்றையும் விவரமாக எடுத்துரைத்தார்.

"....இது திருவனந்தபுரத்திலிருந்து நண்பர் ஒருவர் கொடுத்த பரிசு. மயிலில் முருகன் எத்தனை முன்ஜாக்கிரதையுடன் வீற்றிருக்கிறார் என்பது தெரிகிறது, பாருங்கள். முகத்திலே..... இந்தப் பிள்ளையார் விஜய நகர் காலனியில் நண்பர் ஒருவர் வீடு கட்டத் தோண்டிய போது கிடைத்தது. சிரமப்பட்டுச் சொந்தமாக்கிக் கொண்டேன். இந்த ஆறுமுகம் சுவாமிமலையில் ஒரு சிற்ப சாலையைக் கண்ட போது நானே ஸ்பெஷலாக டிஸைன் வரைந்து கொடுத்துச் செதுக்கச் சொன்னது..... இந்த தத்தாத்ரேயர், விஷ்ணு இரண்டும் விலைக்கு வாங்கியவை." நண்பர் வர்ணித்துக் கொண்டே போனார் தாம் சேகரித்த சொத்துக்கள் பற்றி. நான் சிலையாகக் கேட்டு நின்றேன்.

ஒரு குறிப்பிட்ட சிலையிடம் நானும் ஒரு சிலையாக நின்றபோது, "சாருக்கு அந்த விக்கிரகத்தினிடம் தனி பரிவு. நண்பனின் குடும்பம் ஒன்றுக்குக் கைகொடுக்கவேதான் அதை விலைகொடுத்து வாங்கினார். அதைவிட விசேஷம் அதன் ஜோடி ஒன்றும் மறு வருஷம் கிடைத்ததுதான்....." ரகு உற்சாகத்துடன் அதைப்பற்றி விவரிக்கலானான்.

"பாவம், அந்த நண்பனுக்குக் கடன் என்று வாங்க மனமில்லை. ஏனெனில், திருப்பித் தர முடியாது. கடனுடன் சாவதா என்ற மனத் தாபம். அதனால் இதை விலையாக வாங்கி அவன் பிரச்னையைத் தீர்த்தேன். 'பட், இட் ஈஸ் வொர்த் பேயிங்' அதற்கு அந்த விலை தகும்." பெருந்தன்மை கொப்பளித்தது அவர் பேச்சில்.

எதிரே மைய மண்டபம் தென்னாட்டுக் கோபுரம் போல் அலங்கரித்திருக்க, அதனுள் வண்ண விளக்குகள் ஜகஜ்ஜோதியாக ஒளி வீசப் பெரிய கண்ணாடிப் பெட்டிக்குள் ஏதோ இருப்பது எனக்குத் தெரிந்தது.

"அது என்ன அத்தனை உயர்ந்த பொருள் தங்கமா? கல் இழைத்ததா?" என் ஆவல் பெருகியது..

"இல்லை. எனக்கு அது ஓர் இனிய கவிதையாக வாய்த்தது. அவ்வளவுதான். சொல்லுவேன்....."

"அப்படி என்றால்?"

"டீ சாப்பிட்டுக் கொண்டே பேசலாமா?" ரகுதான் வினவியது. மூவரும் பெஞ்சியில் அமர்ந்தோம். ஆனால் என் கண்ணும் கருத்தும் மிகுதியாயிருந்த பொருள்களைப் பார்ப்பதிலேயே சென்றன;

"எனக்கு ஒரு நண்பனுடைய மகன். சிஷ்யகோடி என்று வைத்துக் கொள்ளுங்களேன். சரித்திர மாணவன். என்னைவிடப் பணக்காரன். என்னைவிட இந்த விஷயத்தில் அதிக ருசி — வெறி — உடையவன். அத்துடன் சிற்ப சாஸ்திரம் பயின்றவன். அஜந்தா, எல்லோராவின் வர்ணக் கலை இரகசியம் முதல், ஆவுடையார் கோயிலின் சிற்பங்களின் நாகாக வேலை. முடிய, நெல்லைக் கோயிலின் சப்த ஸ்வரத் தூண்களின் நுட்பம் முதல், தஞ்சை பெரிய கோயிலின் நிழல் விழாத கோபுரத்தின் லக்ஷணம் முதல் அவனுக்குத் தெரிந்தாக வேண்டும். காஷ்மீர் முதல் குமரி வரை சுற்றினான். ஆங்காங்கு சரித்திர, புராண சம்பந்தமான விஷயங்களைக் கிரகித்தான். ஆந்திராவில் நாகார்ஜுன ப்ராஜக்ட் அமைக்கும் போது சில புராணக் கோயில்களும், பல்லவ, இக்ஷ்வாகு அம்சங்களின் நாகரிகத்தை விளக்கும் சில கட்டடங்களும் ஜலசமாதி அடைய நேர்ந்தன என்று அறியும்போது ஏதோ தன் சொத்து பறிபோனது போலத் துடித்தான். ஆக, தன் அகில இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு அவன் திரும்பியபோது அவனே ஒரு ஆர்க்யாலாஜிகல் டிபார்ட்மெண்டாகத்தான், அறிவுக் கடலாகத்தான் இருந்தான். அப்படி ஒரு வெறி, பைத்தியம். அது மட்டுமா? அபூர்வப் பொருள்களை எப்படியாவது தன் கலைப் பொக்கிஷத்தில் சேர்த்துக் கொண்டு விடுவான். இந்தியா சம்பந்தமான தன் ஆராய்ச்சியை முடித்தபின் வெளிநாடுகளுக்குப் போகத் திட்டமிட்ட அவன் ஒரு முறை தன் உள்நாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய போது..." சரித்திர நிபுணர் தம் இதழ்களைச் சற்று டீக்கோப்பையில் நீந்த விட்டு அயர்வு நீக்கினார்.

எனக்கோ ஏதோ குறுகுறுத்தது; மயிர் கூடு உடலில் வேகத்தைக் கொடுத்தது. படபடத்தது நெஞ்சு.

"அவன் கொண்டு வந்த குறிப்புக்களை என் முன் பரப்பினான். அது எப்போதும் சகஜமானதொரு சம்பவம்... நானும் பிறர் கைத் தின்பண்டத்தை ஏக்கத்துடன் நோக்கும் குழந்தை போலப் பார்ப்பேன். மறுமுறை அவன் பிரயாணம் புறப்படு முன் நான் ரிடையராகி விடுவதால் நானும் அவனுடன் வருவதாகக் கூறி விடைபெற்றேன் அம்முறை." பெரியவர் மறுபடி தொடங்கினார்: "அன்று அவன் காட்டிய பொருள் ஒன்று என்னை மிகவும் கவர்ந்தது தான் அதற்குக் காரணம். அதன் கவர்ச்சி மட்டுமா? வேறு ஏதோ ஒன்று.... என்னை

அதன்பால் ஈடுபடுத்தியது. ஆனால் மறுபடி. அவள் புறப்பாடு ?

"மறு வாரம், இந்தர்ஸிங்- அதுதான் அவன் பெயர் — என் முன் தலை குனிந்து நின்றான்....

'ஸாப்:.... அவள் என் மனைவி — ஓடிப் போய் விட்டாள்' — அவன் கண்கள் முதன் முறையாக நீர் உகுத்தன.

"நான் திகைத்தேன். நான் கண்ட அபூர்வப் பொருள் என் நினைவில் சுழன்றது.

'ஸாப், நான் வீட்டைக் கவனிக்காமல் இப்படிச் சுற்றியது அவளுக்குப் பிடிக்கவில்லையாம். அவளுக்கு என்னுடன் வாழ்வில் எந்தச் சுகமும் இல்லையாம். உன்னைக் கற்சிலைகள் கவர்ந்தன; என் சிலை போன்ற அழகு உன் நண்பன் குமண்சிங்கைக் கவர்ந்தது. நாங்கள் போகிறோம்' என்று எழுதி விட்டுப் போய் விட்டாள், ஸாப்!'

நான் முகவாயைத் தேய்த்து விட்டுக் கொண்டேன். அப்படி இருக்குமா? "ஸிங், நீ அன்று காட்டினாயே, ஓர் அபூர்வச் சிலை.... அது எது?"

"ஏன் ஸாப்?"

"இல்லை.... சொல்!"

"அதை ஒருவன் எனக்கு விற்றான். மிகச் சக்தி வாய்ந்த தேவியினுடையதாம் அது. அபூர்வ வேலைப்பாடாம். ஜோடியாகத் தருவதாகச் சொன்னவன் இது மட்டும்தான் கொண்டு வந்தான். ஆனால்.... ஆனால்...... ஸாப்.....!"

"இந்தர்....." நான் பயந்து பதறினேன். "அப்படியானால் நீ கோவிலில் திருடியதா அது? எங்கே? எப்படி? பாவி, அம்மனை ஸ்வாமியிடமிருந்து பிரித்தாய்..... உன் தேவி உன்னை விட்டுப் பிரிந்து போய்விட்டாள்......"

"ஸாப்..." திடீரென்று ஒரு மின் அதிர்ச்சி அவன் மூளையைத் தாக்கிற்று. கலை, சரித்திரம், விஞ்ஞானம் இவைகளையே ஆட்டிப் படைக்கும் — எல்லை கட்டி வைக்கும்—ஆண்டவன் நினைவே அப்போதுதான் வந்ததோ! அவனுக்கு ஊர் பெயர் நினைவில்லை! ஆனால் கலை வெறியில் ஊரைக் கொள்ளை கொண்ட கோரி முகம்மதை வெட்கச் செய்த தன் தவறு புரிந்தது அவனுக்கு. அதன்பின் மனமுடைந்த அவன் எங்கு சென்றானோ? அவன் குடும்பக் கடன்களை அடைத்து, பெற்றோர் இருவரையும் உயிரோடு பறிகொடுத்த இரு குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பையும் ஏற்ற இந்தர்சிங்கின் சகோதரன் முன் வந்தபோது விற்ற பொருள்களில் ஒன்றாகத்தான், ஒரு குடும்பத்துக்கு உதவுமே என்று இதை மட்டும் விலைபேசி வாங்கினேன். என் வீட்டில்கூடத் திட்டினார்கள். அவனுக்கு வந்த பாபம் உங்களுக்கும் தொடரும் என்றனர். ஆனால் எனக்கு இது ராசி வந்ததாகிவிட்டது." நண்பர் முடிக்கு முன் — 'சர்'ரென்று பெஞ்சியை உதைத்துக் கொண்டு எழுந்தேன் நான்.

"இந்த நடராஜர் எப்படி உங்களுக்கு.." நான் சமாளித்துக் கொண்டு ஏதோ பேச முயன்றேன்.

"அதைக் கூறுமுன்தான் எழுந்து வந்து விட்டீர்களே!" பெரியவர் வியப்புடன் என்னை நோக்கினார். பின் தொடர்ந்தார்.

"அந்த நடராஜமூர்த்தியைப் பாருங்கள், என்ன களையான முகம்! தேவிக்கு ஏற்ற ஜோடி ஆகிறது..... ஒன்றுக்காகவே மற்றது வார்க்கப்பட்டது போல் ஓர் இணை! இல்லையா ?" அவர் கலைக் கண்களால் நோக்கினார்.

"ஆம்...ஆம்..." தெய்வீக மயக்கத்தில் நான் தலையாட்டினேன்.

"சென்ற வருஷம் ஒரு நாள் நான் கல்கத்தாவுக்குப் புறப்பட இருந்த தினம். ஸ்டேஷனுக்குப் புறப்பட்டவன். ரயில் தவறிப் போய் வீடு திரும்பினேன். காரணம், ஒருவன் இச்சிலையோடு வந்ததுதான். இதைப் பார்த்ததுமே என் பழைய சிலைக்கு ஜோடியாக்கலாம் என்ற ஓர் எண்ணம் 'பளிச்' சென்று தோன்றிவிட்டது. அதில்தான் தாமதமாகி ஸ்டேஷனுக்குச் சென்றவன் ரயிலையும் கோட்டை விட்டேன். என் மனைவி திட்டிக் கொண்டேயிருந்தவள், மறு நாள் காலை திடீரென்று என் கால்களைப் பிடித்துக் கொண்டு விம்மினாள். 'அந்த இரண்டு சிலைகளையும் நீங்கள் விரும்பியது போல் சேர்த்து வையுங்கள்' என்று தன் மாங்கல்யத்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். கடையில் அன்று பேப்பரில் கல்கத்தா வண்டி பெரும் விபத்துக்கான செய்தி இருக்கக் கண்டேன். நல்ல காலம்! நடராஜ மூர்த்தி என்னைக் காப்பாற்றினார். என் மனைவி உடனே கூறி விட்டாள்: அந்தச் சிலை வந்தது, இந்தர்சிங்கின் மனைவி ஓடினாள்,



'டை' பிறந்த கதை

இங்கிலாந்து மன்னர் ஒருவர் வேட்டைக்குச் சென்றார். மிருகத்தின் மீது குறி வைக்கும்போது துப்பாக்கியைச் சரியாகப் பிடிக்காததால் துப்பாக்கி தாக்கி அவர் கழுத்து எலும்பு சிறிது முறிந்து விட்டது. அதோடு அவர் வீடு திரும்பினார். அடுத்த நாள் ஒரு முக்கிய மசோதாவின் மீது மந்திரி சபையில் அவர் பேச வேண்டியிருந்தது. தன் கழுத்தில் கட்டுப் போட்டால் விகாரமாய்த் தோன்றுமே என்று எண்ணி எலும்பு முறிந்த இடத்தில் நீண்ட பட்டுத் துணியில் கட்டுப் போட்டுத் தொங்க விட்டுக்கொண்டு சபைக்குச் சென்றார். அது ஒரு அழகைக் கொடுத்தது. அதைக்கண்ட எல்லோரும் அதைப் போலவே கட்ட ஆரம்பித்தார்கள். அதுவே நாளடைவில் 'டை'யாக மாறி விட்டது.

- எஸ். ஆர். சின்னமணி

இது வந்தது என் மாங்கல்யம் பிழைத்தது என்று. அவன் சிலையைப் பிரித்தான். நம்மால் நாம் இவை ஒன்று சேர வேண்டியவனோ என்னவோ. அன்றே தனி மண்டபம் அமைத்து இரண்டையும் ஒன்று சேர்த்து விட்டேன். என் கலைப் பொக்கிஷத்தின் மணி பீடம் இதுதான்! அடடா! என்ன இப்படிப் பார்க்கிறீர்கள்? நான் சொல்வது தவறு?''

''ஆண்டவனே! நீங்கள் செய்தது சரி தான்! இவை ஜோடியான, என் தந்தையும் தாயும்தான்! ஆனால் என்ன விந்தை! எப்படிப் பிரிந்து, கூடி, இடையில் எத்தனை லீலைகள் செய்து விட்டாய்.'' — இப்படித் தான் கூற நினைத்தேன். ஆனால் நாக்கு உணர்ச்சி மயமாகிப் புரண்டு கொடுத்தால் தானே!......

ஃ ஃ ஃ


'டெல்லியில் அபூர்வமாக என்ன பார்த்தீர்கள்? வரன் ஏதாவது தகைந்ததா?'' — என்னை வீட்டினுள் நுழையும் போதே வரவேற்ற கேள்விகள் இவை.

''ஓ.... தேடினேன். தேடியதைப் பார்த்தேன். அபூர்வமானதொரு ஈச்வர லீலையின் உண்மையை உணர்ந்தேன்.''

''என்ன புதிர் போடுகிறீர்கள்?''

''இல்லை, ராஜி. வரன் தேடப்போனேன். அங்கே தெய்வத்தைக் கண்டேன். வரப் பிரசாதினியும் சகாயதேவரும் கலையை வெறி

வட்டார நகைச்சுவை



கருத்து: சென்னை வாசிகள் எத்தனைதான் சம்பாதித்தாலும் இரவலும் கடனும் வாங்குவதில் நிகரற்றவர்கள்.

அண்மையில் நண்பரொருவர் வீட்டில் நடந்தது இது:

முதியவர்: என்ன அம்பி, வீட்டில் யாருமே இல்லையா?

சிறுவன்: அம்மா, காப்பிப் பொடி இரவல் வாங்கப் போயிருக்கா, அக்கா கிளப்புக்கு நிதி திரட்டப் போயிருக்கா, அண்ணு ஓசியிலே ஸ்கூட்டர் பழகி ஓட்டப் போயிருக்கான். அப்பா கடன் வாங்கப் போயிருக்கார்!

முதியவர்: அப்போ நீ மாத்திரம்....?

சிறுவன்: நான்தான் பக்கத்தாத்துப் பையனோட பம்பரத்தை ஓடைச்சுட்டேனே, அதனாலே வீட்டிலேயே இருக்கேன்!

ரூபாய் 25-00 பரிசு பெறுபவர்:

மீனாட்சி கிருஷ்ணு

1, ராஜரத்னம் தெரு, சென்னை-10



இ. கீதா

44, [illegible]

சேட் (வேலை ஆளிடம்): என்னய்யா ஆச்சு, அந்த மளிகைச் செட்டியார் விவகாரம்!

வேலை ஆள்: ரொம்ப பேஜாரா இருக்குங்க. 'கடுக்கா' கொடுக்கிறாங்கோ.

சேட்: அதையாவது, ஆப்டது லாபம்னு கொண்டுவரதுக்கு கென்னய்யா.



''இராமநாதன்'' [illegible]

271, [illegible]

சென்னை-10

சங்கீத சபா ஒன்றில் சங்கீதக் கச்சேரி நடந்து முடியும் கட்டத்தை நெருங்கியிருந்தது. மழை 'சோ'வென்று வெளியே கொட்டிக் கொண்டிருந்தது. கலைஞர்களுக்கு மாலைகள் அணிவித்து நன்றி கூறும் முகத்தான் சபைக் காரியதரிசி பேசினார்: ''சபையோர்களே, இந்த மூன்று மணி நேரங்களாக பொறுமையுடன் உட்கார்ந்து சங்கீதத்தைக் கேட்ட உங்களுக்கும், உங்களை வெளியே போக விடாமல் தொடர்ந்து 'சோ'வென்று கொட்டிய மழைக்கும் எங்கள் சார்பாகவும், கலைஞர்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

யாகக் கொண்டு கட்டினவனைக் கவனிக்காத வனைத் தண்டித்து, ஒரு குடும்பத்தைக் காத்துவிட்டுச் சௌக்கியமாகத் தன்னைத் தேடி வருபவர்களுக்குத் தரிசனம் தரும் திருக் கோலம் கண்டேன்.''

''என்ன... என்ன? எப்படி எங்கே? போலீ சுக்குத் தகவல் தந்தீர்களா? மறுபடி அவை களைக் கோயிலில் பிரதிஷ்டை செய்ய முடி யுமா?'' கேள்விகள் சரமாரியாக எழுந்தன.

''அப்படித் தேவையில்லை, ராஜி. ஆண்ட வனே உதறிச் சென்றுவிட்ட வெறும் மண், புண்ணிய பூமியாக மாறுமானால் தெய்வம் தானாக அங்கு வரும். அல்லது யார் மனத்திலாவது குடிபுகுந்து எடுத்துக்காட்டச் செய்து குடி புகுவார். ஆண்டவன் எங்கும் இருக்கிறான். அவனை நாம் உணரும் முறையில் தான் 'பக்தி பாவம்' வேறுபடுகிறது.''

என் இல்லி அநுபவம் அவளைக் கண்ணீர் விடச் செய்தது.

''பக்தரில்லாத, பூஜையில்லாத, பக்தியில் லாத இருட்டுக் கர்ப்பக்கிருகத்தைவிட காண வரும் மக்கள் கோடி உள்ள காட்சிக் கூடம் உனக்கு உவப்பாகிவிட்டதா இறைவா? அதற்கு நீ ஆடிய ஆட்டமென்ன? உன் னுடன் ஆடியவர் எத்தனை பேர்! இல்லிப் பேராசிரியருக்குக் கிடைத்தது பாக்கியம். அதிர்ஷ்டமிருந்தால் நம் மகனுக்கு அந்தப் பாக்கியம் கிட்டலாம். அங்கு மருமகளாகி..'' பேசிக் கொண்டே ராஜி உள்ளே சென்றாள்.

சென்னை



கே. வெங்கட்ராமன்
12, வேலு நாய்க்கன் தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை-33

சென்னைக்குப் புதிதாக வந்த கல்வியதிகாரி ஓர் ஆரம்பப்பள்ளியைப் பார்வையிடச் சென்றார். அங்கு இரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவனைப் பார்த்து 'உனக்குத் தெரிந்த பழங்கள் இரண்டைக் கூறு' என்று வினவினார். உடனே மாணவன், 'வாழப் பளம், மாம் பளம்' என்று அடுக்கிக் கொண்டே போனான். அதிகாரி ஆசிரியரைப் பார்த்து, 'பாவம், பையனுக்கு 'ழ' உச்சரிப்பு வரவில்லை போலும்' என்றார். அதற்கு ஆசிரியர், 'ஆமாம், அது அவனுக்குப் பழக்கமாகப் போய் விட்டது' என்றார்.



பிரயாணி (சென்ட்ரலில்): என்னப்பா வேணும், மூர்மார்க்கெட்டுக்கு?

.... : மூர்மார்க்கெட்டுக்கா?... அப்பா! எம்மாந்தூரம் இருக்குது! அஞ்சு ரூபா கொடு சாமி.

பிரயாணி: அதெல்லாம் முடியாது! ரெண்டு ரூபா தான் தருவேன்.

சென்னை சைதாப்பேட்டைக்கு அருகிலுள்ள ஒரு தெருவில் நடந்த பழைய சம்பவம் இது:

அத் தெருவிலுள்ள ஒரு வீட்டில் ஒரு அம்மாள் இரவு சாப் பிட்டு விட்டுத் தன் வெள்ளித் தட்டைக் கழுவிக் கொண்டிருந் தாள். இரவு 8 மணிதான் இருக்கும். அக்கம் பக்கத்திலும் தெருவிலும் விளக்குகள் பிரகாசத்துடன் எரிந்தன. நடமாட் டமும் அதிகமாக இருந்தது. வெள்ளித் தட்டைக் கழுவிக் கொண் டிருந்த அந்த அம்மாள் அருகில் திடீரென்று ஒருவன் வந்து அவள் கையில் இருந்த தட்டை வெடுக்கென்று பிடுங்கிக் கொண் டான். அந்த அம்மாள், ''டேய், திருடா! திருடா!'' என்று கூக்குரலிட்டாள். 'ஸ்லேடி'யான அத் திருடன் மேல் துண்டால் வெள்ளித் தட்டை மறைத்துக் கொண்டு, ''அந்த விலைக்கு வரா தும்மா; எம்மா ஆசை உனக்கு?'' என்று இரைந்து கேட்டுக் கொண்டே தட்டை எடுத்துக் கொண்டு வேகமாக நடக்கத் தொடங்கினான். கூக்குரலைக் கேட்டு வெளி வந்தவர்கள் எந்த வித சந்தேகமும் கொள்ளவில்லை. அந்த வட்டாரத்தில் இரவு வேளைகளில் பக்கத்திலுள்ள பூக்கடையிலிருந்து பூ கொணர்ந்து விற்பதும், பெண்கள் அதைப் பேரம் பேசி சண்டையிட்டு வாங்கு வதும் சகஜம். ஆகையால் மற்றவர்கள் வியாபாரிக்கும், அந்த அம்மாளுக்கும் பூ வியாபாரத்தில் சண்டையென ஒதுங்கி விட்டனர். அந்த அம்மாள் கை நிலை அடைந்து விஷயத்தை விவரிப்பதற்குள் வெள்ளித் தட்டுடன் ''மல்லிப்! மல்லிப்!'' என்று கூவிக் கொண்டே திருடன் அடுத்த சந்தில் மாயமாக மறைந்து விட்டான்.




பட்டம்மாள் ஸ்ரீனிவாசன்
3, கப்பா ரெட்டி தெரு,
பழைய மாம்பலம்,
சென்னை-33

உங்களை நாள் முழுவதும் மனோ உல்லாசத்துடன்
வைக்கக்கூடிய பவுடர்...

பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்



எல்லா காலங்களிலும், நீங்களும் உங்கள் குடும்பத்தில் அனைவரும் தினமும் உபயோகிக்கச் சிறந்தது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க். அதை உடம்பில் தூவிக் கொண்டால் அனுபவமாகும் ஆனந்தமே அலாதி. அதன் உள்ளம் கவரும் நறுமணம் உங்களையும், உங்களைச் சூழ்ந்துள்ளவர்களையும் மகிழவைக்கும். வியர்வையை விரைவில் உறிஞ்சும் தன்மை உள்ளதால் வியர்த்துக் கொட்டும் கோடையில் உபயோகிக்க அது விசேஷமானது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்கை உடம்பில் தூவிக்கொண்டு நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடனும், மனோ உல்லாசத்துடனும் இருங்கள்... உடலைத் தழுவி நிற்கும் நறுமணத்துடன் திகழுங்கள்!



யாவரும் வாங்கக்கூடிய விலையில்
நறுமணம் கமழும்,
உயர்ரக டால்கம் பவுடர்

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)

P-3603

பொழுது போக்குக்காக ஸ்டாம்பு
சேகரிப்பவர்கள் ஏராளம். ஆனால்
அவற்றுக்காகப் பைத்தியம் பிடித்து
அலைபவர்களும் சிலர் உண்டு.

தபால்தலையைப் பெற ஒரு சதித்திட்டம்!

பள்ளிச் சிறுவனான வெர்னன் வாகன், தான் அருமையாகச் சேர்த்து ஒரு நோட்டுப் புத்தகத்தில் ஒட்டி வைத்திருந்த உபயோகப் படுத்தப்பட்ட தபால் தலைகளை ஒரு நாள் மாலையில் சாவகாசமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். பலமுறை புரட்டிப் புரட்டிப் பார்க்கப்பட்டதால் அந்த நோட்டுப் புத்தகத்தின் ஓரங்களெல்லாம் மடங்கியிருந்தன.

அந்தபால் தலைகள் எல்லாமே சமீப கால வெளியீடுகள்தாம். அவைகளில் மிகவும் பழையனவாகத் தோற்றமளிக்கும் ஒன்றிரண்டு தபால் தலைகளை விற்றுவிட்டு அந்தப் பணத்தைக் கொண்டு புதிதாகச் சில தபால் தலைகளை வாங்க விரும்பினான். அவன் தலை முழுக்குப்போட நினைத்த அந்த ஸ்டாம்புகளில் ஒன்று எண்கோண வடிவத்திலுள்ள 'ஒரு சென்டு' தபால் பில்லை. மூன்று பாய்மரங்கள் கொண்ட கப்பலின் படம் போட்டிருந்தது.

அந்தச் சிறுவன் உள்ளூரிலிருந்த ஒரு தபால் தலை சேகரிப்பாளரான நீல்மாக்கின்னன் என்பவரிடம் கொண்டு போய்க் கொடுத்து அந்த ஸ்டாம்புக்காக ஆறு ஷில்லிங்குகள் பெற்று வந்தான். அவனுக்கு ஒரே ஆனந்தம். அவன் கண்டானா அப்போது அந்தத் தபால் தலையின் மதிப்பு பிற்காலத்தில் லட்சம் டாலர்களை எட்டுமென்றோ, அதே போன்ற ஸ்டாம்பைத் தேடிப் பலர் பைத்தியம் பிடித்தது போல் அலைவார்கள் என்றோ? இது நடந்தது 1873ம் ஆண்டில் பிரிட்டிஷ் கயானாவில் ஜார்ஜ் டவுன் நகரில். அந்தத் தபால் தலை 1856ம் ஆண்டில் சர்க்காரின் அவசரத் தேவைக்காக, சர்க்கார் உத்தரவின் பேரில் உள்ளூர்ப் பத்திரிகை அச்சகம் ஒன்றில் குறைந்த அளவில் தயாரிக்கப்பட்டவைகளில் ஒன்று.

நீல் மாக்கின்னன் 1882ம் ஆண்டில் தன் தாயகமான ஸ்காட்லாந்துக்குத் திரும்பிய பிறகு தபால் தலைகள் சேகரிக்கும் பொழுது போக்கில் உற்சாகம் குன்றித் தான் சேகரித்தவைகளையெல்லாம் விற்றுவிடப் போவதாக விளம்பரம் செய்தான். பெம்பார்ட்டன் என்பவர், கணிசமான ஒரு தொகையை விலையாகக் கொடுப்பதாகக் கடிதம் எழுதினார். ஆனால் ரிட்பாத் என்பவர் நேராகவே வந்து நூற்றிப் பத்துப் பவுன்கள் (550 டாலர்கள்) கொடுத்து மொத்த சேமிப்பையும் கொண்டு போய் விட்டார்.

அந்தத் தபால் தலைக் கும்பலில், பிரிட்டிஷ் கயானா ஒரு சென்ட் எண்கோண வடிவத் தபால் தலைக்கு முக்கியத்துவம் உண்டு என்பதை உணர்ந்த ரிட்பாத்;



பிரசித்திபெற்ற ஸ்டாம்புகள் சேகரிப்பாளரான, பாரன்வான் ஃபெராரி என்பவருக்கு அந்த ஒரு ஸ்டாம்பை மாத்திரம் சுமார் எழுநூற்றைம்பது டாலர்களுக்கு விற்றார்.

முதல் உலக யுத்த காலத்தில் ஜெர்மனியில் தங்கிவிட்டிருந்த இந்தத் தபால் தலை 1922ம் ஆண்டில் பிரெஞ்சு அரசாங்கத்தின் உடைமை என்று கருதப்பட்டுத் திரும்பி வந்தது. அந்த அரசாங்கம், இந்தத் தபால் தலையை ஏலத்தின் மூலம் விற்று விடுவது என்று முடிவெடுத்துத் தேதியையும் அறிவித்தது.

அப்போது இங்கிலாந்தின் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர், ஒரு தீவிர தபால் தலை சேகரிப்பவராக விளங்கினார். இந்த ஒரு சென்ட் ஸ்டாம்ப் தன் சேகரிப்பில் ஐக்கியமாக வேண்டும் என்ற ஆசையில் தன் பிரதிநிதியை ஏலத்துக்கு அனுப்பி வைத்தார். அந்த ஏஜண்டைத் தவிர, அமெரிக்காவைச் சேர்ந்த ஆர்தர் ஹிண்ட் என்பவரும், பர்ரோஸ் என்பவரும், முதன் முதலில் நீல்மாக்கின்னனிடம் வாங்காமல் கோட்டை விட்ட பெம்பார்ட்டனும் வந்திருந்தார்கள்.

ஏல ஆரம்பமே ஐயாயிரம் டாலரில் நின்றது. ஆயிரம் ஆயிரமாகத் தாவி பத்தாயிரத்தை எட்டியது. இந்தக் கட்டத்தில் பெம்பார்ட்டன் விலகிக் கொண்டார். இருபதினாயிரத்தை எட்டிய போது இங்கிலாந்து மன்னரின் ஏஜண்ட் ஒதுங்கிக்கொண்டார். கடைசியில் முப்பத்தி ஐயாயிரம் டாலரைக் கொடுத்து ஆர்தர் ஹிண்ட் அந்த ஸ்டாம்பை அடித்துக் கொண்டு போனார்.

அவ்வளவுதான்! இந்த ஒரு செண்ட் தபால் தலைக்கு இத்தனை மதிப்பு என்று தெரிந்ததும் பல தீவிர தபால் தலை சேகரிப்பாளர்கள் பிரிட்டிஷ் கயானாவுக்கே பிரயாணத்தை மேற்கொண்டார்கள். இவர்கள் பிரிட்டிஷ் கயானாவுக்குப் போய் அங்குள்ள ஒவ்வொரு தபாலிடமும் அவர் வீட்டுக்கு வந்திருக்கும் பழைய தபால் கவர்களை யெல்லாம் கொடுக்கும்படி வேண்டினர். அவர்களும் தேடினார்கள். ஆனால் அந்த ஒரு செண்ட் எண்கோண வடிவத் தபால் தலை ஒன்று கூடக் கிடைக்கவில்லை. சென்றவர்களெல்லாம் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

இன்றும் சிலர் அந்தக் குறிப்பிட்ட தபால் தலை ஒன்று கிடைக்காதா என்று தவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

முப்பத்தி ஐயாயிரம் டாலர் கொடுத்து வாங்கிய ஸ்டாம்பை ஆர்தர் ஹிண்ட் உடனடியாக ஐம்பதினாயிரம் டாலருக்கு இன்ஷூர் செய்தார். 1933ம் ஆண்டில் அவர் காலமான போது அவருடைய தபால் தலை சேமிப்புக்கள் அவருடைய உறவினர்களுக்குப் போகும்படி ஏற்பாடாகியிருந்தது. ஆனால் இந்தக் குறிப்பிட்ட பிரிட்டிஷ் கயானா ஒரு செண்ட் ஸ்டாம்பைப் பற்றிச் சட்டப் பிரச்னை எழுந்த போது அது ஹிண்டின் மனைவிக்குச் சேரும்படி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது !

1940ம் ஆண்டில் தன் பெயரை வெளியே தெரிவிக்க விரும்பாத ஒரு பிரபல தபால் தலைப் புள்ளி, ஓர் ஏஜண்ட் மூலம் ஸ்ரீமதி ஹிண்டிடமிருந்து வாங்கின விலைக்கு அதிகமாகவே கொடுத்து ஸ்டாம்பைப் பெற்றிருக்கிறார். அவரிடமிருந்து அதை வாங்கப் பலர் அறுபதினாயிரம் டாலர் வரை கொடுக்க முன் வந்தார்கள். ஆனால் அவர் அதை விற்கத் தயாரில்லை. இன்று அந்த ஸ்டாம்பின் மதிப்பு ஒரு லட்சம் டாலராக மதிப்பிடப்படுகிறது.

ஆர்தர் ஹிண்ட் தம் வாழ்நாளில் காப்பாற்றிய ஒரு ரகசியம் சமீபத்தில்தான் வெளியாயிற்று.

பசிபிக் கடல் பகுதியில் சாமான்கள் ஏற்றிச் செல்லும் கப்பலில் பணியாற்றிய ஓர் இளைஞனுக்குத் தபால் தலைகள் சேர்ப்பது பொழுது போக்கு. பிரிட்டிஷ் கயானாவில் அவனுக்கு நண்பர்கள் உண்டு. அவர்கள் எழுதும் கடிதங்களை அவன் பத்திரமாகச் சேர்த்து வைத்திருந்தான். 1922ம் ஆண்டில் ஹிண்ட் ஏலத்தில் முப்பத்தி ஐயாயிரம் டாலர் கொடுத்து வாங்கிய ஸ்டாம்பைப் பற்றிக் கேள்விப்பட்ட அவன், தன்னிடமிருந்த பழைய கடிதக் கட்டுக்களை ஆவலுடன் பார்த்தான். அந்தக் கட்டில் ஒரு எண்கோண ஸ்டாம்பு அகப்பட்டு விட்டது. அதை எடுத்துக் கொண்டு அந்த இளைஞன் நேராக ஹிண்டைப் போய்ப் பார்த்தான். ஹிண்ட் அந்தத் தபால் தலையைப் பரிசோதித்தார். அந்தத் தபால் தலையைத்தான் எடுத்துக் கொண்டு அதற்காக ஒரு தொகையைப் பணமாகவே மறு நாள் கொடுப்பதாகச் சொன்னார். அந்தத் தொகையின் அளவைக் கேட்டதும் அந்த இளைஞனின் தலை சுற்றியது. அத்தனை பெரிய தொகை.

மறு நாள் அந்த இளைஞன் வந்தபோது ஹிண்ட் தயாராக வைத்திருந்த பணத்தைக் கொடுத்துவிட்டு அந்த இளைஞனிடமிருந்து தபால் தலையை வாங்கிக் கொண்டார். பிறகு தன் சிகரெட் பெட்டியைத் திறந்து அந்த இளைஞனுக்கு ஒரு சிகரெட்டை எடுத்துக் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டார். ஒரு தீக்குச்சியை எடுத்து உரசி இளைஞனின் சிகரெட்டைப் பற்ற வைத்தார். அதே தீக்குச்சியால் அவர் தம் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக அந்த இளைஞன் கொடுத்த தபால் தலையைக் கொளுத்தினார்.

"இப்போது பிரிட்டிஷ் கயானா ஒரு செண்ட் எண்கோண ஸ்டாம்ப் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அதுவும் என்னிடம்தான் இருக்கிறது. இரண்டாவது ஸ்டாம்ப் என்று குறிப்பிட எதுவும் இல்லை" என்று பெருமிதத்துடன் கூறினார் ஹிண்ட். — மேனு

இறப்பதற்கு முன்...



ஆதாரம் :
"சுவாரஸ்ய விருந்து"

தகவல் :
கோவை து. மணிவாசகம்

இங்கிலாந்தில் ஒரு கனவான் தம் வாழ்நாளில் எந்த எந்த ஆசிரியர்கள் எழுதிய புத்தகங்களை ஆர்வத்தோடு படித்தாரோ, அந்தப் பேராசிரியர்களுக்கெல்லாம் ஆளுக்குப் பத்துப் பவுன் வீதம் தம் சொத்திலிருந்து எடுத்து அனுப்பும்படி தம்முடைய இறுதிக் காலத்தில் உயில் எழுதி வைத்துவிட்டுச் சென்றார்.

அந்தப் பேராசிரியர்களில் பேர்னட் ஷா அவர்களும் ஒருவர். அவரிடம் மேற்படி உயில்படி பத்துப் பவுனைக் கொண்டுபோய்க் கொடுத்தபோது, அதைப் பெற்றுக்கொண்ட ஷா கூறினார்:

"இந்தப் பத்துப் பவுனை மிக்க மகிழ்ச்சியாக வரவேற்கிறேன். என்னுடைய கருத்துப்படி நான் பெரிய மனிதன்தான். இன்னொருவர் என்னைப் புகழ்வதை நான் இலட்சியமே செய்யவில்லை. எனினும் என்னுடைய புத்தகங்களைப் படிக்கும் ஒவ்வொருவரும் தாங்கள் இறப்பதற்கு முன் இம்மாதிரி பத்து பவுன் தருவார்களானால் நன்றாக இருக்கும் !"



"கமலி, நேரமாச்சு... இலை போடு!"

"உம்... தொடியிலே சமைத்து மூட பிரஷர் குக்கரா இருக்கு?"

"என்னடி முணகறே ?"

"ஒன்னுமில்லே! ரொம்பத்தான் அவசரப்படுத்தாதேங்கோன்னேன்!"

சாப்பிடும் போது —

"சாம்பாரில் பருப்பே வேகல்லே!"

"எப்படி வேகும்?"

"ஏன்?"

"ஏன்னு கேட்டா ? உங்களுக்கே தெரியாதா?" கணவர் 'கப்'பென்று அடங்கிப் போனார்.

அடுத்த நாள் —

"ரசம்கூடவா ஆகல்லே?"

"ஆமான்னேன் !"

"சரி, மோரையாவது வைத்து... ராம... ராமா....!"

மறு நாள் —

"எட்டரை மணிக்கு ரயில். இங்கேயே எட்டாறதே! இன்னும் எப்பொழுது சாப்பிட்டுக் கிளம்பறதாம் ?"

"சும்மா ஓட ஓட விரட்டாதேங்கோ ! இந்த ரயில் போனால் அடுத்த ரயில்!"

"ஆமாண்டி, இந்த உத்தியோகம் போனா வேறே உத்தியோகம் காத்திண்டிருக்கா ?"

அன்று மாலை —

"ஏண்டி, கமலி! ரவியோடு டீச்சர் கடிதம் அனுப்பியிருக்காரே ! தினம் ஒன்பது மணி ஸ்கூலுக்கு அவன் பத்து மணிக்குத் தான் போறானாமே... ஏன் தினமும் 'லேட்' பையன் ஊரைச் சுத்தறானா?"

நான் காதில் வாங்காதது போல நின்றேன்.

ரவி மனத்தாங்கலுடன், "இல்லேப்பா ! நான் ஊரையும் சுத்தலே... ஒன்னும் சுத்தல்லே.... எல்லாம் வீட்டைத்தான் சுத்தறேன். கொஞ்ச நாளா அம்மா சமையல் முடிக்கலே, ஒன்பதரை மணியாறது. அப்புறம் சாப்பிட்டுக் கிளம்பறதுக்குள்ளே.... மணி பத்தாகாதா என்ன?" என்றான்.

"என்னது..... நான்தான் எட்டுமணிக்கு வெறும் மோர் சாதத்தை அள்ளிப் போட்டுக் கொண்டு ஓடறேன்னு, உனக்கு ஒன்பதரை மணிக்குக்கூடவா சமையல் ஆகிறதில்லே? ஏய்... கமலி!"

நான் மௌனமாக இருந்தேன்.

"ஏய், கமலி! உன்னைத்தான்மா!"

நான் ஏக மௌனமாக இருந்தேன்.

"சரி, சரி! உன்னை எப்படிக் கவனிக்கிறதென்று தெரியும்!"

"கவனித்தால் ஏன் இந்தச் சங்கடம்?" என்று நான் வாய்க்குள் முணு முணுத்தேன்.

அடுத்த நாள் மாலை.

"ஏய், கமலி! இந்தா பிரஷர் குக்கர். நீ கேட்டது!"

நான் ஓடி வந்தேன்.

"எப்பொழுது வந்தீர்கள்? இப்பொழுது தானா! காப்பி டிபன் சாப்பிடலேயே?...."



இருங்கள், ஒரு நொடியில் கொண்டு வரு கிறேன்! இதென்ன மகிமை.....? பிரஷர் குக்கரா? அதை அப்படி வையுங்கள்! அப் பாடா! என் கஷ்டமெல்லாம் தீர்ந்தது. இப் பொழுதாவது என்னைக் கவனிக்கத் தோன் றிற்றே!'' வாய் பேசிக் கொண்டே போன போது, கை பிரஷர் குக்கரை, ஒரு குழந் தையை அணைப்பது போல அணைத்து எடுத் துக் கொண்டது.

அன்று இரவு அமர்க்களமாக, 'டின்னர்' சாப்பிட்டோம். 'ஏது? ஒரு நொடியில் பிரஷர் குக்கரின் உதவியால் தயாரானதா?' என்று கேட்கிறீர்களா?

இல்லை, இல்லை. எல்லாம் பக்கத்து ஹோட்டலிலிருந்து தருவித்ததுதான்.

நான் வெகுநாட்கள் கேட்டுக் கொண் டிருந்த பிரஷர் குக்கர் கிடைப்பதற்குக் கடந்த ஒரு மாத காலமாகவே நான் செய்த சாகஸங்கள் பலித்ததைக் கொண்டாட வேண்டாமா? பின்னே!''

அடுத்த நாள் காலை ஐந்து மணியாகியும் நான் படுக்கையை விட்டு எழுந்திராததைப் பார்த்த என் கணவர் பயத்துடன் அருகில் வந்து நெற்றியில் கை வைத்துப் பார்த்தார்.

பிறகு, ''கமலி, மணி அஞ்சாறதே! உடம்பு சரியில்லையா?'' என்று பரிவுடன் விசாரிக்கவும் எனக்குச் சிரிப்பு வந்தது.

ஐயோ ! இவருக்கு விஷயமே தெரிய வில்லையே ! பிரஷர் குக்கர் வைத்துக் கொண் டிருக்கிற பரிமளா, மஞ்சு, விஜயா, ராஜி, பானு எல்லாரும் ஏழு மணிக்குக் குறைந்து படுக்கையை விட்டு எழுந்திருப்பதில்லையாம். கடந்த இரண்டு மாதங்களாக லேடீஸ் கிளப்பில் சேர்ந்ததிலிருந்து கேட்டுக் கேட்டுக் காது துளைக்கப் போச்சே !

''ஏழு மணிக்கு எழுந்து குளித்து, எட்டு மணிக்குள் சமைத்து, சாப்பிட்டு, ஒன்பது மணிக்கு, ராஜியும், விஜயாவும் கையிலே சாப்பாடு எடுத்துக் கொண்டு ஆபீஸ் போகிறார்களாமே !

இனி மேல் நானும், ''ஹாய்யாக ஏழு மணிக்கு எழுந்திருந்தால் போதும்!'' என்று எண்ணிக் கொண்டு போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டேன்.

தினமும் நாலரை மணிக்கே எழுந்து பழக்கப்பட்ட உடம்பாயிற்றே! படுக்கையில் இருப்பு கொள்ளவில்லை. சலிப்புடன், போர்வையை உதறிவிட்டு எழுந்த போது சுவியன் பிடித்த மணி ஆறு தான் அடித்தது. இனி மேல் தினம் தினம், அரை மணி லேட்டாக எழுந்து பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு சாவகாசமாக எழுந்து நடந்தேன்.

குளியலறையிலிருந்து, ''கமலி ! எட்டரை மணிக்கு எலெக்ட்ரிக் டிரெயினைப் பிடிக்க வேண்டும். ஞாப கம் இருக்கிறதா?'' என்று கணவர் குரல். கொடுக்கவே நான் சிரித்துக் கொண்டே, ''பிரஷர் குக்கர் இருக்கு. பயப்படாதீர்கள்....!'' என்று அப யக் குரல் கொடுத்தேன்.

குளித்து வெளியில் வந்தவர், ''அடடா! நேற்றுக் கடையில் குக்கரைப் பிரித்துப் பார்த்த போது, அத்துடன் வைத்திருந்த புத்தகத்தை மறந்து அங்கேயே வைத்து விட்டு வந்து விட்டேன். அதில் எப்படி இதை உபயோகப்படுத்துவது'' என்று விளக்கம் கொடுத்திருக்கிறது. அது இல் லாமல்.... புதிதாக... இன்று இதை வைத்துக் கொண்டு திண்டாடாதே! பழைய முறையில் சமைத்து முடி.....''

இப்படி இவர் சொல்லவும், நான் அலட்சியமாக, ''சரிதான். என்னையும் எல்லோரையும் போலப் புத்தகத்தைப் பார்த்துச் சமைக்கும் ஆள் என்று நினைத் தீர்களா!'' என்று கேலியாகக் கேட்டேன்.

தினமும் லேடீஸ் கிளப்பில் வம்பளக்கும் பரிமளாவின் பிரஷர் குக்கர் பிரதாபம் தான் எனக்கு நெட்டுரு ஆகியிருந்ததே !

''இரண்டு நிமிடத்தில் சாதம், மூன்று நிமிடத்தில் பருப்பு! ஒரு நிமிடத்தில் காய் கறி.....! பிறகு குழம்பு ரசம் தயாரிக்க ஐந்து நிமிடங்கள். ஆக, பத்து பதினைந்து நிமிடங்கள்தான் சமையலறையில் வேலை!''

''இன்று சாதம் மட்டும் வைப்போம்'' என்று அதில் அரிசியை மட்டும் களைந்து வைத்து விட்டுத் தனியாக அடுப்பில் வேறு பாத்திரத்தில் பருப்பை வேகப் போட்டேன்.

சரியாக இரண்டு நிமிடங்கள் பிரஷர் குக்கரை ஸ்டவ்வில் வைத்திருந்து பிறகு இறக்கி விட்டேன்.

'சாப்பிடும் வரை சாதம் சூடாக இருக் கட்டும்' என்ற எண்ணத்துடன் மற்ற சமையலை விரைவில் முடித்தேன்.

அவரும் குழந்தைகளும் ஆவலுடன் கைத் தின் முன் உட்கார, நான் புன்முறுவலுடன் சினிமா கதாநாயகி மாதிரி குக்கரைத் தூக்கி வந்து கீழே வைத்துத் திறந்தேன்.

கடக் கட.... ஆவி பறக்கும் சாதத்துக்குப் பதில் நான் போட்ட அரிசி அப்படியே.... மொட்டு மொட்டென்று என்னைப் பார்த்து விழித்தால் எனக்கு எப்படி இருக்கும்!

என் கண்ணில் கண்ணீர் வழிந்தது.

இவர் கேலிச் சிரிப்புடன், ''தினமும் மோர் சாதம் கிடைத்தது. இன்று சாதம் இல்லை. குழம்பு ரசம் எல்லாம் ரெடி! இவ் வளவுதானே !'' எனவும் நான் கோபத்



"சமையல் முடியற வரை இப்படிக் கரண்டிகளைச் சடையில் செருகிக்கொண்டு விட்டா யானால் அவசரத்துக்கு நீ அவைகளைத் தேடி அலைய வேண்டியதில்லை!"



★

துடன், "முதல் நாள்தானே! அதற்குள் எப்படிப் பழக்கமாகும்?" என்றேன்.

நான் திரும்பவும் பழைய முறையில் சாதம் வடித்த போது சாப்பிடுவதற்குவீட்டில் யாரும் இருக்கவில்லை.

மாலையில் கணவர் வந்த போது, குக்கர் புத்தகமும் வந்தது. அதைப் படித்த பிறகு தான் எனக்கு மனம் தெளிந்தது.

அரிசியைப் பாத்திரத்தில் களைந்துபோட்டு மூடியை மூடி, அதில் நீராவியும், அதன்... ஸ்...ஸ்ஸென்ற.... சத்தமும் வராமல் நான் சமைத்து முடித்த சமர்த்தை எண்ணி நானே நாணினேன்.

அடுத்த நாள் புத்தகத்தில் போட்டிருந்த படி அரிசியைக் களைந்து குக்கரில் வைத்து, மூடியை மூடியபிறகு, 'ஆவி' வந்ததைப் பார்த்து, நான் சமையலே முடிந்ததுபோல் குதூகலித்து, பரவசத்துடன், 'ஆவி வரது. ஆவி வரது.....' என்று கூவவும், "ஆவி யாவது, மண்ணாவது! இதுக்குத்தான் ராத்திரி மர்மக் கொலை புத்தகத்தைப் படிக்காதே என்று முட்டிக் கொண்டேன்" என்று கூறிய வாறே கணவர் பரபரப்புடன் பக்கத்து அறையிலிருந்து ஓடி வரவும், நான் விழுந்து விழுந்து சிரித்தேன்.

அவர் உண்மை 'ஆவி'யை நேரில் கண்டது போல பேந்தப் பேந்த விழித்தார்.

அன்று முன்தினம் போல் இல்லாமல் சாதம் பாதி வெந்து, பாதி ஜலத்துடன் காட்சியளித்தது. இரண்டாம் நாள்தானே! என்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டேன்.

அன்றும் குழந்தைகளும் அவரும் சாப்பிடாமல் போய் விட்டனர்.

அடுத்த நாள் குக்கரை இன்னும் சிறிது அதிக நேரம் அடுப்பில் வைக்க வேண்டும் என்று தீர்மானித்து அதன்படியே செய்தேன்.

பிறகு திறந்து பார்த்த போது சாதம் பாயஸமாகக் குழைந்து இருந்தது!

"கமலி! நான் ரெடி! இலையைப் போடு!" என்று கணவர் குரல் கொடுத்தார்.

மெல்லவும் முடியாத சொல்லவும் முடியாத நிலை!

சட்டென்று குழைந்த சாதத்தில் பாலை எடுத்து வார்த்தேன்.

சாப்பிட வந்தவர்களுக்கு ஒவ்வொரு டம்ளர் பால் பாயஸம் கொடுத்தேன்.

"ஏது.... என்ன விசேஷம் இன்று?" இவர் கேட்கவும் நான் சிறிதும் யோசியாமல் "இன்று ரவிக்குப் பிறந்த நாளாச்சே!" என்று கூறவும், "ரவிக்கா? அடுத்த மாதம் மூன்றும் தேதியல்லவா அவன் பிறந்தான்!" என்று அவர் ஆச்சரியப்பட்டார்.

நான் என் அசட்டுத்தனம் வெளிப்படுமோ என்ற பயத்தில் "நம்ம.... ரவிக்கு என்று யார் சொன்னது?" என்று படபடப்பாகக் கூறினேன்.

என் மன நிலையை உணர்ந்த அவர், "எந்த ரவிக்கு இன்று பிறந்த நாள்?" என்று கேட்க தைரியமின்றி வெளியேறினார்.

நான் மனம் தெளிந்து பார்த்தபோது, பாத்திரம் நிறையப் பால் பாயஸம் என்னைப் பார்த்து வெள்ளையாகச் சிரித்தது.

வீணாக்க மனமில்லை. வயிறு நிறையக் குடித்தேன். மீதியை ஒரு கிண்ணத்தில் ஊற்றி எடுத்துக் கொண்டு பரிமளா வீட்டுக்குக் கிளம்பினேன்.

பரிமளா வீட்டு 'காலிங்' பெல்லை அழுத்திய போது மாடியிலிருந்து அவள் குரல், "யார் அது? இதோ, வரேன்.....!" என்று கேட்டது.

அப்பொழுதுதான் என் மனத்தில் அந்த எண்ணம் பளிச்சிட்டது.

பரிமளா பாயஸத்தைப் பார்த்துவிட்டு, "என்ன விசேஷம்?" என்பாள்.

"ரவியின் பிறந்த நாள்!" என்று நான் சொன்னால்....சட்டென்று எனக்கு அதிர்ச்சியில் உடல் குலுங்கிற்று.

என் பிள்ளை ரவியும், பரிமளா பிள்ளை கோபுவும் ஒரே நாளில் ஒரே ஆஸ்பத்திரியில் பிறந்தவர்கள்!

யோசிக்க நேரமில்லை. நான் மடமட வென்று பாயஸத்தை ஒரே மூச்சில் காலி செய்தேன்.

மறுபுறம், "இதோ வரேன்!" என்று பரிமளா குரல் நெருங்கி வரவும், கையிலிருந்த காலிக் கிண்ணத்தை, பக்கத்திலிருந்த குரோட்டன்ஸ் செடியின் மறைவில் போட்டேன்.

கதவைத் திறந்த பரிமளா, என்னைப் பார்த்துத் திகைத்தாள்.

மூச்சு இரைக்கக் கொண்டு நான் வாயைத் துடைத்துக் கொண்ட போதுதான், 'அட, அசட்டு ஜன்மமே!' என்று தலையிலே அடித்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

ரவிக்குப் பிறந்த நாள் இல்லாவிட்டால் என்ன? வீட்டில் வேறு ஆளே பிறக்கவில்

லையா? அல்லது சும்மாதான் பாயஸம் வைத்தேன் என்று சொல்லிச் சமாளிக்கக் கூடப் புத்தியில்லையா? மெனக்கெட்டு இவ்வளவு தூரம் கொண்டு வந்த பாயஸத்தை மூச்சுத் திணற வாசற்படியில் நின்று குடிக்கவா வேண்டும்!' என்று மனத்துள் நொந்து கொண்டாலும் ஒரு மாதிரி சமாளித்துக் கொண்டு அசட்டுச் சிரிப்புடன் உள்ளே நுழைந்தேன்.

நான் வெட்கத்தைவிட்டு அவளிடம், 'பிரஷர் குக்கரில் சமைக்கும் முறைகளை விவரமாகத் தெரிந்து கொண்டிருந்த போது, "அம்மா! இது நம்ம வீட்டுக் கிண்ணியா? பாருங்க, செடியின் பின்னால் கிடந்ததுங்க!" என்று கேட்டுக் கொண்டே பரிமளாவின் தோட்டக்காரன் என் பாயஸக் கிண்ணத்தை அவள் முன் நீட்டினான்.

வீட்டுக்குப் போகும் போது நைஸாகக் கிண்ணத்தை எடுத்துப் போய் விடலாம் என்று எண்ணியிருந்தது கெட்டுவிட்ட பதை பதைப்பில் நான் விழித்த போது, "சீச்சி! ஏதோ எச்சில் கிண்ணம்! காக்கா கொண்டு வந்து போட்டிருக்கும். நம்ம வீட்டுது இல்லே, நீயே எடுத்துக் கொண்டு போ!" என்று பரிமளா தாராளமான தர்மசிந்தனையுடன் பதிலளித்தாள்.

'திருடனுக்குத் தேள் கொட்டியது போல' நான் திருதிருவென்று விழித்தேன். தோட்டக்காரன் அந்த எவர்சில்வர் கிண்ணத்துடன் மறைவதைப் பார்த்துக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தேன்.

அடுத்த நாள் குக்கரை அடுப்பில் வைத்த போது, 'பிரஷர் அதிகமானால் 'சேஃப்டிவால்வ் வெடிக்கும்' என்று பரிமளா கூறியது வேறு மனத்தில் திக்திக் கென்று பயமுறுத்திக் கொண்டே இருந்தது.

"எதற்கும் ஜாக்கிரதையாக இருப்போம்" என்று குக்கரை ஸ்டவ்வில் வைத்த பிறகு எட்ட நின்று கொண்டேன்.

மனத்தில் மட்டும் அது வெடித்துவிடுமோ வெடித்து விடுமோ என்ற பீதி நிறைந்திருந்தது.

அந்த ஜபத்துடன் அம்மியில் அரைத்துக் கொண்டிருந்த போதுதான் அது 'பட' ரென்ற சத்தத்துடன், உண்மையாகவே வெடித்து விட்டது:

எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் அம்மிக் குழவி காலில் விழுந்து, கட்டை விரலை நசுக்கியதையும் கவனியாமல், பாத்திர அலமாரியின் பின்னால் நடுங்கிக் கொண்டே ஒடுங்கிக் கொண்டேன்.

ஓசை கேட்டு, என் குடும்பமே சமையலறைக்குள் ஓடி வந்தது. நான் படபடக்கும் மனத்தைச் சமாதானப்படுத்தி நொண்டிக் கொண்டே மறைவிடத்திலிருந்து வெளியே வர முயன்ற போது என் கணவரும், பெண், பிள்ளைகளும் நிமிர்ந்து கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சின்னப் பெண் சிரித்துக் கொண்டே, "ஹைய்யா! சாதமெல்லாம் ஜோரா அழகா சுவரிலே ஒட்டிக் கொண்டிருக்கே!" என்று கைகொட்டிக் குதூகலிக்கவும், விவரம் தெரிந்த ஏழு வயதுப் பிள்ளை ரவி, சிறிது கவலையுடன், "அப்பா! இந்த வெடி அம்மிக் குழவியைத் தூக்கி மேலே போட்டிருக்கே..... அம்மாவைத் தூக்கி....எங்கே போட்டிருக்கும்? காணுமே!" என்று விசாரித்தான்.

சப்தம் கேட்டுக் கவலையுடன் திரும்பியவன், நான் அலமாரியின் பின்னாலிருந்து வெளிப்படுவதை அப்போதுதான் பார்த்தான்.

"இதோ! அம்மாவைத் தூக்கிப் பீரோ பின்னால் போட்டிருக்கு. பாவம், காலிலே அடி பட்டதாம்மா?" என்று பரிவுடன் விசாரித்தவாறே அருகில் ஓடிவந்தான்.

குழந்தைகளுடன், குழந்தையாக நின்று, கூரையில் ஒட்டிக் கொண்டிருந்த சாதத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கணவர் அந்த நிலைமையிலும், "என்ன கமலி! இன்னிக்கும் ஹோட்டல் சாப்பாடு தானா? இன்று கூரைக்கு அதிருஷ்டம் கொடுத்து வைத்தது!" என்று கிண்டலாகக் கூறவும், என் மனத்தில் அதுவரை அடக்கி வைத்திருந்த அவ்வளவு பிரஷரும், 'டா' என்ற சேஃப்டி வால்வைத் தள்ளிக் கொண்டு வெளியே வெடித்தது.

இந்தச் சப்தத்தைக் கேட்டு, என் குடும்பம் முழுவதும் சமையலறையை விட்டு வெளியே ஓடிவிட்டது.


அடுத்த நாள் நான், பரிமளா, பங்கஜ, விஜயா, ராதி, பானு முதலியவர்களைச் சபித்துக் கொண்டே எப்பொழுதும் போல நாலரை மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்தேன்.

எட்டு மணிக்குச் சாப்பிட்ட திருப்தியுடன் அலமாரியில் கொலு வீற்றிருந்த பிரஷர் குக்கரைப் பார்த்து, "குக்கரே, நீ எப்பொழுதும் அங்கேயே இருந்து கோடி காலம் வாழ்க!" என்று வாழ்த்திவிட்டு, ஆபீசுக்குக் கிளம்பின கணவர் என்னைப் பார்த்துக் குறும்பாக முறுவலிக்க, நான் நாணித் தலை குனியாமல் என்ன செய்ய?

★

"மாமா, நான் சொந்தமாக டிஸ்பென்ஸரி ஆரம்பிக்கப் போகிறேன்!"

"ரொம்ப சந்தோஷம்; உனக்கு நிறைய வியாதிகள் வரட்டும்!"





48, சமணம் மறைந்தது: சைவம் நிறைந்தது!

திருஞான சம்பந்தரை அழைத்து வர அமைச்சரும் அம்மையாரும் புறப்பட்டார்கள். பெண் மணிகள் சூழப் பாண்டிமாதேவியார் பல்லக்கில் சென்றார். அவர்கள் திருமடம் சென்று சம்பந்தரைக் கண்டனர்.

ஞானத்தின் திருவுருவை
நான் மறையின் தனித்
துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வரு மறைக்
கொழுந்தைத்
தேனக்க மலர்க் கொன்றைச்
செஞ்சடையார் சீர்
தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்.

கண்டவுடன் சமணர்கள் செய்த கொடுஞ் செயலை நினைந்தனர். கண்களில் அருவி போல் நீர் பெருகியது. உரை குழறியது. உடல் நடுங்கியது. புவியில் விழுந்து புரண்டனர். துன்பக் கடலில் விழ்ந்தோர் ஒரு கரை கண்டுபிடித்தது போல் சம்பந்தரது சரணாரவிந்தங்களைப் பற்றிக் கிடந்தார்கள்.

''எம்பெருமானே! சமணர்கள்செய்த தீமை சென்று வேந்தனை வெப்பு நோயாகப் பற்றிக் கொண்டது. சமணர் பன்முறை முயன்றும் அவ்வெப்பு நீங்கவில்லை. தேவரீர் எழுந்தருளி வந்து மன்னவரின் உடற் பிணியையும் உயிர்ப் பிணியையும் அகற்றி எம்மையும் உய்விந்தருள வேண்டும்'' என்று விண்ணப்பம் செய்து கொண்டார்கள்.

''அஞ்ச வேண்டா. எம்பெருமான் திருவருளால் அமணரை வாதில் வென்று, வேந்தனுக்கு வெண்ணீறு அணிவிப்பேன்'' என்று சம்பந்தர் அருளிச் செய்தார். அதனைக் கேட்டு ''பெரும் பேறு பெற்றோம்'' என்று கூறி இருவரும் மகிழ்ந்தனர்.

திருஞான சம்பந்தர் திருத் தொண்டர் கூட்டத்துடன் புறப்பட்டுத் திருக்கோயிலுட் சென்றார். ''யான் வாது செய்யத் திருவுள்ளம்தானோ?'' என்று எண்ணித் திருப்பதிகம் பாடினார். இறைவருடைய திருவருளைப் பெற்ற பின் சிவிகை மீது எழுந்தருளினார். பாண்டிமா தேவி பல்லக்கில் பின்னே வந்தார். குலச்சிறையார் தொண்டர் குழாத்துடன் முன்னே சென்றார்.

சம்பந்தர் காவலன் அரண்மனைக்கு அருகில் வந்தார். ஆளுடைய பிள்ளையாரின் வரவைப் பற்றி அமைச்சர் முன்னே சென்று அரசனிடம் தெரிவித்தார். அப்பொழுதே அரசனின் துன்பம் சிறிது நீங்கியது. நவரத்தினங்கள் இழைத்த சிறந்த ஆசனம் ஒன்றைத் தலைமாட்டில் இடுமாறு பணித்த மன்னர், ''அவரை எதிர் கொண்டு அழைத்து வாரும்'' என்று அமைச்சரிடம் கூறினார்.

அரசனின் செயலைக் கண்டு அங்கிருந்த சமணர்கள் வருந்தினார்கள். ''வேந்தர் பெருமானே! நமது சமயத்தைக் காக்கும் தன்மை இதுதானா? நோயைத் தீர்க்குமாறு அவருக்கும் எங்களுக்கும் கட்டளை இடுங்கள். நோய் அவரால் தீர்ந்தாலும் எங்களால் தீர்ந்ததாகவே கூறுங்கள். அப்பொழுதுதான் நமது சமயம் நிலைபெறும்'' என்றார்கள்.

ஆனால் மன்னவரோ "நான் அவ்வாறு வஞ்சனையாகப் பொய் புகல மாட்டேன்" என்று கூறினார்.

திருஞான சம்பந்தர் அரண்மனை வாயிலில் சிவிகை விட்டிறங்கினார்.. அமைச்சர் முன்னும், அம்மையார் பின்னும் வர அழகின் சிகரம் போல் எய்தினார். அவரை நோக்கிய மன்னன் மணிப்பீடத்தைக் காட்டினான். சம்பந்தர் அப்பீடத்தில் அமர்ந்தருளினார். சிவஞான மூர்த்தியின் திருவருட்பார்வையால் வெப்பு நோய் சிறிது நீங்கியது.

அன்னாரை நோக்கிய மன்னன் சம்பந்தருடைய பிறப்பிடம் முதலியவற்றை அவரிடம் வினவினான். ஆளுடைப் பிள்ளையும் உரியபடி உத்தரம் பகர்ந்தார்.

பொறாமையால் புழுங்கிய சமணர்கள் கண் சிவந்து, காலை எழும் கதிரவனை நீல முகில் சூழ்ந்தது போல் சூழ்ந்தனர். வாது புரிய எண்ணித் தமது நூல்களை எடுத்துக் கூறிக் குரைத்தார்கள். அதனைக் கேட்ட சம்பந்தர், "உமது நூற்பொருளின் முடிவை உள்ளவாறு உரைமின்" என்று கூறியருளினார்.

உள்ளம் நடுங்கினார் மங்கையர்க்கரசியார். "இவரோ இளம் பிள்ளை. இவர்கள் எண்ணிலாதவர்கள் நின்று எதிர்க்கிறார்கள். உங்கள் நோய் தீர்ந்த பின் இவர்கள் வாது செய்யட்டும்" என்று மன்னவரை நோக்கிக் கூறினார்.

"பெண்ணே! நீ அஞ்ச வேண்டாம்" என்று மனைவியை நோக்கிக் கூறிய மன்னன் "வேறு வாதம் எதற்கு? எனக்கு உற்ற வெப்பு நோயை அருகர்களாகிய நீரும் சிவபிரான் அடியாரும் தீர்க்க முயலுவீர். வெற்றியைப் பொறுத்து இரு திறத்தின் தெய்வத் தன்மையை நாம் தெளிவோம்" என்றான்.

சம்பந்தர் மங்கையர்க்கரசியாரை நோக்கி, "அம்மே! என்னைப் பாலன் என்று நீங்கள் அஞ்ச வேண்டாம். நிலையில்லாத அமணர்க்கு என்றும் நான் எளியனல்லேன்" என்று தேற்றித் திருப்பதிகம் பாடியருளினார்.

"வேந்தே! உமது உடம்பில் இடப்பாகத்தில் உள்ள நோயை நாங்கள் மந்திரித்துத் தீர்ப்போம்" என்று அமணர்கள் கூறினார்கள். தமது மந்திரத்தைக் கூறி மயிற் பீலியைக் கொண்டு தடவினார்கள். வெப்பு நோய் மென்மேலும் வளர்ந்து வருத்தியதே யன்றிக் குறையவில்லை.—நோயின் வெம்மையைத் தாங்க முடியாத மன்னன் மறையவர் பெருமானை நோக்கினார்.

"திருவாலவாய்ப் பெருமானின் திருநீறே மந்திரமும் மருந்துமாகித் தீர்க்கும்" என்று கூறிய சம்பந்தர்,

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான்
திருநீறே"

என்று திருப்பதிகம் பாடித் திருவளர் திருநீற்றை மன்னவனின் வலப்பக்கத்தில் பூசினார். உடனே வெப்பு நீங்கிப் பூம்புனல் போல் குளிர்ந்தது. இடப்புறத்தில் மிக்க அழல் எழுந்து இருபுறத்து வெப்பும் ஒருபுறமாகி வாட்டியது. அமணர்களின் உடம்புங் கன்றியது. அவர் தருக்குக் குன்றியது; பீலி தீய்ந்தது; சதுரத் தன்மை மாய்ந்தது.

"நஞ்சு ஒரு புறமும் அமுதம் ஒரு புறமும் நின்றது போல் எனது உடம்பில் துன்பமும் இன்பமும் ஒருங்கே நின்றன. வஞ்சக அருகரே! வாதில் தோற்றுவிட்டீர்கள். என்னை விட்டு விலகிப் போங்கள்" என்று அமணர்களை நோக்கி உரைத்த மன்னன், சம்பந்தரை நோக்கி, "பெருமானே! இடப்புறத்தில் என்னை வாட்டும் வெப்பு நோய்யையும் விலக்கி ஆட்கொள்ள வேண்டும்" என்று கூறித் தொழுதான்.

சம்பந்தர் கருணையுடன் திருநீறு கொண்டு ஒரு முறை தடவினார். பிணி நீங்கி மன்னன் உய்ந்தான்.

மந்திரியாரும் தேவியாரும் பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து, "பெருமை பெற்றோம்; இன்றே யாம் பிறந்தோம்; பிறவாத மேன்மையை மன்னர் பிரான் பெற்றார்" என்று கூறி மகிழ்ந்தார்கள்.

வெப்பு நீங்கிய மன்னன், சமணர்களின் முன்னிலையில் ஞானசம்பந்தர் திருவடி மீது விழ்ந்து, "அடியேன் உய்ந்தேன்" என்று கூறினான்.

இனிய கவி பாடிச் சுரநோயைத் தீர்த்த சம்பந்தரது திறத்தைக் கண்டு அமணர்கள் அனல்வாது, புனல்வாது செய்து வெல்லத் துணிந்தார்கள். "ஏட்டில் சமய உண்மையை எழுதி நெருப்பிலிட்டு அது வேகாமல் இருக்க வைத்தலே வெற்றியாகும்" என்றார்கள். அதற்கு மன்னனும், ஞானசம்பந்தரும் உடன்பட்டார்கள்.

பெரிய அவை கூடியது. அந்த அவைக்கு முன் மன்னன் ஆணையினால் நெருப்பை அமைத்தார்கள். சிவமே பொருள் என்று தெரிவிக்கும் திருமுறை நூலை எடுத்த திருஞான சம்

பந்தர், கண்ணுதலே பரம்பொருள் என்று சென்னியில் வைத்துத் தொழுது, தமது திருக்கரத்தினுல் விரித்து ஓர் ஏட்டைப் படித்தார். அது திருநள்ளாற்றுத் தலத்தின் தேவாரத் திருப் பாடலாக அமைந்தது. நம்மை ஆட்கொள்ளும் பரமாகிய சிவமே முதற்பொருள் என்று கூறித் திருப் பதிகத்தைப் பாடியருளினுர். மன்னன் அவையில் உள்ளோர் அனைவரும் காணும்படி, அமணர் உள்ளம் வேக, அத்திரு ஏட்டை வெந்தழலில் இட்டருளினுர். ஞானசம்பந்தர் இட்ட ஏடு வேகாமல் பசுமையாக விளங்கியது.

அதனைக் கண்ட அமணர்கள், தமது சமய உண்மையை எழுதிய ஏட்டை நடுங்கிய உள்ளத்துடன் நெருப்பிலிட்டார்கள். பஞ்சு நெருப்பில் பட்டது போல் அந்த ஏடு சாம்பராயிற்று. சைவ சமயமே உண்மைச் சமயம் என்பதைக் காட்ட அது கரி (சாட்சி) யாயிற்று. ஞானசம்பந்தர்தாம் இட்ட ஏட்டை எடுத்து எல்லோருக்கும் காட்டினுர். அது முன்னையிலும் புதுமையாகவும், பசுமையாகவும் விளங்குவதைக் கண்டு யாவரும் அதிசயித்தனர். பின்னர் அதனைத் திருமுறையில் முன் இருந்தபடியே கோத்தருளினுர். மன்னன் சமணரை நோக்கி, ''நீங்கள் இட்ட ஏட்டினை எடுங்கள்'' என்ருன். அருகர் தீயினை அணுகினுர்கள். அவர்கள் இட்ட ஏடு வெந்திருப்பதைக் கண்டு அஞ்சி நின்ருர்கள். மன்னன் தண்ணீரை விட்டுத் தீயை அணைத்தான். சாம்பரையும் கரியையுமே அமணர்கள் கண்டார்கள். அதை எடுத்துப் பிசைந்து தூற்றிப் பார்க்கலானுர்கள்.

அதைப் பார்த்த மன்னன் எள்ளி நகையாடினுன். ''இந்தச் சாம்பரை இன்னும் தண்ணீரில் போட்டு அரித்துப் பாருங்கள். பொய்யை நிலை நாட்ட வந்த புல்லர்களே! ஏன் மானமின்றி நிற்கிறீர்கள்? போங்கள். வெப்பு நோய் தீர்க்க முடியாமல் தோற்றீர்கள். இப்போது அனல் வாது செய்து தோற்றீர்கள். இன்னும் நீங்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லையா?'' என்று கேட்டான்.

''முன்னே இருமுறை வாது செய்தோம். இன்னும் ஒரு முறை செய்தால் மும்முறையாகும். ஆகவே, இனி ஒன்றினுல் ஆராய்வோம்'' என்று தோற்பதிலும் ஆசை தணியாத அமணர்கள் கூறினுர்கள்.

சம்பந்தர் சமணரை நோக்கி ''இனி வேறு என்ன வாது செய்வோம்?'' என்று கேட்டார்.



எப்படிக் குளிரும்?

சென்ற நூற்ருண்டில் இங்கிலாந்து நாட்டில் ஏழைகளுக்காகப் பாடுபட்டுப் பல நன்மைகள் தேடிக் கொடுத்த மேரி ரூதில் என்ற அம்மையார் எட்டு அடி அகலமும், 10 அடி நீளமுள்ள அறையொன்றில் வாழ்ந்து வந்தார். அதுவே அவர் வேலை செய்யும் காரியாலயம், படுக்கையறை, நண்பர்களுடன் பேசுமிடம் அனைத்துமாகும். அவருடைய நண்பர் ரூரியல் லெஸ்டர் அம்மையார் ஒரு நாள் அவரைப் பார்க்கப் போன போது, குளிர் காயும் அடுப்பு மூட்டப்படாமலிருப்பதைக் கண்டு ''என்ன இந்த குளிர் மிகுந்த பருவத்திலும் நெருப்பில்லாமல் இருக்கிறீரே, கஷ்டமாக இல்லையா?'' என்று கேட்டார். அதற்கு ரூதில் அம்மையார் தமது கையை நீட்டி லெஸ்டருடைய கையைப் பிடித்துக் கொண்டு, ''என்னைத் தொட்டுப் பாரும். ஏழைகளின் துன்பங்களை நினைத்து நான் எப்போதும் கோபத்தால் தீயாக வெந்து கொண்டிருக்கும் போது எனக்கு எப்படிக் குளிரும்?'' என்று கூறினுர்.

''நீரும் நாங்களும் தத்தம் சமயப் பொருளை எழுதி ஏட்டினை ஓடும் நீரில் இடவேண்டும். இட்ட ஏடு நீர் போன வழியே ஓடாது, நீரோட்டத்தை எதிர்த்து நிற்குமாணுல் அச்சமயமே உண்மைச் சமயம்'' என்று சமணர்கள் கூறினுர்கள்.

''நல்லது. அவ்வாறே செய்வோம்'' என்று சம்பந்தர் கூறியருளினுர்.

''இந்த வாதில் தோற்ருல் தோற்றவர் என்ன செய்வது?'' என்று குலச்சிறையார் கேட்டார். கோபமும் பொருமையும் கொண்ட சமணர்கள், ''வாதில் நாங்கள் அழிவோமாயின் எம்மை இந்த மன்னவன் கழுவினில் ஏற்றட்டும்'' என்று கூறினுர்கள்.

ஞானசம்பந்தர் பீடத்தினின்றும் இறங்கி அழகிய முத்துச் சிவிகைமீது ஏறி, வைகைக் கரை சென்ருர். மன்னன் புரவி மீது ஏறிச் சென்ருன். உண்மை உணராத சமணர்கள் மயக்

கத்தின் மீது ஏறிச் சென்றார்கள். இவ்வாறு திருஞானசம்பந்தர் திருவீதியில் எழுந்தருளி வரக் கண்ட பெண்மணிகளும், ஆடவர்களும், "வேந்தன் வெப்புத் தீர்த்த சுந்தரமூர்த்தி இவர்" என்று பலவாறு பேசினார்கள். எல்லோரும் வைகை ஆற்றை அடைந்தார்கள். "பிள்ளையாரும் அருகரும் ஏடுகளை நீரில் இடுக" என்று மன்னவன் கூறினான்.

சமணர் ஏட்டில் தமது மந்திரமாகிய "அஸ்தி நாஸ்தி" என்றதனை எழுதி ஏட்டினை ஓடும் நீரில் விடுத்தார்கள். அது விரைந்து கடலை நாடிச் சென்றது. ஆற்றில் ஓடும் ஏட்டைத் தொடர்ந்து அருகரும் ஓடினார்கள். அந்த ஏடு அவர் கைக்கேயன்றி கண்ணுக்கும் எட்டாமல் அவர்களைக் காட்டாற்றில் விடுத்துச் சென்றது. அருகர்கள் அஞ்சி மீண்டு வந்து நின்றார்கள்.

ஞானசம்பந்தரின் திருக்கரத்தால் தீண்டப்பெற்று, புண்ணியத் திருநீறு பூசப்பெற்ற பாண்டியன் பண்டை வினை முழுவதும் நீங்கப் பெற்று, முதல்வனை அறியும் தன்மை எய்தினான். ஆகலினாலே திருஞானசம்பந்தர் வேந்தனையும் வாழ்த்தித் திருப்பாசுரம் பாடலானார்:

> "வாழ்க அந்தணர் வானவ ரானினம்
> வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
> ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
> சூழ்க வையகமுந் துயர் தீர்கவே"

இத் திருப்பதிகத்தைப் பாடியருளிப் பலரும் அறிய எழுதி அந்தத் திரு ஏட்டினைத் தமது திருக்கரத்தினால் வையை ஆற்றில் இட்டருளினார். மாதவர் மனம் பிறவியாற்றில் எதிரேறுவது போல் சம்பந்தர் இட்ட திரு ஏடு வையையாற்றில் நீரைக் கிழித்துக் கொண்டு பிரவாகத்துக்கு எதிராக முன்னேறிச் சென்றது. "எல்லாப் பொருளும் சிவமே" என்று எழுதும் ஏட்டில் "வேந்தன் ஓங்குக" என்று பாடியருளியதனால் திருவளர் மார்பன் அநபாயச் சோழனுடைய சிறந்து வளையாத செங்கோல் போல் பாண்டிய மன்னவனின் கூன் நிமிர்ந்தது.

ஏடு எதிரேறிச் சென்றபோது இமையவர் மலர் மழை பொழிந்தார்கள். அரசன் அற்புதமுற்று நின்றான். அமணர்கள் அஞ்சி அஞ்சலி செய்து நின்றார்கள். காற்றிலும் கடிய வேகக் குதிரை மீது ஏறிக் குலச்சிறையார் திரு ஏட்டினை எடுக்கச் சென்றார்.

இளமை மிக்க மறைச் சிறுவர் ஏடு நிற்கும்பொருட்டுத் திருப்பதிகம் பாடியருளினார். சிவபெருமான் திருக்கோயிலின் புறத்தே நீர் நடுவே சென்று அத்திரு ஏட்டினை அமைச்சர் எடுத்துக் கொண்டார்.

நீதி வழுவாத மன்னன் மந்திரியாரை நோக்கி, "வாதில் தோற்ற இச்சமணர்கள், முன்னம் ஞானசம்பந்தர் அடியார் குழாத்துடன் தங்கியிருந்த திருமடத்தில் தீங்கிழைத்தார்கள். ஆகலின் இவர்கள் ஒப்புக்கொண்டபடி கழுவில் ஏற்றி அரச நீதியை நிலைநிறுத்துக" என்றான். அரச நீதியில் குறுக்கிடாது, சம்பந்தர் திருவருளைச் சிந்தித்திருந்தார். ஞானமாதவர் திருமடத்தில் தீவைத்த எண்ணாயிரம் சமணர்களையும் குலச்சிறையார் கழுவில் ஏற்றினார்.

மதுரையில் உள்ள எல்லா மாந்தர்களும் திருநீறு அணிந்து, புனிதர்கள் ஆனார்கள். திருநீற்றின் ஒளி எங்கும் வீசியது. திருநெறி எங்கும் ஓங்கியது. திருஞானசம்பந்தர் இறைவனை வணங்கச் சிவிகையூர்ந்து திருக்கோயிலுக்குச் சென்றார். மன்னவனும் மங்கையர்க்கரசியாரும் உடன் சென்றார்கள். ஞானசம்பந்தர் திருக்கோயில் முன் சென்று சிவிகை விட்டிறங்கி, கண்கள் நீர் பொழியக் கரமலர்கள் சிரமிசை குவிய உட்சென்று பாடினார்.

"கூடற் பெருமானே! சமண் மாயையில் மயங்கிய அடியேனது பிணியைத் தணித்து ஆட்கொள்ளும் ஆளுடைய பிள்ளையாரை அளித்தருளினீர். உமது கருணையின் பெருமையை என்னென்று புகழ்வேன்" என்று துதித்தான்.

சீர்காழியில் உறைகின்ற சிவபாத இருதயர் திருமகனாருடைய செயலை அறிவதற்கு ஆவல் கொண்டார். அதனால் மதுரையை நோக்கிப் புறப்பட்டார். பாண்டி நாட்டையடைந்த அவர், மதுரைமாநகரிற் புகுந்து சொக்கலிங்கப் பெருமானையும், அங்கயற்கண்ணம்மையாரையும் வழிபட்டு மகிழ்ந்தார். பின்னர், சம்பந்தர் இருக்கும் இடத்தை வினவித் திருமடத்தைச் சார்ந்தார். திருமடத்தில் உள்ள அடியார்கள் தந்தையார் வரும் செய்தியைத் திருஞானசம்பந்தரிடம் தெரிவித்தார்கள். சம்பந்தர் உள்ளம் உவந்து எதிர்கொள்ள வந்தார். சிவபாத இருதயர் தொழுதுகொண்டே மடத்தில் நுழைந்தார். சம்பந்தர் அவரை எதிர் தொழுது வரவேற்றார். தோணியப்பரை நினைந்து உருகினார். இனிய திருப்பதிகம் பாடிப் பணிந்தார்.

கோவாவின் சரித்திரத்தில் ஓர் ஏடு



சில ரசமான நிகழ்ச்சிகள்







வி. எஸ். ஸெத்டண்கர்

1895ல் நாதாராணே புரட்சி செய்த போது கோவாவின் கவர்னர் லட்டாரி என்பவரும் அவ் வட்டத்தின் ஐரோப்பிய நிர்வாகி காப்டன் கொமெஸ் டி கோஸ்டா என்பவரும் மிகுந்த ஆத்திரம் கொண்டவர்களாய் ஒரு பாவமும் அறியாத சாமானிய மக்களைக்கூட அடக்குமுறைகளைக் கையாண்டு கொடுமைப் படுத்தினர். சூதுவாது அறியாத இம்மக்கள் புரட்சியாளருக்கு ரகசியமாக உதவுவதாகப் பழி சுமத்தித் துன்புறுத்தினர்.

இந்தச் சமயத்தில் லிஸ்பன் பாராளு மன்றத்தில் கோவானியப் பிரதிநிதியாக இருந்தவர் ரோக்கு டி கோஸ்டா. இவர் தேசப் பற்று மிக்கவர். தன்னைத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்த மக்களிடம் அன்பும் விசுவாசமும் கொண்டவர். லிஸ்பனில் இவர் ஒரு பத்திரிகை நடத்தி வந்தார். போர்ச்சுகீசிய மொழிப் பத்திரிகையில் இவர் கோவாவில் கவர்னர் ரபயெல்லும் வட்டார அதிகாரி கோமெஸ்ஸும் செய்யும் அட்டூழியங்களை அப்பட்டமாக வர்ணித்து எழுதினார். அச்சமின்றிப் பாராளு மன்றத்திலும் உண்மைகளை உடைத்துச் சொன்னார். இவற்றின் பயனாக லிஸ்பனில் மக்கள் விழிப்புற்றனர். மன்னரும் சினந்து, ஒரு தந்தி மூலம் கவர்னர், வட்டார அதிகாரி ஆகிய இருவரையும் பதவி நீக்கம் செய்து லிஸ்பனுக்குத் திரும்ப அழைத்தார். இதை அடுத்துச் சீக்கிரமே புரட்சியாளருடன் கோவாவில் சமாதானம் ஏற்பட்டு அமைதி நிலவிற்று.

சில தினங்கள் சென்றன. ஒரு நாள் கோவானியப் பிரதிநிதி ரோக்கு, காலையில் உலாவச் சென்றார். லிஸ்பன் நகரின் சந்தடியற்ற ஓரிடத்தில் அவரை ரபயெல் டி அன்டிராடியும், கொமெஸ் டி கோஸ்டாவும் சுற்றி வளைத்துக் கொண்டார்கள்: இவர்களில் ஒருவர் ரோக்குவிடமிருந்து கைத்தடியைப் பறித்துக் கொண்டார். மற்றவர் அவரை நையப் புடைக்கத் தொடங்கினார். ரோக்கு பின் வாங்குவது போல் நகர்ந்து சென்று சட்டென்று தமது கால் சராய்ப் பையிலிருந்து துப்பாக்கியை எடுத்தார். அவர் மூன்று முறை சுட்டார். ஒரு தோட்டா கோமெஸின் காலிலும் மற்றொன்று கையிலும் பாய்ந்தது. மூன்றாவது குறி தப்பித் தரையைத் தாக்கியது.

காயமுற்று விழுந்த கோமெஸ் பின்னால் ரோக்கு மீது வழக்குத் தொடுத்தார். தம்மை அவர் சுட்டுக் கொல்ல முயன்றதாகப் பழி சுமத்தி.

மூன்று ஐரோப்பிய நீதிபதிகள் வழக்கை விசாரித்து ஏகமனதாக, கோவானியப் பாராளுமன்றப் பிரதிநிதி மீது குற்றம் ஏதும் ருசுவாகவில்லை என்றும் தற்காப்புக்காக மட்டுமே அவர் சுடநேர்ந்தது என்றும் தீர்ப்பு வழங்கி அவரை விடுதலை செய்தனர்.

2

இந்நிகழ்ச்சிக்குச் சில மாதங்கள் முன்னதாக மற்றொரு சுவையான சம்பவம் கோவாவில் நடந்தது.

ராணேக்களின் புரட்சியை யொட்டி போர்ச்சுகீசிய அதிகாரிகள் செய்த அநீதிகள் அக்கிரமங்கள் ஆகியவற்றைக் கோவாவிலேயே நடந்த மற்றொரு போர்ச்சுகீசியப் பத்திரிகையும் தைரியமாக எடுத்துரைத்தது. இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் ஒரு கோவானியப் பாதிரி. பெயர் அல்வாரெஸ். முன்னர் குறிப்பிட்ட கொமெஸ்டி கோஸ்டாவைப் பற்றியும் அவர் இழைத்த கொடுமைகள் குறித்தும் பாதிரி துணிந்து உண்மைகளை எழுதினார். இதனால் ஆத்திரமடைந்த கொமெஸ் பாதிரியைப் பிடித்துக் கொண்டு வருமாறும் சிறையில் தள்ளுமாறும் கட்டளையிட்டான். வழக்கு நடந்தது. தேசத் துரோகமான சதிச் செயல்களில் பாதிரி ஈடுபட்டிருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டார்.

பஞ்சிம்மில் வழக்கை விசாரித்த ஐரோப்பிய நீதிபதி மெனிஸெஸ் நடுநிலையாளர்; நகைச்சுவையும் மிக்கவர். "சதிச் செயல்களின் வாடை காற்றிலே கலந்திருக்கிறதோ என்னமோ; அதை நுகரமுடியாதபடிக்கு எனக்கு ஜலதோஷம் பிடித்திருக்கிறது; அதனால் பாதிரியாரை விடுதலை செய்கிறேன்!" என்றார் அந்த நேர்மை தவறாதவர்.

3

பிரிட்டிஷ் இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கம் 1921ல் தீவிரமடைந்த போது, அந்தப் புரட்சியின் வேகம் கோவாவிலிருந்த பல ஹிந்து மாணவர்களையும் பற்றிக் கொண்டது.

பஞ்சிம்மில் இருந்த ஒரு போர்ச்சுகீசியக் கல்லூரியில் ஹிந்து மாணவர்கள் பலர் காந்திக் குல்லாயுடன் தோன்ற ஆரம்பித்தார்கள். இக்கல்லூரியின் துணை பிரின்ஸிபல் ஒரு கோவானிய கிறிஸ்துவர். மாணவர்களின் இச்செயலால் அவர் தீமைகள் பல விளையும் என்று நம்பினார். தடை உத்தரவு பிறப்பித்து விட்டார் காந்திக் குல்லாய்க்கு. ஆனால் ஐரோப்பியரான பிரின்ஸிபலும் மற்ற

ஐரோப்பியப் பேராசிரியர்களும் காந்திஜியிடம் மாணவர்கள் காட்டிய இந்த மதிப்பையும் மரியாதையையும் அனுதாபத்துடன் நோக்கினார்கள். துணை பிரின்ஸிபலிடம் பேசி அவர் தமது உத்தரவை ரத்து செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். அவரும் மனம் மாறி அக்கோரிக்கைக்கு இணங்கினார்.

4

இந்தியாவில் உள்ளது போலவே கோவாவிலும் ஆதிவாசிகள் பலர் உண்டு. இவர்களை கவ்டே என்பார்கள். இவர்கள் விவசாயப் பண்ணைகளில் கூலி வேலை செய்து பிழைப்பார்கள். எழுத்தறிவோ பகுத்தறிவோ அதிகமில்லாத இவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கிறிஸ்துவர்களாக மதமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். எனினும் இவர்கள் ஆதிவாசிகளின் பரம்பரை வழக்கப்படியே வாழ்ந்து வந்தனர். இந்த கவ்டேக்களை மீண்டும் ஹிந்து மதத்துக்கு மாற்ற வேண்டும் என்பதாக ஓர் இயக்கம் தோன்றியது 1928ல். கூடவே இது தீவிர எதிர்ப்பையும் தோற்றுவித்தது. கோவாவிய கிறிஸ்துவர்கள் இதைக் கண்டித்துப் பத்திரிகைகளில் எழுதினார்கள். ஹிந்துக்களாக மதம் மாற்றப்படுவதைச் சட்டபூர்வமாகத் தடுக்க வழிசெய்ய வேண்டும் என்று ஆர்ப்பரித்தார்கள்.

அப்போது கோவாவில் போர்ச்சுகீசிய கவர்னராக இருந்தவர் மனாயேல் டி அமொரிம் என்பவர். இவர் இது குறித்துப் பின்வருமாறு மொழிந்தார்: ''போர்ச்சுகீசியக் குடியரசு மதம் சம்பந்தப்பட்ட வரையில் நடுநிலை வகிக்கிறது. போர்ச்சுகீசியக் குடியரசின் பிரதிநிதி என்ற முறையில் மட்டுமின்றி நாகரிகம் அறிந்த மனிதன் என்ற முறையிலும் சொல்லுகிறேன் — போர்ச்சுகீசிய ஆளுகைக்கு உட்பட்டுள்ள இந்தியாவில் மக்களின் மத சுதந்திரத்துக்கு எந்தவிதமான பங்கமும் நேராமல் பாதுகாப்பது என் தலையாய கடமையாகும்.''

1928ல் மொத்தம் 8000 கவ்டேக்கள் ஹிந்துக்களாக மதம் மாறினர். அன்றுவரை கோவாவிய சரித்திரம் கண்டிராத வகையில் பெரிய அளவில் இப்படி மதமாற்றம் நிகழ்ந்த போதிலும், கிறிஸ்துவர்கள் அச்சமயத்தில் காட்டிய எதிர்ப்பு மிக அமைதியான முறையில், சட்டத்துக்கு உட்பட்ட சாத்வீக முறையில் இருந்தது என்பதற்காக அவர்களைச் சரித்திரம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

கூலி இன்றி வேலை



ஆபிரகாம் லிங்கனுக்குப் புத்தகம் படிப்பதில் ஆர்வம் மிகுதி. ஆனால் அவருடைய இளமைக் காலத்தில் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்க அவருக்கு வசதி இல்லாததால், நண்பர்களிடம் இரவல் வாங்கிப் படிப்பார். ஒருமுறை ''வாஷிங்டனின் வரலாறு'' என்னும் புத்தகமொன்றைத் தம்முடைய பணக்கார நண்பர் ஒருவரிடம் இரவல் கேட்டார். பன்முறை அந்தப் புத்தகத்தை திருப்பித் திருப்பிப் படித்தார். ஒரு நாள் இரவு அதைப் படித்துவிட்டு சுவர் ஓரமாக வைத்துவிட்டுத் தூங்கிவிட்டார். அன்று இரவில் பெய்த மழை மதில் சுவரை நனைத்ததுடன் புத்தகத்தையும் நன்றாக நனைத்துவிட்டது. லிங்கன் மனம் கலங்கினார். அதை அப்படியே திருப்பித் தர அவருக்கு மனம் இல்லை. புதிதாக வாங்கித் தரலாமென்றாலோ கையில் பணம் இல்லை. எனவே அதை இலேசாக அனலில் காட்டி உலர்த்தினார். காய்ந்ததும் அதை நண்பரிடம் கொடுக்கச் சென்றார். புத்தகத்தை இரவல் தந்த நண்பரிடம் செல்வச் செருக்கும் முன் கோபமும் மிகுந்திருந்தன. ''இரவல் புத்தகத்தைக் காக்கும் முறை இதுதானோ'' என லிங்கனைக் கடிந்துரைத்தார். ''எனக்கு வேறு புத்தகம் வேண்டும், இல்லையேல் இதற்கு ஈடாக ஏதேனும் தர வேண்டும்'' என மிரட்டினார். பாவம் லிங்கன்! தம்முடைய ஒரே சொத்தான உழைப்பையே ஈடுதர முடிவு செய்தார். மூன்று நாட்கள் நண்பர் நிலத்தில் கூலி இல்லாமல் உழைக்க ஒப்புக் கொண்டார். லிங்கன் கூலி இன்றி வேலை செய்தும் கூடப் பிறர் பத்து நாட்களில் செய்யக் கூடிய வேலையை மூன்று நாட்களில் செய்து முடித்தார். இதனை அறிந்த பலர் லிங்கனின் நேர்மையையும் உழைப்பார்வத்தையும் பாராட்டினர்.

ஆதாரம்: ''முன்னேற்றப் பாதை,''
தகவல்: மு. தியாகராசன்

புதியது!

வசதியானது

வைட்டமின் ஸி செறிந்துள்ள

இனிப்பான பானம்!



நாளுக்கான வாழ்க்கைச் சுவைக்க இன்றைய நவீன வழி பால்டாப். அது அலாதியான சுவையுள்ள இனிப்பு பானம். பாட்டில்கள் இல்லை. சேமிப்புத் தொல்லைகளும் இல்லை. ஒரு தம்ளர் குளிர்ந்த நீரில் ஒரு பால்டாப் வில்லையைப் போட்டாலே போதும்! தயாராகிவிடும்! புத்துணர்ச்சியூட்டும் பானம்! அதி உன்னதம்!

மறவாதீர்கள், சர்க்கரை கலவாத பால்டாப். உடம்பைப் பெருக்கவைக்கும் தாதுப்பொருள்கள் இல்லாதது. அருந்தி, அருந்தி, மகிழுங்கள் ஆசை தீர!

பால்டாப்

இனிப்பான பான வில்லைகள்

எல்லா முக்கிய கடைகளிலும் கிடைக்கிறது

உங்கள் நம்பிக்கைக்குகந்த Boots பூட்ஸ் தயாரிப்பு

HAS 1454

முள்ளும் மலரும்

உமாசந்திரன்

முதல் பரிசு நாவல்

கொட்டகைத் தோட்டத்திலிருந்து கூடை நிறையத் தக்காளிப் பழங்களைப் பறித்து நிரப்பி ஒரு பக்கமாக வைத்து விட்டுக் காளியண்ணனின் அருகே வந்து நின்றாள் மங்கா.

எங்கோ பார்த்தவாறு காளியண்ணன் கேட்டான். ''கலியாண ஊர்கோலத்தைப் பார்க்கத்தான் காத்திருக்கேல்லே ?''

''பாக்கக் குடுத்து வைக்கணுமே ! எங்க வள்ளியக்கா மனசு போலே அவளுக்கு மாங்கலியம் கிடைச்சும் கலியாண ஊர்கோலம் நடத்திப் பார்க்கலேயேங்கிற கொறை எனக்கு இருக்காதா ?''

''அந்தக் கொறையை இப்பத் தீத்துக்கப் போறே. அப்படித்தானே? நல்லாத் தீத்துக்க, நல்லாத் தீத்துக்க!''



மங்கா கலகலவென்று சிரித்தாள்.

''புது மாதிரியான ஊர்கோலமாத் தான் இருக்கும் இது.''

''ஆமாமாம். கலியாணமே புது மாதிரியாத்தானே நடந்திச்சு. ஊர் கோலமும் புது மாதிரியாத்தானே இருக்கணும்!'' என்றான் காளி.

''நான் ஒண்ணு செய்யட்டுமா ?'' அந்த ஊர்கோல ட்ராலிக்குப் பூமாலைத் தோரணம் கட்டணும்னு தோணுது.''

''கட்டேன்.''

சரசரவென்று மங்கா அங்கங்கே மரம் செடிகளில் பூத்திருந்த மலர் களையும் இலைகளையும் பறித்துச் சில நிமிஷங்களுக்குள்ளேயே ஒரு பூமாலைத் தோரணத்தைக் கட்டியெடுத்து வந்து விட்டாள். சரிவில் இறங்கிச் சென்று ட்ராலி முகப்பில் எடுப்பாக அதைக் கட்டிவிட்டு வந்ததும் அவள் மகிழ்ச்சி யுடன் அதன் அழகைப் பார்த்துக் கைகொட்டினாள்.

''எப்படி இருக்கு இப்போ?''

'' கண்கொள்ளாக் காட்சியா யிருக்கு.''

''ட்ராலிக்கே ஒரு கலியாணக் களை வந்திடலே ?''

''பொருத்தமான களை!''

சட்டென்று மங்கா காளியண்ணன் பக்கம் திரும்பினாள். காளியண்ணன் வேறெங்கோ சூனியத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

''அட, ஏன் எங்கேயோ பாத்துக் கிட்டிருக்கே? ட்ராலிக்கு நான் செய் திருக்கிற அலங்காரத்தைப் பாரேன்!''

''இப்ப என்ன நமக்கா கலியாண ஊர்கோலம்?'' என்றான் காளி வறண்ட சிரிப்புடன்.

''மூஞ்சியைப் பாரு !'' என்று முகத்தைத் தோளில் இடித்துக்கொண் டாள் மங்கா. பின்பு ஒரு பெருமூச் சுடன் கேட்டாள். ''ஏய்யா, வள்ளி யக்கா நம்மையெல்லாம் விட்டுப் போயிடப் போகுதேன்னு நெனைச்சா இப்படிப் பித்துப் பிடிச்சாப்பலே உட் காந்திருக்கே?''

காளியண்ணன் ஒரு பதிலும் சொல்ல வில்லை.

''அந்த வருத்தம் எனக்கு மட்டும் இல்லையாய்யா! ஆனா அதைப் பாராட் டிக்கிட்டிருக்க இதுவா நேரம்? நாம சந்தோசமா அவங்களை வழியனுப்பி னாத்தானே வள்ளியக்கா சந்தோஷமா யிருக்கும் !''

''சந்தோஷமாத்தான் வழியனுப்பப் போறேன்.''

''அதைக் கொஞ்சம் சிரிச்ச முகத் தோடதான் சொல்லேன்.''

''சிரிக்கிற நேரம் இன்னும் வரலியே.''

''என்னய்யா நீ? புதிர் போடறாப்பலே பேசினா எனக்குப் புடிக் காது. தெரியுமில்லே?''


''அவங்களை வழியனுப்பும் போதுதானே சிரிக்கணும். இப்பவே சிரிச்சிட்டா அப்போ பாக்கி இருக்காதே!''

மங்கா அவனைக் கனிவுடன் பார்த்தாள்.

''விசித்திரமான ஆளய்யா நீ. உன்னை மொரடு மொர டுன்னு எல்லாரும் சொல்றாங் களே. உனக்கு எவ்வளவு இளகின மனசு இருக்குன்னு தெரிஞ்சா அப்படிச் சொல்லு வாங்களா ! உன் பேச்சை மதிக்காம தங்கச்சி நடந்துக் கிட்டதைப் பத்தி நீ கொஞ்சம் கூடக் கோவப்படலே. அது உன்னைப் பிரிஞ்சு போயிடப் போகுதேன்னு தவியாத் தவிச் சுப் போறே.''

''என் தவிப்புக் கெல்லாம் சீக்கிரமே முடிவு வரத்தான் போகுது'' என்றான் காளி வெறித்த நோக்குடன் சூனியத் தைப் பார்த்தவாறு.

''போய்யா, உன் வருத்த மும் நீயும். எதுக்கய்யா வருத் தப்படணும்? உன் தங்கச்சி எங்கேயாவது காட்டுக்கா போயிடப் போகுது! தெய்வம் மாதிரி ஒரு புருசனோடே சீரும் சிறப்புமா வாழப் போகுது. அதை நெனைச்சு சந்தோஷப் படறதுக்கில்லாம வேண்டா ததை யெல்லாம் நெனைச்சு ஏனய்யா மனசைக் கெடுத்துக் கிடணும்? எனக்கு இப்படி யெல்லாம் வருத்தப்படத் தெரியாதய்யா. வள்ளியக்கா



வைப் பிரியும்போது என் கண்ணிலே சொட்டுக் கண்ணீர்கூட வராது. சிரிப்பைத் தவிர வேறெதையும் வள்ளியக்கா என் மொகத்திலே பார்க்க முடியாது.'' — இவ்வாறு குதூகலமாகக் கூறிக்கொண்டே மங்கா மீண்டும் மாலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த ட்ராலியைப் பார்த்தாள்.

''அந்த ட்ராலியைப் பார்த்தாலே ஆனந்தமாயிருக்கு. அவங்க ரெண்டு பேரும் அதிலே உக்காந்து போறதைப் பாத்தா இன்னும் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்!'' என்றாள் மகிழ்ச்சிப் பெருக்கில் பூரிப்புடன் சிரித்தவாறு.

''ஆமாம். கலியாண ஊர் கோலம். கலியாண ஊர் கோலம்'' என்று சிரித்தான் காளியண்ணன்.

''ஆ.... இப்பத்தானய்யா நல்லாயிருக்கு. நல்லா மனம் விட்டுச் சிரிய்யா!'' என்றாள் மங்கா.

ஜீப் வரும் சத்தம் கேட்டது. குமரனே ஜீப்பை ஓட்டிக் கொண்டு வந்து அத்திமர மேட்டருகே நிறுத்தினான். பூரிப்பே உருவாக வள்ளி மட்டும் அவனருகே உட்கார்ந்திருந்தாள்.

''அவர்கள் இன்னும் வரவில்லை. சீக்கிரமே வந்து விட்டால் அவர்களைப் பவர்ஹவுஸுக்கே வரச் சொல்லும்படி காவல்கார ஆளிடம் சொல்லி விட்டு வந்து விட்டோம்'' என்று கூறிக் கொண்டே ஜீப்பிலிருந்து இறங்கிய குமரன் வள்ளி இறங்குவதற்கு உதவி செய்தான். புதுப் பட்டாடை உடுத்தி இன்ப வடிவமாகக் காட்சியளித்தாள் வள்ளி. அவளது வாழ்வின் பொக்கிஷ



மான கழுத்தாரம் அவளது கழுத்தில் துலங்கிக் கொண்டிருந்தது.

''அக்கா, உனக்கு ஆலத்தியெடுத்து திருஷ்டி சுத்திக் கொட்டணும் போல இருக்கு'' என்று குதூகலத்துடன் கூறிக் கொண்டே அவளைக் கட்டி முத்தமிட்டாள் மங்கா.

வள்ளி காளியண்ணனைப் பரிவுடன் பார்த்தாள். ''ஏண்ணே, உனக்குத் தான் டூட்டி இல்லையே, எங்களை வழியனுப்பறதுக்காக நீ வரணுமா?'' என்று கேட்டாள்.

''இதைவிடச் சந்தோஷமான வேலை எனக்கு வேறென்ன இருக்க முடியும் வள்ளிக்குட்டி?'' என்றான் காளியண்ணன்.

''அந்தச் சந்தோஷத்தை மொகத்திலேயும்தான் கொஞ்சம் காட்டேன்!'' என்றாள் மங்கா.

''பாவம், என்னைப் பிரியணுமேன்னு நெனைச்சு அண்ணன் ஓரேயடியா மாஞ்சு போகுது. வள்ளிக்குட்டின்னு உசிராச்சே அதுக்கு. நான் எல்லா விதத்திலேயும் அதிர்ஷ்டசாலி'' என்று தழுதழுப்புடன் கூறிய வள்ளி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''காளி, நேரமாகி விட்டது. கீழே அவர்கள் காத்திருப்பார்கள். நாங்கள் சீக்கிரம் இங்கிருந்து புறப்படுகிறோம்'' என்று கூறியவாறு ட்ராலி பக்கம் திரும்பிய குமரன், ''அடடே!.... ட்ராலிக்கு இந்த அலங்காரமெல்லாம் யாரு செய்தாங்க?'' என்றான் வியப்புடன்.

''அதெல்லாம் நான்தான் கட்டினேன் வள்ளியக்கா. உனக்குப் பூன்னு ரொம்பப் புடிக்குமே!'' என்று சிரித்தாள் மங்கா.

''மங்கா, மங்கா, உனக்குத்தான் எம் மேலே எவ்வளவு ஆசை!'' என்று அவளைக் கட்டிக் கொண்டாள் வள்ளி.

''கலியாண ஊர்கோலம். கலியாண ஊர்கோலம்'' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டு சிரித்தவாறு ட்ராலியின் தடுப்புக் கட்டைகளை அகற்றிவிட்டு உடும்புக் கொட்டகையை நோக்கி விரைந்தான் காளியண்ணன்.

வள்ளியும் குமரனும் ட்ராலியில் அமர்ந்ததும் உடும்புக் கொட்டகையில் மணி ஒலித்தது. காளியண்ணன் விசையை அழுத்தியதும் ட்ராலி மெதுவாக நகர ஆரம்பித்தது. உவகை பொங்கும் நெஞ்சுடன் அந்தக் காட்சியைப் பார்த்தவாறு நின்றிருந்தாள் மங்கா. ஒரு வளைவில் திரும்பி ட்ராலி கண்ணுக்கு மறையும் வரை அந்த இடத்தை விட்டு அவள் அசையவில்லை.

திடீரென்று உடும்புக் கொட்டகையிலிருந்து அதென்ன சத்தம்? ''மடேர், மடேர்!'' என்று சம்மட்டியால் எதையோ அடிக்கும் சத்தம்! திடுக்கிட்டாள் மங்கா. ''வள்ளியண்ணே, வள்ளியண்ணே'' என்று கத்திக்கொண்டே உடும்புக் கொட்டகையை நோக்கி ஓடினாள். அங்கே அவள் கண்ட காட்சி அவளைத் திகைத்து நிற்கச் செய்தது.

காளியண்ணன் ஒற்றைக் கையில் பிடித்த சம்மட்டியால் ஓங்கி ஓங்கிக் காப்பு வளையத்தைத் தாக்கிக் கொண்டிருந்தான்.

''வள்ளியண்ணே... இதென்ன..... இதென்ன......?'' என்று கத்தினாள் மங்கா.

''சிரிக்கிற நேரம் வந்திடுச்சு மங்கா, சிரிக்கிற நேரம் வந்திடுச்சு'' என்று அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டே சம்மட்டியால் ஓங்கி ஓங்கி அடித்தான் காளியண்ணன்.

காப்பு வளையம் சட்டென்று கழன்று ஒதுங்கியது. பிடிப்பு நீங்கிய உருளை வேகமாகச் சுழன்றது. பொல பொல வென்று கட்டவிழ்ந்த உருக்குக் கயிறு கன வேகமாகக் கீழ் நோக்கிப் பாய ஆரம்பித்தது. எக்காளமிட்டுச் சிரித்த காளியண்ணன் சம்மட்டியை ஒரு பக்கமாக வீசி எறிந்தான்.

விசையருகே சிவப்பு விளக்கு எரிந்ததை மங்கா திகைப்புடன் பார்த்தாள். உருளையின் சுழற்சியைப் பார்த்தாள். உருக்குக் கயிற்றின் அசுரவேகத்தைப் பார்த்தாள். எல்லாவற்றுக்கும் மேல் காளியண்ணனின் அந்தக் கோரச் சிரிப்பு!

''வள்ளியண்ணே.... என்ன செய்திட்டே! ஓரேயடியா அவங்களை வழியனுப்பத்தான் இட்டம் போட்டிருந்தயா?'' என்று கூச்சலிட்டாள்.

''கலியாண ஊர்கோலம். அருமைத் தங்கச்சிக்கு அழகான ஊர்கோலம்!'' என்று வெறிச் சிரிப்புச் சிரித்தான் காளியண்ணன்.

''ஐயோ, அதை நிறுத்திடு. நிறுத்திடு!'' என்று திகிலுடன் கூவியவாறு வேகமாக அவிழ்ந்து செல்லும் உருக்குக் கயிற்றைக் காட்டினாள் மங்கா.

''அதை நிறுத்த முடியாது மங்கா. யாராலேயும் நிறுத்த முடியாது. அவங்க தலைவிதியை இனிமேல் யாராலேயும் தடுக்க முடியாது!'' என்று கத்தினான் காளி.

''இல்லே, இல்லே. அதுக்கு ஒரு நாளும் விடமாட்டேன்'' என்று பதறிய மங்கா முன்னே பாய்ந்து உருக்குக் கயிற்றை இரு கைகளாலும் பிடித்து இழுக்க முயன்றாள்.

யம பாசம் போல் உருக்குக் கயிறு அவன் கைகளை அறுத்துக் கொண்டு பாய்ந்தது. கைகளிலிருந்து உதிரம் பீரிட்டது.

''மங்கா, விட்டுடு. உன்னுலே முடியாது. அது உன்னையே இழுத்திடும்!'' என்று கத்தினுன் காளி.

''பாவி, என் உயிரே போனுலும் சரி.... இதை நிறுத்தாம விடமாட்டேன்'' என்று கத்திய மங்கா உருக்குக் கயிற்றுக்கும் உருளைக்கும் குறுக்கே பாய்ந்தாள். உருக்குக் கயிற்றின் வேகம் அவளையும் சேர்த்து இழுத்து உருளையோடு மோதியது. ''வள்ளியக்கா, வள்ளியக்கா!'' என்ற ஓலம் மங்காவின் நெஞ்சிலிருந்து எழுந்தது.

''ஐயோ மங்கா, என்ன காரியம் செய்திட்டே!'' என்று அலறிய காளி தானும் அவளை விடுவிப்பதற்காகப் பாய்ந்தான். உருக்குக் கயிறு அவனையும் சேர்த்திழுத்து உருளையில் மோதியது.

''மங்கா, மங்கா!'' என்று கதறியவாறு அவள் உடலைத் தழுவினுன் காளி.

கட்டவிழ்ந்த உருளை அந்த இரு உடல்களால் தடைப்பட்டு மேலே சுழல முடியாமல் சட்டென்று நின்றது. அதே சமயம் அங்கு ஓடிவந்தனர் சபேசனும் கனகாவும்.

''ஐயோ, இதென்ன?'' என்று கத்தினுள் கனகா.

சபேசன் திகைப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தான். விசையருகே சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நொடிப் பொழுதில் நிலைமையைப் புரிந்து கொண்ட சபேசன் கழன்று ஒதுங்கியிருந்த காப்பு வளையத்தைச் சம்மட்டியால் அடித்து உருளையுடன் பொருத்தினுன். மறைகளைத் தேடியெடுத்துக் காப்பு வளையத்தில் வைத்து முடுக்கிச் சரி செய்தான்.

உருக்குக் கயிற்றைப் பின்னுக்கு இழுக்கும் விசையைச் சபேசன் அழுத்தியதும் உருக்குக் கயிறு மெதுவாய்ச் செல்ல அதன் அசுர அணைப்பில் சிக்கிய இருவரது உடல்களும் மெதுவாக விடுபட்டன. சபேசனும் கனகாவும் அந்த உடல்களைத் தாங்கிச் சென்று ஒரு பக்கமாகத் தரையில் கிடத்தினர்.

''எப்படி இந்த விபத்து நேர்ந்ததென்று தெரியவில்லையே!'' என்று பதறினுள் கனகா.

''விபத்து இல்லை கனகா. காளியண்ணனின் பழி வாங்கும் திட்டம் தான் இந்த விபத்தில் வந்து முடிந்திருக்கிறது'' என்றுன் சபேசன்.

''இருவருக்கும் மூச்சு வந்துகொண்டிருக்கிறது'' என்றுள் கனகா.

ஒரு மூலையிலிருந்த வாளித் தண்ணீரை யெடுத்து இருவர் முகத்திலும் தெளித்தான் சபேசன்.

வர்ண ஜாலங்கள் — விடைகள்

1. ஆ. குழந்தைகளும், பழங்காலத்தவர்களும் தூய நிறங்களின் மேலே ஆசை வைக்கின்றனர். குழந்தைகள் முதலில் விரும்புவது சிவப்பு. கடைசி ஸ்தானம் நீல நிறத்துக்கு. ஆறு வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகள் எப்போதும் சிவப்பு வர்ணத்தையே தேர்ந்தெடுக்கின்றனர்.

2. ஆ: வர்த்தகம் மற்றும் தொழில்துறையினர் 5,00,000 வர்ணங்களை இனம் பிரித்திருக்கின்றனர்.

3. இ: பிரிட்டிஷ் வர்ண சங்கத்தாரின் முடிவுப்படி மஞ்சள் வர்ணம்தான் கவர்ச்சிகரமானது. எளிதில் கண்களைக் கவரவல்லது.

மஞ்சள் கண் பார்வையில் சீக்கிரம் படக்கூடியது என்பதாலேயே டாக்ஸிகளுக்கு மஞ்சள் நிறம் அடிக்கிறார்கள். தொழிற்சாலைகளில் இயந்திரங்களில் நீட்டிக் கொண்டிருக்கும் பாகங்களுக்கும், தாழ்வான உயரத்தில் உள்ள இரும்பு பீம்களுக்கும் மஞ்சள் வர்ணம் அடிக்கின்றனர். தெருக்களில் நடுவே போடப்பட்டிருக்கும் கோடும் மஞ்சள் நிறத்ததே.

4. ஆ: நீலம்தான் மிகவும் குளுமையான நிறம். ஐரோப்பிய மருத்துவமனை ஒன்றில் உயர் இரத்த அழுத்தமுள்ளவர்களது அறைக்குச் சிவப்பு நிறமும் உபயோகிக்கின்றனர். மன நோயாளர் உள்ள அறைக்கு ஒருவித மஞ்சள் நிறம் உபயோகப்படுத்தப்படுகிறது.

5. ஆ: சுவர்கள் பச்சை நிறத்ததாக இருக்க வேண்டும். நீங்கள் சிவப்பு வர்ணத்தை உற்று நோக்கிவிட்டுப் பின்னர், வெள்ளை சுவரை நோக்கினுல் அங்கு பச்சை நிறத்தைக் காண்பீர்கள். இதற்குப் 'பின் பிரதிபிம்பம்' என்று பெயர்.

அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவர் செந்நிற இரத்தத்தைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டுப் பின்னர் தம்முடைய பார்வையைச் சுவற்றின் பக்கம் திருப்பினுரானுல் பச்சை பின் பிரதிபிம்பத்தைக் காண்பார். சுவர் பச்சை நிறமாகவே அமைந்திருந்தால் பச்சை பின்பிரதிபிம்பம் தோன்ற இடமிராது. எனவே, மீண்டும் சிவப்பு இரத்தத்தைக் காண்கையில் பார்வை விரைவில் பழைய நிலைமைக்குத் திரும்பி விடும்.

ஆதாரம்: சயன்ஸ் டைஜஸ்ட்

தகவல்: மங்களா சக்ரபாணி

அதே சமயம் "என்ன நடந்தது?" என்ற கூச்சலுடன் பர பரப்பும் திகிலுமே உருவாகக் குமரனும் வள்ளியும் உள்ளே ஓடிவந்தனர்.

கீழே கிடத்தப்பட்டிருந்த இருவரது உடல்களையும் பார்த்ததும் வள்ளி, "ஐயோ அண்ணே, மங்கா, ஏன் இப்படி!" என்று கூறிக் கொண்டே அவர்களருகே குனிந்தாள்.

குமரன் திகைப்புடன் கூறினான் :

"ஒன்றுமே புரியவில்லையே! முதலில் சில நிமிஷங்களுக்கு ட்ராலி சாதாரண வேகத்துடன்தான் போய்க் கொண்டிருந்தது. பிறகு திடீரென்று கட்டவிழ்த்துக் கொண்டது போல் கீழ் நோக்கிப் பாய ஆரம்பித்தது. எங்கள் முடிவு காலம் வந்து விட்டதென்றே நினைத்துக் கொண்டோம். ஏதாவது பாறையில் மோதிச் சிதறிப் போக வேண்டியதுதான் என்ற திகிலுடன் பீதியடைந்து ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டோம். திடீரென்று ட்ராலி அச்சுப் போட்டாற் போல் நின்று விட்டதும்தான் எங்களுக்கு உயிர் வந்தது. கீழே குதிக்க வசதியில்லாமல் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ட்ராலியிலேயே உட்கார்ந்திருந்தோம். பின்புதான் ட்ராலி மெதுவாக மேல் நோக்கி நகர ஆரம்பித்தது. திடீரென்று ஏற்பட்ட கோளாறு எதையோ காளியண்ணன் சாமர்த்தியமாகச் சமாளித்து எங்களைக் காப்பாற்றி விட்டான் என்ற மகிழ்ச்சியுடன் மேலே வந்து சேர்ந்தோம். ஆனால் இங்கே வந்து பார்த்தால்..."

"அண்ணே, மங்கா, கண்ணைத் திறந்து பார்க்க மாட்டீங்களா?" என்று கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தாள் வள்ளி.

அவளுடைய கதறல் காளியண்ணனின் செவிகளில் தாக்கியது போலும்! அவன் மெதுவாக கண்களைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் உதடுகள் அசைந்தன.

"வள்ளிக்குட்டி, உனக்கு நான் பெரிய துரோகம் நினைச்சிட்டேன். நீ என்னை மதிக்கலேங்கிற கோவத்திலே உங்க ரெண்டு பேரையுமே ஒரேயடியா தீர்த்துக் கட்டறதுக்குத் திட்டம் போட்டுட்டேன். மங்காதான் உயிரைக் கொடுத்து உங்களைக் காப்பாத்திச்சு!" அவன் வாயிலிருந்து வந்த வார்த்தைகளைக் கண்களில் நீர் ஆறாகப் பெருகக் கேட்டுக் கொண்டிருந்தாள் வள்ளி. மங்காவின் பக்கம் பாய்ந்து அவள் உடலைத் தழுவிக் கொண்டு "ஐயோ, மங்கா, என் மேலே உயிரையே வச்சிருந்தயே. நானே உன் உயிருக்கு யமனாயிட்டேனே!" என்று கதறியவாறு அவள் தலையைத் தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டாள்.

மங்காவின் கண்கள் லேசாகத் திறந்தன. தெய்வீகமான புன்னகை அவள் இதழ்களில் மலர்ந்தது. வள்ளியை ஆவிசேர அணைத்துக் கொள்ள அவள் தன் கைகளை உயர்த்தினாள். அதே கணத்தில் அவளது ஆவி பிரிந்தது.

இதயமே வெடித்துவிடுவது போல் விம்மியவாறு, "மங்கா, மங்கா!" என்று அலறினாள் வள்ளி.

காளியண்ணனின் ஆவியும் இப்போது பிரியும் தறுவாயில் இருந்தது. "வள்ளிக்குட்டி, அளவுக்குமீறி உன் கிட்டே பாசம் வச்சிருந்தேன். அதனாலேயேதான் நீ என்னை மதிக்கலேங்கிற ஆத்திரம் அளவுக்கு மீறிப் போயிட்டுது. நான் மிருகமாயிட்டேன். மங்காவோட உயிர்த் தியாகம் என்னை மறுபடியும் மனுஷனாக்கிடுச்சு. நான் இப்ப மனுஷனாகவே மங்காவைத் தொடர்ந்து போறேன். கௌரியம்மன் சக்தியுள்ள தெய்வம்தான். அந்தத் தெய்வம்தான் மங்காவா வந்து உங்களைக் காப்பாத்திச்சு. நீங்க ரெண்டு பேரும் எங்களுக்காக வருத்தப்படாதீங்க. சந்தோஷமாயிருங்க! சந்தோஷமாயிருங்க!" அவன் குரல் மெதுவாகத் தேய்ந்தது. அவன் கண்கள் தாமாகவே மூடிக் கொண்டன.

"அண்ணே, மங்கா!" என்று முகத்தை இரு கைகளாலும் மூடிக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்வள்ளி.

மற்ற மூவரும் கண் கலங்க நின்று கொண்டிருந்தனர்.

வெளியே அத்திமரக் கிளையில் உட்கார்ந்திருந்த அக்காக் குருவியொன்று, "அக்கா, அக்கா!" என்று எழுப்பிய குரல் தெய்வமாகி விட்ட மங்காவின் ஆவி போல் காற்றில் மிதந்து வந்து வள்ளியின் காதில் ஒலித்தது.



விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

வலியை அதி வேகமாக வெளியேற்ற

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

இப்பொழுது முதன்முதலாக இந்தியாவில் வழங்கப்படுகிறது

[illegible]

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்





[illegible]

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதிவேகமான வலிநிவாரணியாகும்.





புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்துவிடுகிறது

நிக்கோலஸ் தயாரிப்பு

அவனுக்குத்தானே போனஸ் வந்தது! அவன் சம்பாதிக்கிறதை அவனுடைய விருப்பம் போல் செலவு செய்து கொண்டதில் தவறு என்ன? தவறு இருக்கிறது என்றே அவனுக்குத் தோன்றியது. போனஸ் பணத்தை அப்படியே அவனிடம் கொண்டுவந்துகொடுத்துவிட்டுத் தனக்குத் தேவையானதை அவள் அவனிடம் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டும் என்றே — அதுதான் நியாயம் என்றே—அவன் மனம் எண்ணியது. ஏனெனில் அதுதான் ஆண்மையின் இயல்பு. பெண்கள் வேலைக்குப் போய்ச் சம்பாதித்துக் கொண்டு வருவது என்பது சமீபத்தில் ஏற்பட்ட பழக்கம்தானே? இந்தச் சமீப காலப் பழக்கத்துக்குத் தக்கபடி தங்கள் மனத்தை இன்னும் ஆண்கள் மாற்றிக் கொள்ளவில்லை. அதனால் வருகிற சங்கடங்கள்தான் இவை. இதற்குப் பகபதியும் விலக்கல்லவே! அதனால் தான் அவன் வனஜாவைக் குற்றவாளியாகக் கருதினான்.

சரியான பதில்!

ஒரு சமயம் உருவில் சிறிய வக்கீல் ஒருவர் சாட்சியாகத் தோன்றினார், நீதிமன்றத்தில். எதிர்த்தரப்பு வக்கீல் கம்பீரமான வாட்ட சாட்டத் தோற்றமுடையவர். சாட்சியைக் கேட்டார் அவர்.

"உங்கள் தொழில்?"

"நான் ஒரு வக்கீல்."

"நீங்கள் வக்கீலா? நம்ப முடியவில்லையே! என் சட்டைப் பைக்குள் அடங்கிவிடுவீர்கள் போல் தோற்ற மளிக்கிறீர்களே!" என்றார் அவரை மட்டம் தட்டும் நோக்கத்துடன்.

"தாராளமாய் என்னை நீங்கள் சட்டைப் பைக்குள் அடக்கிக் கொள்ளலாம். அப்படிச் செய்தீர்களே யானால், உங்கள் தலையில் இதுவரை இருந்ததைவிட அதிகமான சட்டஞானம் அந்தச் சட்டைப் பைக்குள் இருக்கும்" என்று பதில் அளித்தார் சாட்சிக் கூண்டுக்குள் இருந்த வக்கீல்.

—எம். காந்தி



பெண்களுக்குச் சம்பாதிக்கிற உரிமையை மட்டும்தான் ஆண்கள் இப்போது வழங்கியிருக்கிறார்கள். அதைச் செலவு செய்கிற உரிமையையும் பெறுவதற்குப் பெண்ணினம் இன்னும் கொஞ்ச காலம் காத்திருக்கத்தான் வேண்டும். ஆணின் வருமானத்தையே தன்னுடையதாக்கிக் கொண்டு தன் விருப்பம் போல் செலவு செய்கிற பெண்களைப் பற்றி இங்கே எதுவும் சொல்லவில்லை. அது பெண்மைக்கே ஓர் இழிவாகும். சொல்வதெல்லாம் தன் சம்பாத்தியத்தைச் செலவு செய்கிற பெண்களைப் பற்றித்தான். அவர்களும் ஓர் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுத்தான் இருக்க வேண்டும். அது தெரியாதவர்களுக்கு அவஸ்தைதான். வனஜாவின் நிலையே இதற்குப் போதுமானதொரு சான்று.

* * *

"சித்தப்பா வந்துட்டா! சித்தப்பா வந்துட்டா!" என்று குழந்தைகள் உற்சாகமாக வரவேற்றனர் பகபதியை.

"வா, பகபதி! ஏன் தனியாக வந்திருக்கிறாய்? வனஜா வரவில்லையா?" என்று தம்பியை விசாரித்தான் அனந்தராமன்.

"வரவில்லை..." என்று அலட்சியமாகக் கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டான் பகபதி.

"வனஜாவுக்குப் போனஸ் வந்திருக்காமே?" என்றான் அனந்தராமன்.

"ஆமாம்!" சிறிதும் சுவாரஸ்யமின்றிப் பதிலளித்தான் பகபதி.

"ஒரு நூறு ரூபாய் இருந்தால் கொடேன் பகபதி. உன் மன்னி என்னைக் கழுகாய்க் கொத்தி எடுக்கிறாள். மூன்று மாதங்களாக வீடே நரகமாகிவிட்டது."

"மன்னி கொத்தி எடுக்கிறாளா? ஏன்? எதற்காக?" — ஆச்சரியம் தாங்காமல் கேட்டான் பகபதி.

"ஒன்றுமில்லையப்பா. மூன்று மாதங்களுக்கு முன் உன் மன்னியின் தம்பிக்குக் கல்யாணம் நடந்தது இல்லியா? அப்போது அவளுடைய அப்பா அவளுக்குப் புடவைக்காக நூறு ரூபாய் கொடுத்தாராம். நூறு ரூபாய்க்கு இந்தக் காலத்தில் நல்லதாகப் பட்டுப் புடவை எப்படிக் கிடைக்கும்? அதனால் இன்னும் கொஞ்சம் கூடப் போட்டு வாங்கித் தரும்படி என்னிடம் கேட்டாள். ஆகட்டும் என்று சொல்லிவைத்தேன். பெட்டியில் பணம் இருந்தால் சும்மா இருக்கிறதா? எடுத்துச் செலவழித்து விட்டேன். வந்தது ஆபத்து. இப்போது 'கொண்டா என் பணத்தை!' என்று பிடுங்கி எடுக்கிறாள். போயேன்! பெண்கள் நம் காசை எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துச் செலவழித்துக் கொள்ளலாம். நாம் ஏனென்று கேட்க முடியாது. ஆனால் அதே போல் அவர்களுடைய காசை நாம் எடுத்துச் செலவழித்து விட்டாலோ... போச்சு! இது எனக்கு முதல் அனுபவமப்பா. அதனால்தான் இப்படியாகி விட்டது...." உண்மையான வருத்தத் துடனேயே கூறினான் அனந்தராமன்.

திறந்த வாயைக்கூட மூடத் தோன்றாமல் உட்கார்ந்திருந்தான் பகபதி.

"நீங்களே சொல்லுங்கள் பகபதி! மனைவி மக்களுக்குச் செய்ய வேண்டியது ஆண்களின் கடமைதானே? அவருக்கு ஆயிரம் செலவுகள் இருக்கும். அதற்கு என் பணத்தைக் கேட்டால் எப்படி? அது எனக்கு என் பிறந்த வீட்டில் கொடுத்த பணம்..." என்றவாறே

அதை வாங்கிக் கொண்டவன், ''உனக்கு?'' என்று கேட்டான்.

''இதோ!'' என்று இடது கையைக் காட்டினாள் வனஜா. ''எனக்கும் தலைவலி மண்டையைப் பிளக்கிறது'' என்றவாறே காப்பியை எடுத்து ஆற்றத் தொடங்கினாள்.

இருவரும் காப்பி சாப்பிட்டானதும் எதையோ நினைத்துக் கொண்டவளாய் அவசரமாக எழுந்தாள். கணவனருகில் வந்து அதை அவனிடம் கொடுத்து விட்டு ''நமஸ்காரம் செய்கிறேன்'' என்று கூறிப் பணிவன்புடன் பணிந்து எழுந்தாள். முகம் நிறைந்த மகிழ்ச்சியுடன் கணவனை நோக்கினாள். ''போனஸ் வந்தது. மூன்று மாதம். அதில் இருநூறு ரூபாய் நான் எடுத்துக் கொண்டேன். பாக்கி ஐந்நூற்றைம்பது ரூபாய் கவரில் இருக்கிறது'' என்றாள்.

''இருநூறு ரூபாய்க்கு என்ன வாங்கினாய்?'' ஆச்சரியத்துடன் கேட்டான் பசுபதி.

''பாருங்களேன்...'' என்றவாறே தான் வாங்கி வந்திருந்த காகிதக் கவர்களை உடைத்து ஒவ்வொன்றாக அவன் கையில் வைத்தாள். ''உங்களுக்கு 'பாண்ட்' எல்லாம் காலாவதியாகிவிட்டதே என்று நான்கு 'பாண்ட்'டுக்குத் துணி வாங்கினேன். சொக்காக்குப் பஞ்சமில்லை. நிறைய இருக்கிறதே என்று ஒரு டெரிலின் சொக்காக்கு மட்டும் துணி வாங்கினேன். உங்களுக்கு இந்தக் கலர்தானே இஷ்டம்? அதனால் இதை எடுத்தேன். நான்கு பனியன்கள். எனக்கு இரண்டு நூல் புடவை, இரண்டு சோளி பீஸ்'' என்று நிறுத்தினாள் வனஜா.

''அந்தப் பையில்?'' மேஜை மீதிருந்த பிளாஸ்டிக் பையைச் சுட்டிக் காட்டினான் பசுபதி.

''ஷாப்பிங் சாமான்கள்...'' என்று அதனுள் இருந்ததையும் எடுத்து வெளியே பரப்பினாள். அதிலும் அவனுக்குத் தேவையான 'ஷேவிங் சோப்' 'பிளேட் பாக்கெட்' 'க்ரீம்' ஆகியவைகள்தான் இருந்தன.

''எல்லா வீட்டிலும் கணவன் மனைவிக்கு எல்லாம் வாங்கித் தருவது வழக்கம். நம் வீட்டிலோ மனைவி கணவனுக்கு வாங்கித் தருகிறாய். அவ்வளவுதான் வித்தியாசம். சரி, எல்லாவற்றையும் எடுத்து வை பீரோவில்...'' என்று கூறிவிட்டுச் செய்தித் தாளைக் கையில் எடுத்துக் கொண்டான் பசுபதி. அவன் பேச்சில் ஊடுருவி நின்றது குற்றம் சாட்டுகிற பாவம்.

அதை அவளும் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...?'' என்றாள் தவிப்புடன்.

''ஒன்றுமில்லை...'' அவன் செய்தித் தாளிலிருந்து முகத்தை விலக்கவில்லை.

''போனஸ் வந்ததற்காக உங்களுக்கு ஏதாவது வாங்க வேண்டும் போல் ஆசையாக இருந்தது. உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவதற்காக முன்னால் சொல்லாமல் வாங்கிவிட்டேன் நானாகவே. இது தவறுதான். என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் இப்படி நடக்காது...'' கலங்கிய குரலில் குழைவாகக் கூறினாள் வனஜா.

''என் அண்ணாவின் குடும்பத்தைப் போல்தான் என் குடும்பமும் இருக்கும் என்று எண்ணிவிட்டேன். மன்னி மாதிரி நீயும் நடந்து கொள்வாய் என்று நான் எப்படி எதிர்பார்க்க முடியும்? அவள் பாவம், அண்ணாவின் ஆதரவில் வாழ்கிறவள். நீ சம்பாதிக்கிறவளாயிற்றே!'' நிஷ்டூரமாகக் கூறினான் பசுபதி.

''நீங்கள் இப்படித் தவறாக எடுத்துக் கொள்வீர்கள் என்று தெரிந்திருந்தால்



உரிமையின் வரம்பு

கே. ஜெயலக்ஷ்மி

வாங்கி வந்திருக்கவே மாட்டேன். வாங்கியாயிற்று: இனி என்ன செய்வது...'' வருந்தியவளாய் எல்லாவற்றையும் அள்ளிப் பீரோவில் போட்டுப் பூட்டினாள். பிறகு சமையலைக் கவனிக்கச் சமையலறைக்குள் சென்றாள். அவள் ஆசையாக எதிர்பார்த்து வந்ததென்ன? இப்போது நடந்ததென்ன? இதுதான் தாம்பத்தியமா? அவளுக்குப் புரியவே யில்லை. மணமாகி ஒரு வருஷம் தானே ஆகிறது! அதனால்தான் இந்தப் பரிதவிப்பு.

ஃ ஃ ஃ

விளையாட்டுப் போல் ஒரு வாரம் ஓடி விட்டது. பழைய உற்சாகம் இன்னமும் அந்த வீட்டில் ஏற்படவில்லை. இயந்திரம் போல் இருவரும் ஏதோ தத்தம் கடமையைச் செய்து கொண்டிருந்தார்களே தவிர இதற்கு முன் இருந்த நெருக்கமோ, வேடிக்கை விளையாட்டுக்களோ கொஞ்சமும் கிடையாது. அதுவும் வனஜாவாக ஏதேனும் அவனிடம் இரண்டொரு வார்த்தைகள் பேசினால்தான் உண்டு. பகபதி அவளிடம் வந்து பேசுவதேயில்லை.

'நாம் அப்படி என்னதான் பெரிய தவறு செய்து விட்டோம்?' என்று தெரியாமல் உள்ளூரக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள் வனஜா.

அன்று ஞாயிற்றுக் கிழமையாக இருந்ததால், ''இன்று துணிகளை யெல்லாம் தைக்கக் கொடுத்து விடுங்களேன்...'' என்று கூறினாள் வனஜா பகபதியிடம்.

''ஆகட்டும்'' என்று மொட்டையாகப் பதிலளித்து விட்டு எங்கேயோ வெளியே சென்றுவிட்டான் பகபதி.

வனஜா மட்டும் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தாள் தனியாக. மணமான பிறகு அவளுக்கு ஏற்பட்ட முதல் அனுபவம் இது. அதுவும் கசப்பான அநுபவம்.

ஃ ஃ ஃ

மயிலாப்பூரில் இருந்த தன் அண்ணனின் வீட்டுக்குப் போகக் கருதி, பஸ் ஸ்டாண்டில் வந்து நின்றான் பகபதி. அவனுக்கும் எப்படியோதான் இருந்தது. மணமான பிறகு தனியாக இப்படி வெளியே கிளம்பியது இதுதானே முதல் தடவை! அப்படி ஒன்றும் அவனுக்கு வனஜாவின் மீது பெரிய கோபம் இல்லை. குறை என்று வேண்டுமானால் சொல்லலாமோ? எதுவாக இருந்தால் என்ன? கூடி வாழ்ந்த மாடப் புறாக்கள் இன்று விலகி வாழ்கிற அளவுக்குப் பிணக்கு விரிந்து விட்டது. அது போதாதா? வீடு விட்டு வீடோ, ஊர் விட்டு ஊரோ போனால்தான் வேறுபட்டு விட்டதாக அர்த்தமா? ஒரே வீட்டில் இருந்தாலும் உள்ளம் வேறுபட்டு விட்டால் அது பிரிந்த மாதிரிதானே? இந்த மனப் பிரிவுக்கு யார் பொறுப்பாளி? அவனுக்கு, தவறு வனஜாவினுடையது என்றுதான் தோன்றியது. மனித சுபாவமே அப்படித்தானே? தன் தவற்றை உணர்ந்து விட்டால் பிரிவுக்கு உலகில் இடமிருக்காதே!

பகபதி கல்யாணம் செய்து கொள்வதற்கு முன்பு தன் அண்ணன் அனந்தராமனுடன்தான் இருந்து வந்தான். அனந்தராமனுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டுத்தான் அவன் பெற்றோர்கள் ஒருவர் பின் ஒருவராக இறைவனடி சேர்ந்தார்கள். அதுமுதல் பகபதி அண்ணனின் குடும்பத்தோடு ஒன்றி விட வேண்டியதுதானே முறை? அப்படியே இருந்து விட்டான். அதனால் அவனுக்கு அண்ணனின் குடும்ப விஷயமெல்லாம் நன்றாகத் தெரியும். ஒரு கணவனின் இயல்பு—ஒரு மனைவியின் மனோபாவம் ஆகியவைகளைப் பற்றி அவன் ஓரளவுக்குப் புரிந்து கொண்டிருந்தான்.

அவன் மன்னி அகிலா ஒவ்வொரு சின்ன விஷயத்துக்கும் தன் கணவனின் கையையே எதிர்பார்த்திருப்பாள். 'இன்றைக்கு வெள்ளிக் கிழமை. பூவாங்க வேண்டும். எட்டணா கொடுத்துவிட்டுப் போங்கோ' என்பது முதல் ''எனக்கொரு 'புல்வாயில்' புடவை வாங்கித் தாருங்களேன்'' என்பது வரையில் ஒவ்வொன்றையும் அவள் தன் கணவனிடம் கேட்டுத்தான் பெற்றுக் கொள்வாள். அது அப்படி ஒன்றும் எளிதில் கிடைத்தும் விடாது. பல நாள் கேட்ட பிறகு கேட்டது கிடைத்தால் அவள் அடைகிற ஆனந்தம் உண்டே, மிகவும் ரசிக்கக்குரிய காட்சிதான் அது!

''இத்தகைய குணங்களையே ஒரு மனைவியின் லட்சணங்களாக நினைத்திருந்த பகபதிக்குத் தன் மனைவி வனஜாவின் சுபாவம் மிகவும் வியப்பைத் தந்ததில் ஆச்சரியமென்ன இருக்கிறது! தனக்குத் தேவையானதைக் கணவனிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுகிற மன்னி எங்கே, கணவனுக்குத் தேவையானதையும் தானே வாங்கிவந்து விடுகிற வனஜா எங்கே? முன்னதில் பெண்மையின் அடக்கம் சுடர் விடுகிறது. பின்னதில் சம்பாதிக்கிற அகம்பாவம் பளிச்சிடுகிறதோ...?

மன்னி முதலிலேயே சொன்னாள். ''பகபதி! நான் சொல்கிறேனே என்று தப்பாக எண்ணிக் கொள்ளாதீர்கள். வனஜா கண்ணுக்கு அழகாகத்தான் இருக்கிறாள். பாட்டு, படிப்பு எல்லாமும்தான் இருக்கிறது. ஆனால் வேலைக்குப் போகிறவளாச்சே! அதைப் பற்றியும் யோசித்துப் பார்த்தீர்களா?''

''யோசிக்காமலென்ன மன்னி? இருவரின் சம்பாத்தியமும் சேர்ந்தால் தரித்திரப் படாமல், தாராளமாக இருக்கலாமே!'' என்றான் பகபதி அப்போது.

''காசு விஷயத்தில் தாராளமாக இருக்க முடியும் என்பது உண்மைதான். ஆனால் அதற்காக நீங்கள் பல சௌகரியங்களை அனுபவிக்க முடியாமல் போகுமே! உங்களைப் போல் அவளும் வேலைக்குப் போவாள்; திரும்பி வருவாள்....''

''பரட்டுமே மன்னி! வீட்டு வேலையை இருவருமே பகிர்ந்து கொண்டால் போகிறது'' இப்படி யெல்லாம் 'டக் டக்' என்று பதில் சொல்லி விட்டுத்தான் அவன் வனஜாவை மணந்து கொண்டான். இருந்தும் இப்போது அவன் குணங்களில், செயல்களில் குற்றம் காண்கிறான். இது ஏன்?

சரியான பதில்!



ஒரு சமயம் உருவில் சிறிய வக்கீல் ஒருவர் சாட்சியாகத் தோன்றினார், நீதிமன்றத்தில். எதிர்த்தரப்பு வக்கீல் கம்பீரமான வாட்ட சாட்டத் தோற்றமுடையவர். சாட்சியைக் கேட்டார் அவர்.

''உங்கள் தொழில்?''

''நான் ஒரு வக்கீல்.''

''நீங்கள் வக்கீலா? நம்ப முடிய வில்லையே! என் சட்டைப் பைக்குள் அடங்கிவிடுவீர்கள் போல் தோற்ற மளிக்கிறீர்களே!'' என்றார் அவரை மட்டம் தட்டும் நோக்கத்துடன்.

''தாராளமாய் என்னை நீங்கள் சட்டைப் பைக்குள் அடக்கிக் கொள்ளலாம். அப்படிச் செய்தீர்களே யானால், உங்கள் தலையில் இதுவரை இருந்ததைவிட அதிகமான சட்ட ஞானம் அந்தச் சட்டைப் பைக்குள் இருக்கும்'' என்று பதில் அளித்தார் சாட்சிக் கூண்டுக்குள் இருந்த வக்கீல்.

—எம். காந்தி

அவனுக்குத்தானே போனஸ் வந்தது! அவன் சம்பாதிக்கிறதை அவனு டைய விருப்பம் போல் செலவு செய்து கொண் டதில் தவறு என்ன? தவறு இருக்கிறது என்றே அவனுக்குத் தோன்றி யது. போனஸ் பணத்தை அப்படியே அவளிடம் கொண்டுவந்துகொடுத்து விட்டுத் தனக்குத் தேவையானதை அவன் அவளிடம் கேட்டு வாங் கிக் கொள்ள வேண்டும் என்றே — அதுதான் நியாயம் என்றே—அவன் மனம் எண்ணியது. ஏனெனில் அதுதான் ஆண்மையின் இயல்பு. பெண்கள் வேலைக்குப் போய்ச் சம்பாதித்துக் கொண்டு வருவது என் பது சமீபத்தில் ஏற் பட்ட பழக்கம்தானே? இந்தச் சமீப காலப் பழக்கத்துக்குத் தக்கபடி தங்கள் மனத்தை இன்னும் ஆண்கள் மாற்றிக் கொள்ளவில்லை. அதனால் வருகிற சங்கடங்கள்தான் இவை. இதற்குப் பகபதி யும் விலக்கல்லவே! அதனால் தான் அவன் வனஜாவைக் குற்றவாளியாகக் கருதினான்.

பெண்களுக்குச் சம்பாதிக்கிற உரிமையை மட்டும்தான் ஆண்கள் இப்போது வழங்கி யிருக்கிறார்கள். அதைச் செலவு செய்கிற உரிமையையும் பெறுவதற்குப் பெண்ணினம் இன்னும் கொஞ்ச காலம் காத்திருக்கத்தான் வேண்டும். ஆணின் வருமானத்தையே தன் னுடையதாக்கிக் கொண்டு தன் விருப்பம் போல் செலவு செய்கிற பெண்களைப் பற்றி இங்கே எதுவும் சொல்லவில்லை. அது பெண் மைக்கே ஓர் இழிவாகும். சொல்வதெல்லாம் தன் சம்பாத்தியத்தைச் செலவு செய்கிற பெண்களைப் பற்றித்தான். அவர்களும் ஓர் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுத்தான் இருக்க வேண்டும். அது தெரியாதவர்களுக்கு அவன் தைதான். வனஜாவின் நிலையே இதற்குப் போதுமானதொரு சான்று.

க் க் க்

''சித்தப்பா வந்துட்டா! சித்தப்பா வந் துட்டா!'' என்று குழந்தைகள் உற்சாகமாக வரவேற்றனர் பகபதியை.

''வா, பகபதி! ஏன் தனியாக வந்திருக் கிறாய்? வனஜா வரவில்லையா?'' என்று தம்பியை விசாரித்தான் அனந்தராமன்.

''வரவில்லை...'' என்று அலட்சியமாகக் கூறிவிட்டு உட்கார்ந்து கொண்டான் பகபதி.

''வனஜாவுக்குப் போனஸ் வந்திருக் காமே?'' என்றான் அனந்தராமன்.

''ஆமாம்!'' சிறிதும் சுவாரஸ்யமின்றிப் பதிலளித்தான் பகபதி.

''ஒரு நூறு ரூபாய் இருந்தால் கொடேன் பகபதி. உன் மன்னி என்னைக் கழுகாய்க் கொத்தி எடுக்கிறாள். மூன்று மாதங்களாக வீடே நரகமாகிவிட்டது.''

''மன்னி கொத்தி யெடுக்கிறாளா? ஏன்? எதற்காக?'' — ஆச்சரியம் தாங்காமல் கேட் டான் பகபதி.

''ஒன்றுமில்லையப்பா. மூன்று மாதங் களுக்கு முன் உன் மன்னியின் தம்பிக்குக் கல்யாணம் நடந்தது இல்லியா? அப்போது அவனுடைய அப்பா அவளுக்குப் புடவைக் காக நூறு ரூபாய் கொடுத்தாராம். நூறு ரூபாய்க்கு இந்தக் காலத்தில் நல்லதாகப் பட்டுப் புடவை எப்படிக் கிடைக்கும்? அத னால் இன்னும் கொஞ்சம் கூடப் போட்டு வாங்கித் தரும்படி என்னிடம் கேட்டாள். ஆகட்டும் என்று சொல்லிவைத்தேன். பெட்டி யில் பணம் இருந்தால் சும்மா இருக்கிறதா? எடுத்துச் செலவழித்து விட்டேன். வந்தது ஆபத்து. இப்போது 'கொண்டா என் பணத்தை!' என்று பிடுங்கி யெடுக்கிறாள். போயேன்! பெண்கள் நம் காசை எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துச் செலவழித்துக் கொள்ளலாம். நாம் ஏனென்று கேட்க முடி யாது. ஆனால் அதே போல் அவர்களுடைய காசை நாம் எடுத்துச் செலவழித்து விட் டாலோ... போச்சு! இது எனக்கு முதல் அனுபவமப்பா. அதனால்தான் இப்படியாகி விட்டது....'' உண்மையான வருத்தத் துடனேயே கூறினான் அனந்தராமன்.

இறந்த வாயைக்கூட மூடத் தோன்றாமல் உட்கார்ந்திருந்தான் பகபதி.

''நீங்களே சொல்லுங்கள் பகபதி! மனைவி மக்களுக்குச் செய்ய வேண்டியது ஆண்களின் கடமைதானே? அவருக்கு ஆயிரம் செலவுகள் இருக்கும். அதற்கு என் பணத்தைக் கேட் டால் எப்படி? அது எனக்கு என் பிறந்த வீட்டில் கொடுத்த பணம்...'' என்றவாறே

அங்கு வந்து நின்றாள் அனந்தராமனின் மனைவி, பகபதியின் மன்னி.

ஒன்றும் புரியாமல் விழித்தான் பகபதி.

"உன்னால் நூறுரூபாய் கொடுக்க முடியுமா, முடியாதா பகபதி? முதலில் நான் கேட்டதற்குப் பதில் சொல்லு" என்று கேட்டான் அனந்தராமன்.

"போனஸ் வந்திருப்பது வனஜாவுக்கு. இவரைக் கேட்டால்...?" குறுக்கே புகுந்தாள் பகபதியின் மன்னி.

"நீ பேசாமல் இரு. வனஜா ஒன்றும் உன்னைப் போல் இல்லை. உனக்கு என்னமோ அதிசயத்திலும் அதிசயமாக நூறு ரூபாய் கிடைத்து விட்டது. காணாததைக் கண்டது மாதிரி 'என் பணம்', 'என் பணம்' என்று குதிக்கிறாய். வனஜா அப்படி இல்லை. அவளுக்கு ஒவ்வொரு மாதமும்தான் மூந்நூறு ரூபாய் வருகிறது. அவள் இப்படித்தான் உன்னைப் போல் எதற்கெடுத்தாலும் 'என் பணம்' 'என் பணம்' என்று குதிக்கிறாளா என்று இவளிடம் கேட்டுப் பாரேன்! சொல்லுடா, பகபதி!" என்றான் அனந்தராமன்.

பகபதியின் அகக் கண்களில் போனஸ் வந்த அன்று நடந்தவை அனைத்தும் திரைப் படம் போல் விரிந்தன.

தனக்கு போனஸ் வந்த சந்தோஷத்தைக் கொண்டாட என்னைக் கணவனுக்குப் பரிசுப் பொருள்களை ஆசை ஆசையாக வாங்கி வந்திருந்த வனஜாவின் செயலில் நாம் தப்புக் கண்டுபிடித்தோமே! ஓர் ஆண் தனக்கு போனஸ் வந்தால் மனைவிக்கு ஆசையாக பரிசுப் பொருள் வாங்கிக் கொடுப்பதைப் போலத்தானே வனஜாவும் எனக்கு எல்லாம் வாங்கி வந்திருக்கிறாள்! சம்பாதிக்க உரிமை உள்ளவளுக்கு அதில் கொஞ்சம் செலவழிக்கவும் உரிமை இல்லையா? எனக்கு ஏன் இது தெரியாமல் போய் விட்டது? உள்ளுக்குள்ளேயே மறுகினான் பகபதி.

'எதற்கெடுத்தாலும் கணவனின் கையை எதிர்பார்க்கிறவள்' என்று மன்னியைப் பற்றி உயர்வாக எண்ணினோமே! தன்னுடையது என்று எதுவும் இல்லாதபோது பணிந்து வாழ்வதும், தன்னுடையது என்று கொஞ்சம் கிடைத்துவிட்டால்கூடத் துள்ளிக் குதிப்பதுமா உயர்வு? தன்னுடையது என்று எதுவும் இல்லாதபோது ஒரு மனைவி கணவனிடம் அடங்கி அவனுக்காக அமைதியாக வாழ்வதில் ஆச்சரியமெதுவும் இல்லை. தன்னுடையது என்று நிறைய இருந்தும் ஒரு மனைவி தன் கணவனிடம் அடங்கி — அமைதியாக — அவனுக்காக வாழ்வதில்தான் சிறப்பு இருக்கிறது. அந்தச் சிறப்பு மன்னியிடம் இல்லை. வனஜாவிடம்...? மன்னியை விட வனஜா உயர்ந்தவள்தான். அது இப்போதுதான் தெரிகிறது.' சிந்தனையிலிருந்து விடுபடத் தெரியாமல் தவித்தான் பகபதி.

"என்னடா பதிலையே காணோம்?" என்று அதட்டினான் அனந்தராமன்.

"பணம்தானே? நாளைக்குக் கொண்டு வந்து தருகிறேன்..." என்று கூறினான் பகபதி.

"என்னால் எப்போது முடியுமோ அப்போதுதான் திருப்பிக் கொடுப்பேன். நடுவில் உன் மன்னி மாதிரி என்னைப் பிடுங்கி எடுக்கக் கூடாது. தெரிகிறதா?"

"நீ பணத்தைத் திருப்பியே கொடுக்க வேண்டாம் அண்ணா. கவலைப்படாதே!" என்றான் பகபதி.

"பார்த்துக்கோ! அவன் கொடுத்து வைத்தவன்" என்றான் அனந்தராமன்.

ஃ ஃ ஃ

'நீ பணத்தைத் திருப்பியே கொடுக்க வேண்டாம்' என்று சொல்லி விட்டு வந்து விட்டோமே! பணம் வனஜாவினுடையது அல்லவா? அவள் அதற்குச் சம்மதிப்பாளோ மாட்டாளோ...' என்று கலங்கியவாறே வீட்டினுள் நுழைந்தான் பகபதி.

உள்ளே ஏதோ பேச்சுக் குரல் கேட்கவே சற்று நின்றான்.

"போனஸ் பணத்தை என்ன செய்தாய் வனஜா?" — இது அவளுடைய தாய்.

"என் மைத்துனரும் ஓரகத்தியும் என் கணவருக்காக எவ்வளவோ சிரமப்பட்டிருக்கிறார்கள். பாவம். ஓரகத்திக்கு ஒரு நல்ல பட்டுப் புடவையும், மைத்துனருக்கு வேஷ்டியும், குழந்தைகளுக்குத் துணிகளும் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று எனக்கு ஆசை. இன்னும் அவரிடம் கேட்கவில்லை. அவருக்கு ஆபீஸுக்குப் போட்டுக் கொண்டு போகவே 'பாண்ட்' இல்லை. கொஞ்சம் அதற்காகத் துணிகள் வாங்கினேன்.... பாக்கி அப்படியே தானிருக்கிறது" என்றாள் வனஜா.

"இதோ பார் வனஜா! வேலைக்குப் போய்ச் சம்பாதிக்கிற பெண்களுக்கு ஒரு கஷ்டம் இருக்கிறது. நீ நம்ம வீட்டில் இருந்தால் உன் விருப்பம் போல் யாருக்கு வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் வாங்கி வருவாய் அல்லவா? அதே மாதிரி இப்போதும் நீ உன் விருப்பப்படியே எதையும் செய்து விடக் கூடாது. எதைச் செய்தாலும் உன் கணவனிடம் கேட்டுக் கொண்டுதான் செய்ய வேண்டும். என்னைக் கேட்டால் எதையுமே நீயாகச் செய்யாமல் அவரைச் செய்ய விட்டு விட்டு ஒதுங்கி இருப்பதுதான் உனக்கு நல்லது. பெருமையும் கூட. ஏனென்றால் ஆண்கள் எதுவும் தங்கள் கைக்குள் இருப்பதைத்தான் விரும்புவார்கள். இதை மட்டும் மறந்து விடாதே!"

"இதுதானம்மா முதலிலேயே எனக்குத் தெரியாமல் போய்விட்டது...." இதைச் சொல்லும்போதே வனஜாவுக்கு அழுகை வந்து விட்டது. பேதை விம்மி விசித்து விட்டாள்.

இதைக் கேட்டதும் வெளியே நின்று கொண்டிருந்த பகபதியின் நெஞ்சம் பாகாய்க் கனிந்து விட்டது. அதன் விளைவு...?

"வனஜா!" என்று அழைத்தவாறு ஆசையாக உள்ளே நுழைந்தான்.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி